بسم الله الرحمن الرحيم

الإسلام

மாலை 1	இஸ்லாம்	முத்து 1
1346 ஹிஜ்ரி முஹர்ரம்மீ		1927ஸு ஜுலை மாதம்

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளியனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

"சீரா புராணம்"

நமது நோக்கம்.

அன்பாளனும் அருளாளனுமாகிய அல்லாஹுத் தஅலாவின் ரஹ்மத்தும் கிருபையும் இருந்தாலன்றி இப்பூவுலகின்கண் மானிட முயற்சியாலும் பிரயத்தனத்தாலும் எக்காரியமும் நடைபெறுவது கிடையாது. எல்லாம் வல்ல நாயன் உத்தரவின் பிரகாரம் நடக்கும் ஒவ்வொரு காரியமும் மானிடவர்க்கத்தின் நன்மைக்காகவே ஏற்படுகின்றன வென்ற கொள்கையில் எனக்கு பலத்த நம்பிக்கை யுண்டு. இதுவரையில் எனக்கு என்னுடைய வாழ் நாளில் நடந்தேறிய ஒவ்வொரு சம்பவத்தினுடையவும் உண்மையையும் உட்கருத்தையும் அந்தந்தச் சம்பவம் நேர்ந்த காலத்து நானறிந்து கொள்ளக்கூடாமற் போயிற்றாயினும் அச்சம்பவங்கள் நேர்ந்த பல நாட்களுக்கு பின்னரேனும் எனக்கு நேர்ந்துள்ள சம்பவங்களின் நன்மைகளையும் பலன்களையும் நான் அறிந்துக்கொள்ளக் கூடியவாறு அல்லாஹுத்தஅலா எனக்கு அருள்புரிந்துள்ளான்.

சஞ்சிகை தோன்றிய வரலாறு.

விக்கிரக ஆராதனைசெய்து முப்பத்தி மூன்று கோடி தெய்வங்களை வணங்கும் இந்து மதத்தில் பிறந்த நான் கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவியபோது சத்தியதீனாகிய பரிசுத்த இஸ்லாமை தழுவும்படி அல்லாஹுத்த ஆலா எனக்கருள் புரிவானென்று இந்து மார்க்கத்தில் இருந்த போதாயினும் கிறிஸ்த மார்க்கத்திலிருந்த போதாயினும் நான் கனவிலும் நினைத்தது கிடையாது. பரிசுத்த இஸ்லாமை நான் தழுவியபின் சென்ற எட்டு வருஷங்களாக என்னால் இயன்ற அளவில் சிறு தொண்டை நான் செய்து வருவதை தமிழ்நாடு நன்கறியும். என்னுடைய பிரசாரத்தின் காரணமாக—581 பேர்கள் இதரமார்க்கங்களிலிருந்து இஸ்லாத்தை அல்லாஹ்வின் கிருபையால் தழுவது சாத்தியமாக இருந்ததுமன்றி முஸ்லிம்கள் வயிற்றில் பிறந்தும் இஸ்லாமென்பது இன்னதென்றறியாமல் பெயருக்கு மாத்திரம் முஸ்லிம்களாக இருந்த பலர் இஸ்லாம் இன்னதென்பதை யறிந்து ஏவல் விலக்கள்களை உணர்ந்து சத்திய இஸ்லாத்தில் ஒழுகிவருகிறார்கள். எல்லாம் வல்ல நாயன் பரிசுத்ததீனில் என்னைச் சேர்த்ததன்றி என் மூல்யமாக இன்னும் பலரும் சேர்வதற்கு நான் கருவியாக உபயோகப்படும்படி ஹக்சுஹானத்தஆலா அருள்புரிந்துள்ளதற்கு அவன்

வழியில் ஊழியம் செய்து அவனது ஊழியத்தில் இறப்பதை விட என்ரஹ்மானுக்கு வேறெவ்விதத்தில் நான் பிரதி செய்துகாட்ட முடியும்? தமிழ்நாட்டு முஸ்லிம் சகோதரர்கட்கு பயன் படத்தக்கதான சஞ்சிகை யொன்றை பிரசுரஞ் செய்யும்படியாக என் சகோதரர்கள் பலர் பற்பல சமயங்களில் என்னை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதுண்டு. தமிழ் நாட்டிற்கு தற்காலமிருந்து வரும் முஸ்லிம் சஞ்சிகைகள் நம் தமிழ்நாட்டு முஸ்லிம்களின் தேவைக்கு போதுமானவை இல்லை என்பதை நான் அறிவேனுயினும் இருக்கும் சிற்சில சஞ்சிகைகள்கூட போதுமான ஆதரவு இல்லாமல் குற்றுயிருகக் கிடந்து புரளுவதை நானறியாமலில்லை. இந்நிலமையில் சஞ்சிகை ஸ்த்தாபிக்கும்படி என்னை வற்புறுத்திய நண்பர்களின் கூக்குரல் அதிகமாயிற்று. அவர்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்கியும் சஞ்சிகை பிரசுரத்தால் நான் செய்யக் கூடிய சிறுத்தொண்டின் காரணமாக உலகிற்கு ஏதேனும் நன்மை ஏற்படக் கூடுமென்றெண்ணியும் இச்சிறுத்தொண்டை செய்யத் துணிந்தேன். தமிழ் நாடும் முஸ்லிம் சகோதரர்களும் என்னுடைய நல்லெண்ணத்தைப் பாராட்டி எனக்கிது வரையில் காட்டி வந்திருக்கும் அன்பையும் ஆதரவையும் என் சிறுக்குழவியாகிய என் சஞ்சிகையின்பாலும் காட்டி அதை அன்புடன் வரவேற்று ஆதரித்துவருவார்களென்று நான் நம்புகின்றேன்.

சஞ்சிகையை ஆரம்பித்து நடத்தும்வேலையில் திரவியக்கஷ்டமும் திரேகக்கஷ்டமும் எவ்வளவென்பதை நான் நன்கறிவேன். ஆயினும் அல்லாஹ்வின் பாதையில் அவனுடைய ஊழியத்திற்காக செய்யப்படும் எக்காரியத்திலும் எவ்வித கஷ்டமும் சிரமமும் தோற்றுது என்ற துணிபுடனும், ஆரம்பித்த காரியத்தை செவ்வனே முடித்துவைப்பதற்கு கிருபா கடாட்சமாகிய என்னுடைய ரஹ்மான் எனக்கு வேண்டிய பலத்தையும் தைரியத்தையும் கொடுத்துதவுவானென்கிற துணிபுடனும் இச்சிறுத்தொண்டை நான் ஆரம்பித்திருக்கின்றேன்.

சஞ்சிகை என்னுடையதல்ல.

நான் மேலே கூறியுள்ள பிரகாரம் இச்சஞ்சிகை அல்லாஹ்வின் நேர்வழிக்கான தொண்டை நிறைவேற்றிவைப்பதற்காகவே ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் இச்சஞ்சிகை என்னுடையதல்ல. அல்லாஹ் சுபுஹானத்த ஆலாமீதும் அவனுடைய ரஸூலாகிய நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல்சல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மீதும் ஈமான் கொண்டு சத்திய இஸ்லாத்தின் அஹலெசுன்னத் வல் ஜமா அத்தின்கொள்கையைப் பின்பற்றிநடக்கும் முஸ்லிம்கள் எல்

லோருடையவும் சஞ்சிகையாகும். இச்சஞ்சிகை எனதன்பார்ந்த முஸ்லிம் சகோதரர்கள் சிலர் கொடுத்துதவிய நன்கொடைகளைக்கொண்டே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (நன்கொடை கொடுத்துதவிய சகோதரர்களின் பெயரும் அவர்கள் கொடுத்த தொகையும் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.) இச்சஞ்சிகை இனி முஸ்லிம் சகோதரர்களினுடையவும் முஸ்லிம்களின் நற்காரியங்களில் அன்பு கொண்ட இதரமத சகோதரர்களினுடையவும் ஆதரவின் பேரிலேயே நடைபெறவேண்டி இருக்கிறதென்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இச்சஞ்சிகை வெற்றிபெற்றால் முஸ்லிம்களெல்லோருடையவும் வெற்றியே யொழிய என்னுடையதொன்றுமல்ல வென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எடிடோரியல் போர்டு

சஞ்சிகையை நடத்துவதற்கான பணப்பொறுப்பை சகோதரர் பலர் கொடுத்துதவினாலும் சஞ்சிகை நடத்துவதற்கு தகுந்த ஆற்றல் என்னிடம் கிடையாதென்பதை நானறிவேன். தவிர சஞ்சிகையே என்னுடையதல்லவென்றும் முஸ்லிம் சகோதரர்கள் எல்லோருடையது என்றும் சொல்லிக்கொண்டு நான் தனியாக நடத்தி வந்தால் அது நீதியாகாதென்பதையும் நானறிவேன். இதற்காகவென்றே கூடிய சீக்கிரத்தில் சஞ்சிகைக்கு வேண்டிய ஆரம்ப ஏற்பாடுகளை யெல்லாம் செய்துமுடித்துக் கொண்டு "எடிடோரியல் போர்டு" ஒன்று நியமித்து அவர்களுடைய மேற்பார்வையிலும் ஆதிக்கத்திலும் சஞ்சிகையை வைக்க எண்ணியுள்ளேன். இந்த போர்ட்டில் ஐந்து மெம்பர்கள் (என்னைத் தவிர நான்கு பேர்) இருப்பார்கள். இந் நான்கு பேர்களில் இரண்டுபேர் என்னால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். மற்ற இரண்டுபேர் நன்கொடை கொடுத்துதவும் சகோதரர்களின் ஓட்டுக்களின்மேல் தெரிந்தெடுக்கப்படுவாகள். எடிடோரியல் போர்ட் சம்பந்தமான விதிகளும் சட்டதிட்டங்களும் முதல் முதலாகக் கூடும் போர்டாரால் தயார்செய்து கொள்ளப்பட்டு பின்னர் அப்போதைக் கப்போது அவசியங்களுக் கேற்றவாறு திருத்தங்களும் மாறுதல்களும் செய்துக் கொள்ளப்படும்.

சஞ்சிகையின் நோக்கம்

இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கையாகிய "இஷ்ஹாத்தே இஸ்லாம்" இச்சஞ்சிகையின் முதற் நோக்கமாதலால் இச் சஞ்சிகையை முஸ்லிமல்லாத சகோதரர்கட்கும் எல்லா மதமாணவர்கட்கும் குறைந்த சந்தாவிற்கு கொடுக்க எண்ணியுள்ளேன். ஆத

லால் முஸ்லிம் சகோதரர்கள் ஒவ்வொருவரும் சந்தாதார்களாகச் சேர்ந்தும் பந்துமித்திரர்களை சந்தாதார்களாகச் சேரவைத்தும் சஞ்சிகையை ஆதரித்தருவார்களென்றும் நன்கொடை கொடுத்து உதவி புரிவார்களென்றும் நான் நம்புகின்றேன்.

இச்சஞ்சிகையின் நோக்கம் இன்னதென்பது மேலே கூறியுள்ளவைகளால் நன்கு வெளியாகும். இச்சஞ்சிகையை பிரசுரஞ்செய்வதற்கு அனுமதிகோரி சென்னைநகர் இரண்டாவது பிரசிடன்சி மாஜிஸ்ரேட் அவர்களுக்கு நான் செய்துகொண்ட விண்ணப்பத்தில் சஞ்சிகையின் நோக்கம் பின்வருமாறு என்பதாகக் கண்டிருக்கின்றேன்.

“இஸ்லாமிய கொள்கையையும் இஸ்லாமிய சகோதரத்துவத்தையும் பற்றிய விஷயங்களும் இதரமத ஆராய்ச்சி சம்பந்தமான விஷயங்களும் முஸ்லிம் சமூக புனருத்தரான சம்பந்தமான விஷயங்களும் பிரசுரஞ்செய்வதே இச்சஞ்சிகையின் நோக்கமாகும். இராஜிய விஷயங்கள் சஞ்சிகையின் பெரும்பான்மை பாகத்தைக் கவராதெனினும் முஸ்லிம் சமூகத்தை நேரானவழியில் நடத்தவேண்டிய அவசிய மேற்படுங்காலையில் இராஜிய சம்பந்தமான விஷயங்கள் சஞ்சிகையிலிருந்து விலக்கப்படமாட்டா.”

மேலே கூறப்பட்டுள்ள வைகளை சற்று விளக்கிக் கூறவேண்டின் மார்க்க ஏவல் விலக்கல் விஷயங்களும் இஸ்லாமிய சட்ட திட்டங்களும் இஸ்லாமிய பழக்க வழக்கங்களும் இஸ்லாமிய புராதன சரிதையும் அஹலே சுன்னத்வல்ஜமா அத்து கொள்கைகளும் போதனைகளும் தற்காலமுள்ள இஸ்லாமிய அரசாங்கங்களின் நிலைமைகளும் இஸ்லாமிய நாடுகளில் ஏற்படும் இயக்கங்களும் அந்நாடுகளில் ஏற்படும் சம்பவங்களும் அகிலமுஸ்லிம் உலகின் நடவடிக்கைகளும் நம்நாட்டின் நிகழ்ச்சிகளும் அயல் நாட்டு நிகழ்ச்சிகளும் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவை சம்பந்தமான விஷயங்களும் இச்சஞ்சிகையில் பிரசுரிக்க (இன்ஷா அல்லாஹ்) முயற்சி செய்யப்படும். சுருக்கிக்கூறின் முஸ்லிம்களின் தற்காலநிலமைக்கு அத்தியாவசியமான எல்லா விஷயங்களையும் பிரசுரம் செய்து சமூக முன்னேற்றத்திற்கு உழைப்பதே இச்சஞ்சிகையின் முதல் நோக்கமாகும்.

ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும்

இச்சஞ்சிகை என் தனி நபருடைய சொந்தமானதல்லவென்று ஏற்கனவே கூறியிருக்கின்றேன். சஞ்சிகையின் முன்னேற்றத்திற்காகவும் அபிவிர்த்திக்காகவும் ஆலோசனைகளும் அபிப்பிராயங்

களும் சகோதரர்கள் கூறின் அவை சஞ்சிகையை நடத்துவதற்கு கிரியாம்சையில் சாத்தியமானவையாகவும் அஹ்லே சுன்னத்வல்ஜமாத் அத் கொள்கைகளுக்கு முரண்படாதவைகளாகவும் இருக்குமாயின் அத்தகைய ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் அன்புடனும் வந்தனத்துடனும் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேனென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,
எம். ஏ. அபுல்ஹாதா,
இஸ்லாமிய ஊழியன்.

இஸ்லாம்

மௌலானா மௌலவி அல்ஹாஜ். மு, முகம்மத் தமீம் ஆலிம் சாஹிப்
சென்னை ஜார்ஜ் டவுன் மதரஸயே யூஸுபியாவின் நாஜிர்.

"உண்மையாக அல்லாஹ் சுபுஹானஹூத ஆலாயிடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட தீனை (மார்க்கம்) கிறது இஸ்லாம் என்கிறதீனாக இருக்கும்."

அல்லாஹுத்த ஆலாவுடைய இச்சொல்லினால் தீனென்னும்மார்க்கம் பலதாக இருக்கிறதென்றும் அதில் ஒப்புக்கொள்ளப் பட்டதீன் "தீனில் இஸ்லாம்" என்றும் துலாம்பரமாக வெளியாகிவிட்டது. ஆனதால் தீனாகிறது இரண்டு வகையாய் இருக்கும். ஒன்றாவது, பாத்திலானதீன். அதாவது அல்லாஹுத்த ஆலாவுக்கு இணைவைத்துவணங்கும்படியான தீன்அடங்கலுமா இருக்கும். இரண்டாவது ஹக்கான தீன் அதாவது அல்லாஹுத ஆலாவின் அஹ்காம்களை அவனுடைய ரசூல் மார்களுக்கு அறிவித்து, ரசூல் மார்களின் மூலியமாக தன்னுடைய அடியவர்கட்கு அறிவித்த மார்க்கங்களாய் இருக்கும். இந்த ஹக்கானமார்க்கமும் இரண்டுவகைப்படும். ஒன்றானது சில காலங்களுக்கு அந்தக்காலத்துக்கு தக்கபடி அந்த ந்த காலத்தின் ரசூல்மார்களின் மூல்யமாக அல்லாஹுத்த ஆலா தன்னுடைய அடிமைகளுக்கு நடக்கும்படியாக அறிவித்து அதற்கு பின்னுள்ள ரசூல்களால் மாற்றப்பட்டு போகிறமார்க்கம். அதாவது

மூஸா (அலை) ஈஸா (அலை) தாவூத் (அலை) முதலான நபிமார்களின் மார்க்கங்களைப் போலாய் இருக்கும். ஹக்கான மார்க்கத்தில் இரண்டாவது மார்க்க மாகிறது கியாமத்பரியந்தம் அந்த மார்கத்துடைய ரசூலுக்கு பின்னால் வேறு எந்தநபியும் எந்த ரசூலும் அனுப்பப் படாமல் முத்திரையான மார்க்கமாய் இருக்கும். அதைத்தான் அல் லாஹுத ஆலாவின் அடிமை எடுத்து நடக்கக்கூடிய கடமையான மார்க்கமாகவும் அல்லாஹுத் ஆலாவிடத்தில் பொருந்தப்பட்ட மார்க் கமாகவும் இருக்கும். இதற்காகத்தான் நம்முடையவேதம் குர்ஆன் ஷரீபில் “ உங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தையே மார்க்கமாக பொருந் திக் கொண்டேன்.'' என்று கூறப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் போதனை.

மௌலவி த. ப. ற. மஅலி (பாகவி)

மெய்பரஞ் சோதியனும் அல்லாஹுத ஆலாவின் பேரருளால் நம் மானுஷ்ய கோடிகளுக்கு இயற்கையாய் அளிக்கப்பட்டுள்ள சத் திய மதம் நம் பரிசுத்த தீனுல் இஸ்லாமே யாகும். மாந்தர்க்கு வேண்டிய சர்வ சுதந்தரமும் உரிமையும், தர்ம நீதியும் இதில் செவ்வனே போதிக்கப்பட்டுள்ளன. இவ்விஸ்லாமில் போதிக்கப் பட்டுள்ள மதக் கோட்பாடுகள் அனைத்தும், சத்தியமுமானவையே யாம். தினம் ஐங்காலமும் அல்லாஹ்வை தியானித்து சிரஞ்சாய்த்து பக்திப்பூண்டு பிரார்த்தித்துக் கொள்ளுவதும், ஆண்டிற்கொரு திங் கள் ரம்லானில் முழுதும் உபவாசமிருத்தலும், தான் தேடிய திரவி யத்தில் நாற்பதி லொருபாகம் ஏழை எளியோர் கட்கு தானஞ் செய்து உதவுதலும், சர்வ பாக்கியங்களு மிருந்து கூடுமாயின் ஒரு முறை மக்காவிற்குச் சென்று ஹஜ்ஜு செய்துக் கொள்ளுதலும் மதக் கடன்களில் முதன்மை பெற்றவைகளாகும். மேலும் மனுஷ்யர்கள் யாவரும் அன்னார் எளியோராயினும் வலியோராயினும் மூத்தோ ராயினும் பெண்டீர்களாயினும் ஆடவர்களாயினும் சிறியோர்களா யினும் சர்வ ஜனங்களும், தந்தமக்குள் சஹோதரப் பான்மையுடனும், அன்புடனும் சமத்வம் சமரஸத்துடனும், இருந்து பிரிதொருவரும் தந்தமக்குள் பரோபகாரியாகவும், ஜீவகாருண்யம் மிக்கவராயும் இருத்

தல் இஸ்லாத்தின் மதப்போதனைகளில் முதன்மையானவைகள். இவ் விஸ்லாமிய சமயத்திற்கு பரிசுத்த வேதமாம் குர்ஆன் ஷரீபே தெய்வத் திருமறையாகும். இதில் கூறப்பட்டவைகள் அனைத்தையும் எடுத்த னுஷ்டிப்பவனே உண்மை முஸ்லிம் ஆதல் கூடும். இம்மதத்திற்கு சற்குருவாம், திருநபியாம், சன்மார்க்க சத்போதகராம், எமது நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஆக்ஞை போதனைகளின்படியும், அவர் அனுஷ்டித்துவந்த கிரியாம்சங் களைப் பின்பற்றி ஒழுகுவதும் முஸ்லிம்களுக்குரிய முக்கிய அடையாள மாகும். நபிபிரானேடிருந்து நம் நபியின் நிராமயமான சத்திய தாஸர் சஹாபாக்களின் அடிச்சுவட்டையும் பின்பற்றி நடத்தல் இஸ்லாமிய உத்தம செய்கைகளாகும். குர்ஆனின் அந்தரங்க அர்த்த நீதிகளையும் நபியின் நன்வசனங்களில் நம்பாமரர்க்கு விளங்காதனவற்றை இலகு வாய்விரித்து யாவரும் விளங்குமாறு மதச்சட்டங்களாக நிர்வகித்து அளித்துச் சென்ற இமாம்களின் போதனைப்படி ஒழுகுவதும் சாலச் சிறந்த தாகும். இன் நன்மார்க்கத்தை கைவிடுத்து மனம்போன போக்காய் அனுஷ்டிப்பவர் தெய்வ வழித்தவறிய பாபிகளே யாவர். மதபோதகர்களின் சட்டதிட்டங்களையும் ஹதீஸ்களையும் குர்ஆனின் கட்டளைகளையும் அனுஷ்டி யாதவர் ஒருகாலும் முஸ்லிம்கள் ஆகார். குர்ஆனைக் கைக்கொள்ளுங்கள். நபி பிரானுடையவும் மற்றும் மூதா தைகளினுடையவும் அடிச்சுவட்டை பின் பற்றுங்கள். சத்தியபக்தர் களாகுங்கள். உண்மை மூமினைகமாறுங்கள். பரிபூர்ண மடையுங்கள்.

வஸ்ஸலாம்.

இஸ்லாமிய சகோதரத்துவம்.

(எல். எம். ஜி.)

"இஸ்லாம்" என்னும் பதத்திற்கு கீழ்ப்படிதல், உண்மையைக் கண்டுபிடிக்க முயலுதல், சாந்தி, என பெரியோர் பொருள் கூறியிருக்கின்றனர். "இஸ்லாம்" மார்க்கத்தின் முதல்நோக்கம் மனிதவர்க்கத்தினர்க்குள் சகோதரத்துவம் ஏற்படுத்தி வைப்பதேயாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தான் இஸ்லாம் மார்க்கக் கட்டளைகள் ஒவ்வொன்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் பிரதிதினமும் கையாண்டுவரும் அனுஷ்டானங்கள் ஒவ்வொன்றும் மானிடவர்க்கத்தினர்க்குள் சகோதரத்துவத்தை ஏற்படுத்திவைப்பதற்கானதாகவே இருக்கின்றன. உலகில் மானிட வர்க்கத்தினர்களுக்குள் இருந்துவரும் சகோதரத்துவம் இரண்டு வகைப்படும். மனிதனால் உண்டாக்கி வைக்கப்படும் சகோதரத்துவம் ஒன்று. எல்லாம் வல்ல நாயன் மானிட வர்க்கத்தினருக்கு அருளியிருக்கும் சகோதரத்துவம் மற்றொன்று. மனித முயற்சியால் ஏற்படும் சகோதரத்துவம் நிலையான சகோதரத்துவமாகாது. அல்லாஹுத்தஆலா மானிடவர்க்கத்திற்கு அருளியிருக்கும் "இஸ்லாம்" என்னும் சகோதரத்துவம் கியாமத்து (நியாயத்தீர்பு) நாள் வரையில் நிலையாக நிற்கக்கூடியது. மனிதனுடைய எம்முயற்சியும் இச்சகோதரத்துவத்தை முறியடிக்க முடியாது. நிலையான சகோதரத்துவத்தை ஸ்தாபித்து வைத்தல் மனிதனால் சாத்தியமான விஷயமுமல்ல. சகோதரத்துவத்தை ஸ்தாபித்து வைக்க மனிதன்செய்தவும், செய்துவருகிறவும், முயற்சிகள் சிறிதளவும் உலகத்தில் மானிடவர்க்கத்திற்கு நிலையான நன்மையை உண்டாக்கி வைக்க முடியாமற் போய்விட்டதென்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம். மனிதர்களுக்குள் சுதந்தரம், சகோதரத்துவம், சமத்துவம், ஸ்தாபிப்பதற்காக வென்று ஏற்பட்ட கிளர்ச்சிகளும், இயக்கங்களும் உண்மையான சகோதரத்துவத்தை ஸ்தாபிக்க முடியாமற் போயினவென்பதை உலகறியும். சுதந்தரத்துவத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்திக்கொள்ளும் ஆவலில் சகோதரத்துவம் என்ற நாமதேயமே மறைந்து போய்விட்டது. சுதந்தரமும், சமத்துவமும், சகோதரத்துவத்துடன் ஒத்துவாழல் சாத்தியமானதல்ல. ஏனெனில் சுதந்தரத்தை ஸ்தாபிக்க முயலுகையில் சகோதரத்துவம் என்று

ஒன்று இருக்கிறதென்பதே ஞாபகமில்லாமற் போய்விடுகின்றது. சுதந்தரம் என்பது சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது தான் இதற்குக் காரணமாகும். சுயநலமும், சகோதரத்துவமும் ஒன்றுபட்டு வாழுவது சாத்தியமல்ல.

அல்லாஹு த்தஆலா அருளியிருக்கும் சகோதரத்துவமாகிய "இஸ்லாம்" சுதந்தரமும், சகோதரத்துவமும், ஒருங்கே செல்லக்கூடிய முறையையும் திட்டத்தையும் மானிடவர்க்கத்திற்குப் போதிக்கின்றது. இதன் உண்மையென்னவெனில், "இஸ்லாம்" போதிகும் சகோதரத்துவம் மார்க்கத்தைப் பற்றியிருக்கின்றது. மனிதன் உண்டாக்க முயன்ற சகோரத்துவம் உலகத்தைப்பற்றியது. "இஸ்லாம்" மார்க்கம் இகம்பரம் இரண்டிற்கும் ஒத்ததானதால் இகத்திற்கு மட்டும் ஏற்படும் சகோதரத்துவம் இஸ்லாமிய சகோதரத்து வத்தின் முன் நிலைப்பது சாத்தியமில்லாமற்போகின்றது. இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் போன்ற சகோதரத்துவம் வேறெந்த மார்க்கத்திலும் காணப்படவில்லை. கிறிஸ்தவமார்க்கத்தை எடுத்துக்கொள்வோம். முதலாளிகள், தொழிலாளர்கள் என்ற போராட்டம், வெள்ளையர் கறுப்பு மனிதர் என்ற வித்தியாசம், ஆளுபவர்கள், ஆளப்படுவோர்கள், என்ற வேற்றுமை முதலியவேற்றுமைகள் நிலையாக வேரூன்றியிருக்கின்றன. கிறிஸ்தவமார்க்கத்தை அனுஷ்டித்துவரும் மேல்நாட்டாரென அழைக்கப்படும் ஐரோப்பியர்களுக்கு (துருக்கி ஐரோப்பாவில் இருந்தாலும் ஐரோப்பியநாடாக அழைக்கப்படுவது கிடையாது) புதுநாடுகளைக்கைப்பற்ற வேண்டுமென்ற பேராசையும் புதுதேசங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற அவாவும் விட்டொழியவில்லை. ஹிந்து மார்க்கத்தை எடுத்துக்கொள்வோம். சகோதரத்துவமென்பது மருந்திற்கும் கிடையாது. பிராமணன் பிர்மாவின் வாயிலிருந்தும், க்ஷத்திரியன் கையிலிருந்தும், வைசியன் தொடையிலிருந்தும், சூத்திரன் காலிலிருந்தும் சிருஷ்டிக்கப்பட்டானென்பது ஹிந்து மதத்தின் அடிப்படையான கொள்கையாயின், இத்தகைய கொள்கையில் சகோதரத்துவம் எங்ஙனம் ஏற்படக்கூடும்? ஹிந்து மதத்தில் சமத்துவம் என்பதைக் கனவிலும் காணமுடியாதென்பதை ரூபிப்பதற்கு ஹிந்துக்களில் தற்காலம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் தீண்டாமை, நெருங்காமை முதலிய தீய வழக்கம் ஒன்றுமட்டுமே போதுமானசான்ருக இருக்கின்றது.

"இஸ்லாம்" மார்க்கம் என்ன கூறுகின்றது? "உங்களுக்குள் எவர் தங்களுடைய கடமைகளைச் சரிவர செய்கின்றார்களோ அவர்கள் மேலானவர்களாவார்கள்" என்பதாக இஸ்லாம் மார்க்கம் கட்டளை இடு

கின்றது. இஸ்லாம் மார்க்கத்தில் அடிமைகள்கூட சமத்துவத்துடன் நடத்தப்படுகிறார்கள். "அடிமைகளாயின் என்ன, அவர்களும் உங்களுடைய சகோதரர்கள். நீங்கள் சாப்பிடும் சாப்பாட்டையே அவர்களுக்கும் கொடுங்கள். நீங்கள் உடுக்கும் உடையையே அவர்களுக்கும் கொடுங்கள்'' என்பதே இஸ்லாம் மார்க்கத்தின் விதியாகும். குழந்தையில்லாத குடும்பத்தில் அடிமையே வாரிசாகி சகல செல்வத்தையும் அடைகின்றான். அடிமைகள் பலர் அரசர்களாகி இராஜ்ஜிய பரிபாலனம் நடத்தியிருப்பதை நாம் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். "முஸ்லிம்கள் எல்லோரும் ஒரே உடலாவார்கள். உடலின் ஒரு அவயவம் சற்று நோவடைந்தால் உடல் முழுவதற்கும் நோய் ஏற்படுகின்றது'' என்பதாக நபிகள் நாயகம் (ஸல்) வர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். பிறமதஸ்தர்கள் மஸ்ஜிதுகளுக்குச் சென்று பார்ப்பார்களாயின் நெவமுஸ்லிம்களுஞ் சரி, பரம்பரை முஸ்லிம்களுஞ்சரி, உயர் வகுப்பிலிருந்து முஸ்லிம் களானவர்களாயினுஞ் சரி, தாழ்ந்த வகுப்பிலிருந்து முஸ்லிம்களானவர்களாயினுஞ்சரி எல்லோரும் எவ்வித வித்தியாசமும் வேற்றுமையுமின்றி முஸ்லீம்களுக்குள் சமத்துவமாக இருந்து வருவதைக்காணலாம். மன்னனுயினுஞ்சரி, பிச்சைவாங்கும் ஏழையாயினுஞ்சரி எல்லோரும் இஸ்லாம் மார்க்கத்தில் சமமாவார்கள். மானிடவர்க்கத்திற்குள் சமத்துவத்தை ஸ்தாபிப்பதற்காகவே சூதாட்டங்களும், மதுபானங்களும் இஸ்லாம் மார்க்கத்தில் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. மதுபானம் அருந்துவதால் ஏற்படும் வீண் செலவிற்கும், சண்டைகளுக்கும், சச்சரவுகளுக்கும், கொலைகளுக்கும் கணக்குண்டோ? சூதாட்டங்களினால் ஒரு நிமிஷத்தில் ஒருவன் ஏழையாவதும் பணக்காரனுவதுமாக இருக்கின்றது. பிறர் பொருளை அபகரித்துக்கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இந்நிலைமையில் சகோதரத்துவம் எங்ஙனம் ஏற்படக் கூடும்? இதற்காகவென்றே இவைகள் இஸ்லாம் மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ளன. இஸ்லாம் மார்க்கத்தில் முதலாளிக் கொள்கையென்பதை ஒழிக்கவே ஐக்காத்து கொடுப்பதென்ற விதியும், வட்டிவாங்கக் கூடாதென்ற சட்டமும் இருக்கின்றது. இதரமதங்களிலிருப்பதுபோலல்லாமல் இஸ்லாம் மார்க்கத்தில் ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எல்லோருக்கும் குடும்ப சொத்துக்களில் பங்குண்டு. கிறிஸ்தவமார்க்கச் சட்டத்தில் ஆண்குழந்தைகளிலும் தலைமை பையனுக்குமட்டும் குடும்பத்தின் சகல சொத்துக்களும் கிடைக்கின்றன. ஹிந்து மார்க்கத்தில் ஆண்குழந்தைகளுக்கு பங்குண்டெனினும் பெண்குழந்தைகளுக்கு பங்கென்பதே கிடையாது.

இவ்விஷயங்களையெல்லாம் உற்று கவனிக்கின் இஸ்லாமிய மார்க்கத்தில்இருக்கும் உண்மையான சகோதரத்துவமும் இதர மார்க்கங்களில் சகோதரத்துவம் இல்லாமையும் நன்கு விளங்கும்.

துன்பத்தில் இன்பம்.

மௌலவி. த. ப. மஅலி (பாகவி) திருவண்ணமலை

"ஏ பக்தர்காள்! உங்கள் விளையும் பொருட்களைக் குறைப்பதாலும், உங்கள் ஆத்மாக்களுக்கு ஆபத்தை விளைவிப்பதாலும், உங்கள் பொருள் தனங்களை நஷ்டப்படச் செய்வதாலும், உங்களை தீராப்பசிப் பிணியால் அச்சுறுத்துவதாலும் யாம் சோதிப்போம். ஏ நபியே! இத்தகைய பொறுமையாளர்க்கு சுபச்செய்தி கூறுவீராக. அவ்வுத்தமர்கள் தங்கட்கு எத்தகைய தீங்கு நேரிட்டபோதிலும் 'நாங்கள் ஆண்டவனுக்காகவே (ஜீவித்து) இருக்கின்றோம். மேலும் அவன் பக்கமே மீண்டுச் செல்வோம்' என்றுதான் சொல்வார்கள். ஆதலின் அத்தகையோர்க்கு அவர்கள் இரக்ஷகனின் அருளும் ஆசீர்வாதமும் உண்டாவதாக. மேலும் அவர்களே நேர்வழிபி விருப்பவராவர்." (குர்ஆன்)

ஏ! என் அன்பான முஸ்லிம் சகோதரர்காள்! பரிசுத்த வேதமாகிய குர்ஆன் ஷரீபில் அல்லாஹுதஆலா நம் இஸ்லாமிய உண்மை பக்தகோடிகளின் மான்மியத்தையும் அன்னோரின் சீரிய லக்ஷணத்தையும் அன்னோரின் பொறுமைப் பெருங்குணத்தின் உறுதியையும் எடுத்தோதும் சிறப்பைப் பார்த்தீர்களா? பக்தரக்ஷகனை அல்லாஹுதஆலா தன்னுடைய உண்மைபக்தர்களை எவ்வாறு பரிசோதிக்கின்றான்? அவர்களுக்கு எத்தகைய குறைகளையும் தீமைகளையும் அளிக்கின்றான் என்பதை அதிவிளக்கமாய் குர்ஆன் ஷரீபே போதிக்கின்றது. இத்தகைய ஆத்மாநுபூதிச் சோதனைகளில் உழன்று தேறிய மனிதனே உண்மை தாஸனாகவும் முற்றிய ஞானியாகவும் 'இன்ஸானே காமிலாகவும்' ஆதல் கூடும். இத்தகைய மஹான்களுக்கே ஆண்டவனின் பரஞ்சோதி திருஷ்டியில் புலப்படும்! இத்தகையோர்களே தங்களையும் அறிந்து தங்களுடைய நாயனையும் அறிந்த அறிஞர்களாவர். ஆத்மாநுபூதிச் சோதனையில் தேறுவதற்குப் பொறுமை என்னும் அருங்குணமே அவசியம். இவ்வுலகின்

மானிடகோடிகளின் சகல உத்தம குணங்களிலும் பொறுமை என்னும் ஆத்மப் பூஷணமே மிகமிக உயரியதாய்க் காணப்படுகிறது. சாந்தமும், திடசித்தமும், மனஉறுதியும், பொறுமையைச்சார்ந்த கிளைக் குணங்களேயாகும். பகவத்பக்தர்கட்கு திடசித்தம், பொறுமை அவசியம். பொறுமையுடையவர்கட்கு ஆண்டவனும் பக்கபலமாய் இருக்கிறான் என்று குர்ஆனும் போதிக்கின்றது. ஒவ்வொரு பக்தர்களும் சோதனை என்னும் ஆழியை பொறுமை என்னும் தோணியால் கடந்த பின்னரே உண்மை தாஸராய் ஆதல் வேண்டும். இவ்வண்ணமே ஆண்டவனும் முதல் முதல் தன்னை விஸ்வசிப்பவரிடம் சாந்தம், திடசித்தம், பொறுமை இருக்கின்றனவா என சோதனை செய்து பரீக்ஷித்துக் கொள்ளுகின்றான். இவ்வாறு அவர்களைப் பரிசோதிப்பான் வேண்டி அவர்கள் வாழ்க்கையை தீரா வறுமையிலும், கொடும் பசியிலும், ஆளாக்கிப் பரீக்ஷிக்கிறான். மனிதப் பகைஞர்களாலும் துஷ்டஜந்துக்களாலும், மற்றும் பொருள்களாலும், அப்பக்தர்களுக்கும் ஜீவஹானி நேரிடும்படியான எல்லை வரைக்கும் அவர்களின் திடசித்தத்தை சோதித்து விடுகிறான். அவர்களின் சகல ஆஸ்திகளும் பெரும்பாக்கியங்களும் இழந்து விடச் செய்தும் பரீக்ஷித்து விடுகிறான். யாவற்றையு மிழந்து இத்தனை ஆபத்துகளிலும் தங்கள் மன உறுதியையும் சாந்த குணத்தையும் கைவிடாது அவனின் பக்தியையும் விஸ்வாசத்தையும் அவன்பால் வைத்திருக்கும் மனநிர்ணயத்தையும் ஈமான் என்னும் மன உறுதியையும் எவன் இழந்துவிட வில்லையோ அத்தகைய உத்தமோத்மனையே ஆண்டவன் சிலாகித்து தன் அருளின்கீழ் வைத்திருப்பான். அச்சத்தியவந்தனே இறுதிவாழ்க்கை நாளில் பரிபூர்ணசுப ஆசியையும், சுவனலோக சுகானுபவத்தையும் அடைகின்றான். இத்தகைய அருங்குணமுடைய மனிதனையே உண்மை மூமீன்என்றும் பரிபூரண ஞானவான்என்றும் நாம் அழைத்துப் புகழ்கின்றோம். இவர்களே முத்தகீன் எனப்படுபவர்கள். மானிடகோடிகளுக்கு இதுவே அருங்குணமென மூத்தோரும், மேலோரும் போற்றிப் போந்தனர். சாந்தமாய் இருப்பவனை யாவரும் சிலாகிக்கின்றனர். அடித்தாலும் தாழ்மையுடன் அடியைச் சகித்துக் கொண்டு நமக்கு அறத்தை போதிப்பவனை உலகம் புகழ்கிறது. ஒரு கன்னத்தில் அறைந்தால் பொறுமையுடன் மறு கன்னத்தையும் திருப்புகிறவனை ஈ ஸா ந பி போற்றுகிறார். மேலங்கியை இழுத்துபிடுங்கினுல் அத்துடன் கீழங்கியை விட்டுவிட்டு எதிர்க்காதவனையே ஈஸாநபியும் புகழ்ந்து கூறினர். பண்டைக்கால அரபுநாட்

டில் துஷ்டர்களான அபுஜஹல், குப்பார் குறைஷ், முதலியவர்களால் கட்டுண்டு சுடுமணலில் வீழ்த்தப்பட்டு பொறுமையுடன் துன்பத்தை சஹித்துக் கொண்டு இருந்த ஹஜ்ரத் பிலாலை (ரலி) முஸ்லிம்கள் யாவரும் புகழ்கின்றோம். அராபியா பண்டையவஞ்சகர்களால் சொல்லொணு கொடுமைகளும் பற்பலதீங்குகளும் விளைவிக்கப்பட்டும் சாந்த முகத்துடன் இருந்து அவ்வறிவிலிகளுக்கு நீதியை போதித்த நமது நபிகள்நாயகம் (ஸல்) அவர்களை புகழாத மனிதன் கிடையாது.எனவே, பொறுமையாளர்களே! உலகில் போற்றத்தக்க புண்ணியர்கள் தெய்வ சங்கல்பமாய் உண்டாகும் தீமைகளுக்கும், சகஜமாய் உலகில் நேரிடும் தீங்கு ஆபத்துகளுக்கும், மானிடவர்க்கத்தாரால் இழைக்கப்படும் அட்டூழிய இன்னல்களுக்கும், எதிர்க்காது எவன், பொறுமையை கடைப்பிடித்து சாந்தக் கடலின் கரை கடந்து பரிபூர்ணபக்குவத்தை அடையப்பெறுகின்றனே அவ்வுத்தமனையே உலகம் மிகவும் மெச்சிக்கொள்ளுகின்றது. எத்துன்பத்திலும் சாந்த குணத்தினல் முக்தி பெற்ற தத்துவத்தை விளக்குவான் வேண்டி அனந்தம் முகாந்திரத்தை எடுத்தோதல் கூடும். இதன் மகத்துவத்தை நாம் நம் மூதாதைகளின் ஜீவிய வாழ்க்கைகளிலிருந்து செவ்வனே ஆராய்ந்துக்கொள்ளலாம். சர்வலோகஜன காருண்யரும், தயாளகுண சாந்தரும், பகவத் பக்த உத்தமரும். உத்தமோத்ம புண்ணிய பெருமானுமான நமது நபிகள் பிரான் முஹம்மத் (ஸல்) அவர்கள் சஞ்சலத்திலும் வறுமை நோயிலும் பசிப்பிணியிலும் பற்பல இன்னல்களிலும் ஆளாகியிருந்து திடசித்த மனச் சாந்தத்துடன் சகித்து பொறுத்து பெரும்பேரெய்திய புண்ணிய மஹானின் வாழ்க்கை உதாரணத்தைவிட பொறுமையின் தத்துவத்தை விளக்க வேறொரு சம்பவமும் அவ்வளவு சமமாய் இல்லை யென துணிபாய்க் கூறலாம். இம்மாண்பிற்காக வன்றோ சகல மதஸ்தர்களும் நபிகள் நாயகம் (ஸர்) அவர்களை போற்றி வருகிறார்கள்! சுருக்கிக் கூறுமிடத்து ஒவ்வொரு நபிமார்களும் மற்ற குதுபுமார்களும் ஏனைய எல்லா தெய்வவிசுவாசிகளும், பகவத் பக்தர்களும், உண்மை உத்தமர்களும், சத்தியாக்கிரஹிகளும், பெரும்பெரு மஹான்களும், அறிஞர்களும், ஞானிகளும், தமக்கு நேரிடும் வறுமை, சஞ்சலம், துன்பம், ஆபத்து முதலியவைகளை சஹித்து சாந்தமுற்று முக்தியடைந்து நற்கதிபெற்றதினலன்றோ உலகம் இன்றளவும் அவர்களை போற்றுகின்றது. எனவே பொறுமை அல்லது திடசித்த மென்னும் மாபெரும் அருங்குணமானது சர்வ பாக்கியத்திலும் பெரும் பாக்கியமாக இருந்து வருகிறது. பொறுமையைவிட மேன்பட்ட ஒரு வஸ்து உலகில் இல்லை யென்பதை

"பொறுமை கடலினும் பெரிது" என்னும் முதுமொழி விளக்குகிறது. நமது குர்ஆன் ஷரீபிலும் பலவிடங்களிலும் பொறுமையைப் பற்றியும் தெய்வ நம்பிக்கையின் உறுதி பாட்டைப்பற்றியும் போதிக்கப்பட்டிருக்கிறது. "உண்மையாய் ஆண்டவன் பொறுமையாளர்களின் பக்கமே இருந்துவருகிருன்" என ஓர்இடத்தில் குர்ஆன் கூறுகின்றது. எனவே பொறுமையை கடைப்பிடித்த அறிஞர்களும் தெய்வ பக்தர்களும் தங்களுக்கு எத்தகைய ஆபத்தும் வறுமையும் இன்னல்களும் வந்துற்ற போழ்தும் மனங் கசியார்கள். திடசித்தத்தை கைவிடார்கள். சத்தியத்தை நிராகரியார்கள். உண்மையை மறுக்கார்கள். உத்தம குணங்களில் ஒன்றையும் கைவிடார்கள். பகவத்தியானத்தையும் மனநிர்ணய ஈமானையும் ஒருபோதும் புறக்கணியார்கள். அவர்களின் ஆத்மாவும் சஞ்சலமுருது. இதனல் இவர்களின் மாண்பு குன்றிவிடுமா? சந்தணக் கட்டையை அறைத்து தேய்த்தாலும் அதன் நறுமணம் போய் விடுமா? மாசற்ற செம்பொன்னை நெருப்பிலிட்டு உருக்கினுலும் அதன் பிரகாசம் மங்குமா? மாபெரும் சமுத்திரத்தை பலரும் சேர்ந்து கலக்கினுலும் சேருருமா? அன்று அன்று. இச்சாந்த குணசீலர்களை இவ்வரும் பொருள்களுக்கும் ஒப்பிடலாம் மற்றும் எதற்கும் ஒப்பிடுதலும் தகும். துன்பத்தில் ஆழ்ந்து கடைத்தேரியவரே ஆத்மார்த்த தூய்மை யடைந்தவராவர். பல இன்னல்களிலும் துன்பங்களிலுமிருந்தும் கரை ஏறியவரே நபியாகவும் குத்பாகவும் மஹானுகவும் ஆதல் கூடும். இரத்தினக்கல்லை பன்முறை தேய்த்துத்தேய்த்து மாசு போக்கி சுத்தம்செய்த பின்னரே அதன்சுயப்பிரகாசம் வீசுகிறது. மாசறத் தங்கத்தை தேய்த்து உறைத்து பார்த்தபின்னரே அதின் மாற்றுபுலப்படுகிறது. சாம்பிராணியை செந்தணலிலிட்டு எரித்தபின்னரே அதின் நறுமணம் கமழுகிறது. கஷ்டநிஷ்டூரம் மிகுதம் அனுபவித்தவரிடமே நற்குணம் சிறந்து காணப்படும். துன்பம் அநுபவித்தறியார் மேன் மக்களாகார். மேன்மக்கள் துன்பத்தை யறியாதவராகிரார். இன்பமே துன்பம். துன்பமே இன்பம். வஸ்ஸலாம்.

முஸ்லிம் உலகின் எதிர்கால நிலைமை.

பாரிஸ்டர் ஜனுப் அப்துல்கையூம் மாலிக். பி.ஏ.

சென்ற ஐரோப்பா யுத்தம் ஆரம்பமான சமயத்தில் துருக்கி தனியே விடப்பட்டு இஸ்லாமிய நாடுகளெல்லாம் தனியே ஒதுங்கி நின்றமையால் அகில இஸ்லாமியஇயக்கம் முஸ்லீம் உலகெங்கும் பரவி விடுமென்று பயம் கொண்டிருந்த ஐரோப்பியர்களுக்கு மனம் சாந்தி யடைந்தது. ஜிஹாத்தென்னும் பதம்கூட முஸ்லீம் உலகில் உபயோகிக்க படவில்லை. கீழ்திசை நாடுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள நாடுகள் நேசக்கட்சியாரால் படையெடுக்கப்பட்ட போது, முஸ்லீம்கள் பால் அனுதாபம் காட்டி துருக்கி நேசக்கட்சியாரை கீழ்திசை நாடுகளில் எதிர்த்தாக்கியது கிடையாது. இதிலிருந்து அகில இஸ்லாமிய இயக்க மென்பது கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய் என்று ஐரோப்பியர்கள் நன்குறிதி கொண்டு விட்டார்கள். ஹிஜாஸ் அரேபியர்கள் தனியே கிளர்ச்சி செய்து கலகம் செய்ய ஆரம்பித்தபின், முஸ்லீம்கள் எல்லோரும் ஒன்ருகி விடுவார்களோ வென்று ஐரோப்பியர்கள் கொண்டிருந்த பீதிமுற்றிலும் மறைந்தது. மேல் நாட்டில் அரசாங்கங்களை யொழிப்பதற்கு முஸ்லீம்கள் எல்லோரும் ஒன்ருகி விடுவார்களோ வென்ற கலக்கம் ஐரோப்பியர்களுக்கு ஒரு காலத்தில் ஏற்பட்டிருந்தது. ஆனல் மேற்சொன்ன சம்பவங்களைக் கண்டபின் ஐரோப்பியர்களுக்கிருந்த பீதி அறவே யொழிந்தது.

நேசக்கட்சியாருடன் துருக்கி துடங்கிய யுத்தமானது துருக்கியின் சுயநலத்தைக்கொண்டதாகவும், துருக்கியின் நன்மையை நாடியதாகவும் இருந்தது. தவிற ஐரோப்பா யுத்தத்தின் போராட்டத்தில் துருக்கி சம்பந்தப்பட்ட வரையில் மதசம்பந்தம் ஒன்றும் இருந்தது கிடையாது. ஆனதுபற்றி இந்திய முஸ்லீம்களும் இதர நாட்டு முஸ்லீம்களும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. தவிர யுத்த காலத்தில் நேசக்கட்சியார் கூறிய மொழிகளிலிருந்து, அவர்கள் (நேசக்கட்சியார்) தங்களுடைய சுயநலத்திற்காகப் போராடவில்லை என்று இந்திய முஸ்லீம்களும் இதர முஸ்லீம்களும் அறிந்து நேசக்கட்சியாருக்கு உதவி புரிந்தார்கள். ஆனல் நேசக்கட்சியார்களோ கூறிய வார்த்தைகளுக்கு விரோதமாக நடந்ததைக்கண்டு முஸ்லீம்

உலகம் பின்னர் ஏமாற்றமடைந்தது. தக்கசமயத்தில் துருக்கியை விட்டு அரேபியா தனியே பிரிந்து கொண்டதானது நேசக்கட்சியா ருக்கு அதிக உதவியாகயிருந்தது. ஆனால் அச்சமபம் அரேபியர்க ளுக்கு நேசக்கட்சியார் செய்துகொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றாமல் மௌனம் சாதித்து விட்டார்கள். அரேபியர்களுக்கு இச்சம்பவம் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. இராக்வா சிகளும் எகிப்தியர்களும் சிரியாவாசிகளும் பாலஸ்தீனவாசிகளும் நேசக்கட்சியார்களுக்கு விரோதமாக கிளம்புவதற்கு சமயம் பார்த்தி ருக்கின்றார்கள். அகில இஸ்லாமிய இயக்கமென்று ஐரோப்பிய யுத்தத் திற்கு முன்சொல்லப் பட்டுவந்ததெல்லாம் ஐரோப்பியா கிரந்தகர்த் தாக்களின் மனதினால் சிருஷ்டிக்கபட்ட வீண்பீதியேயாகும். ஆனால் இன்றைக்கு முஸ்லீம் உலகின் நிலமையை காண்போமாயின் மூஸ் லீம் நாடுகளுக்குள் ஒற்றுமையும் சகோதரத்வமும் விருத்திபடைந்து வருகிறது. தற்சமயம் இஸ்லாமிய நாடுகளுக்குள் ஏற்பட்டுவரும் ஒற் றுமையானது ஐரோப்பிய நாடுகளை தாக்குவதற்காவது அல்லது அந்நாடுகளின் ஆதிக்கத்தை கைக்கொள்ளுவதற்காவது அல்ல. முஸ் லீம் நாடுகள் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உதவிசெய்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைக் கொண்டுதான், இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய நாடுகளின் அஸ்திவாரத்தை அதிர்க்கச்செய்யும் படியான நிலமைகள் ஏற்பட்டிருந்தகாலத்தில் முஸ்லீம் உலகை சீர்திருத்தியமைப்பதற்காக ஏற்பட்ட இயக்கங்கள் நாளடைவில் அதிகப்பயனைக் கொடுத்துதவக்கூடியவைகளாக இருக் கின்றன. இராஜீயவாழ்க்கையில் ஏதேச்சாதிகாரம் மாறி குடியரசுக்கு கிளர்ச்சிகள் ஏற்பட்டுவருவதைப்போலவே சமூகவாழ்க்கையிலும் பலத்த மாறுதல்கள் செய்யப்பட்டு பழைய கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் மாறுபட்டுவருகின்றன. ஆனால் நாளைய முஸ்லீம் உல கில் இஸ்லாம் போதிக்கும் இஸ்லாமிய சகோதரத்துவத்தை ஸ்தாபிப் பதற்குவேண்டிய சின்னங்களும் அறிகுறிகளும் இல்லாமற் போக வில்லை. முஸ்லீம் உலகின் பற்பல நாடுகளினுடைபவும் நிகழ்ச்சிகளை கவனிப்போமாயின் மேற்கூறியுள்ளவிஷயங்கள் நன்குபுலனாகும்.

துருக்கி

தற்காலத்தில் முஸ்லீம் இராஜ்யங்களில் முதன்மையாக விளங் கும் துருக்கியில் நிகழும் சம்பவங்களை கவனிக்கின் நாம் மேலே கூறியுள்ள விஷயங்கள் நன்கு புலனாகும். இஸ்லாம் மார்க்கமும் குடிஅரசாட்சி யென்று தற்காலம் சொல்லிக் கொள்ளப்படும்

கொள்கையும் வெவ்வேறல்லவென்பதையும் துருக்கி நிரூபித்து விட்டது. யுத்தகாலம் முன்னேற்றத்துக்குறிய காலமல்லவென்று கூறப்படுகிறது. ஆனால் துருக்கியில் யுத்தகாலத்தில்தான் ஏராளமான புதுக் கட்டடங்கள் பள்ளிக்கூடங்களுக்காக கட்டப்பட்டன. துருக்கியில் ஏற்பட்டிருக்கும் கல்வியபிவிர்த்தி இஸ்லாத்தின் ஆரம்பத்தில் நடைபெற்று வந்த குடிஅரசு அரசாட்சி காலத்தில் இருந்ததுபோல் செய்யப்பட்டு வருகின்றது. யுத்தகாலத்திலுங்கூட நாட்டிற்கு உள்ளும் புறமும் நடந்த சதியாலோசனைகளை பொருட் படுத்தாமல், மிகவும் பலமான குடிஅரசாட்சியை துருக்கியர் ஸ்தாபித்திருக்கிறார்கள். இஸ்லாம் மார்க்கம் முன்னேற்றத்தை கொடுக்காத மார்க்க மென்றும் இஸ்லாமிய ஆட்சி எதேச்சை அதிகாரம் பொருந்தியதென்றும் கூறப்படுவதை மறுத்துக் காட்டி இஸ்லாம் மார்க்கம் எத்தகைய ஆட்சியை விரும்புகிறதென்றும் இஸ்லாமிய ஆட்சியின் நோக்கமின்னதென்பதையும் தற்காலம் துருக்கியர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டி விட்டார்கள்.

எகிப்து

தேசாபிமான வளர்ச்சிக்கானவும், நாட்டின் முன்னேற்றத்திற்கானவும், காரியங்கள் பல எகிப்தில் நடந்து வருகின்றன. கல்வியபிவிர்த்தி மிகவும் அதிகமாக கவனிக்கப்பட்டு வருகின்றது. எகிப்து இப்பொழுது நடந்து செல்லும் மார்க்கத்தைக் கவனிக்கின் எகிப்து கூடியசீக்கிரம் சுதந்தரத்தையடையு மென்றே கூறலாம்.

வட ஆபிரிக்கா

திருப்போலியிலும் அல்ஜீரியாவிலும் டியூனிஸிலும், தேசீய இயக்கம் பலப்பட்டு வேரூன்றி வருகிறது. மொரோக்கோவில் காஜி அமீர் அப்துல்கரீம் அவர்களின் சுதந்திரப் போராட்டத்தை உலகம் நன்கறியும். தற்காலம் அவருடைய சகாக்கள் மீண்டும் போரைத் தொடங்கி, ஸ்பானியர்களையும் பிராஞ்சுக்காரர்களையும் பலமாக எதிர்த்து வருகிறார்கள். இவைகளை யெல்லாம் காணின், முஸ்லிம்கள் தங்களுக்கு பலத்தை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள் என்பது நன்கு விளங்கும்.

ருஷ்யா, ஈரான், ஆப்கானிஸ்தான்.

இந்நாடுகளிலும் எதேச்சையதிகார ஆட்சி மாறி குடிஅரசாட்சி ஸ்தாபனமாகி வருகின்றது. கல்வியபிவிர்த்தியும் சமூக வாழ்க்கையின் அபிவிர்த்தியும் அதிகமாக எற்பட்டு வருகின்றது. ஈரான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் முஸ்லீம்களைவிட ருஷ்யாமுஸ்லீம்கள் அதிக முன்னேற்றமடைந்து கல்வியில் அதிக அபிவிர்த்தியடைந்

திருக்கிறார்கள். ஐரோப்பாவின் மேற்குக்கோடியிலிருக்கும் அல்பானியா, பாஸனியா, முதலிய நாடுகளிலும் முஸ்லீம்கள் முன்னேற்றமடைந்து அபிவிர்த்தியடைந்து வருகிறார்கள்.

முஸ்லீம் உலகின் எதிர்கால நிலமை.

முஸ்லீம் உலகின் நிகழ்ச்சிகளையெல்லாம் ஊன்றி கவனிக்கின் முஸ்லீம் உலகின் எதிர்கால நிலமை மிகவும் திருப்திகரமாகயிருக்குமென்றும் முன்போல் இன்னொருதரம் இஸ்லாம், உலகத்தில் தலை சிறந்து விளங்குமென்றும், இஸ்லாமிய நாடுகளெல்லாம் ஒன்றுபட்டு பல மடையுமென்றும் மற்றொருதரம் இஸ்லாமிய ஆதிக்கம் உலகெங்கும் நிலைநிற்குமென்றும் நன்கு விளங்குகின்றது.

எல்லாம் வல்லநாயன் இவ்வாறே நடைபெறுவதற்கு துணைபுரிவானாக. ஆமீன்.

உண்மை இஸ்லாமே வெற்றிபெறும்

அப்துல் குவல்லிம் மாலிக்

சாதாரண மக்களுக்கு தங்களது அறிவின் திறமைக்கு மேலானதாக தோற்றக்கூடிய ஏதாவது ஓர் அபிப்பிராயத்தை புதிதாக வெளியிடும் மேதாவிகள்கூட ஏனையோர்களால் பரிகாசிக்கப்படுவார்களென்பது சர்வசாதாரணமேயாம். சாதாரண மனிதர்களுடைய பிரியத்திற்கும் அபிப்பிராயத்திற்கும் முரண் பட்ட அபிப்பிராயங்களை வெளியிடுவோர்கள் ஏனையோர்களின் கண்களுக்கு முன்னிலையில் குருடர்களும் அறிவிலிகளும் ஒருவேளை பித்தர்களெனவும் கொள்ளக்கூடும். இதற்கு உலக சரித்திரத்தின்கண் அநேக திருஷ்டாந்தரங்கள் இருக்கின்றன. அடிமை வியாபாரமானது நீதிக்கு முரண்பட்டதும் மனித சகோதரத்தன்மையை அடியோடொழிக்கின்றதும், மனிதரை மனிதர் விலைக் கொடுத்து வாங்கவும் விலைக்கு விற்கவும் செய்வது அதர்மமும் அக்கிரமமும் தானென்றும் உபதேசம் செய்த ஸ்ரீமான் கிளார்ஸனை ஆதியில் ஜனங்கள் பழித்தனர். அன்னாருடைய அபிப்பிராயங்கள் வெறுக்கத் தகுந்தவைகளென்றும் பாபத்திற்குரியவைகளென்றும் குறைகூறி அன்னவரை ஹிம்சிக்க முயன்றனர். இவ்வனுபவம்தான் ஸ்ரீமான்களான வில்பற்போர்ஸ், கிராண்வில் சார்ப் என்கின்ற மேதாவிகளுக்கு முண்டானது. முதன் முதலாக ரயில்வேயை

நடைமுறையில் வருத்தினவரான ஸ்ரீமான் ஜார்ஜ் ஸ்டீபன்சன் என்பவர் எவ்வளவு காலம் வரைக்கும் ஜனசமுதாயத்தின் கண்களுக்கு முன் பித்தனும் மூளையிலாதவனுமென தூற்றலுக்காளாய் ஜீவிக்க வேண்டி வந்தது? மிக்ககஷ்டப்பட்டும் பொது ஜனங்களின் ஆட்சேபங்களையும் அவமதிப்பையும் அசட்டைசெய்தும் அசையா மனத்திடனுடனும்கூடி அன்னார் செய்த முயற்சியின் பயனாக இன்றைக்கு புகைவண்டியினால் எவ்வளவோ மக்கள் பயனடைகின்றார்கள். ஆனால் இங்ஙனம்தான் ஆரம்பத்தில் ஆலோசனையற்றவனென்றும், பித்தனென்றும் அசட்டை பேர்வழியென்றும் இந்திரஜாலக்காரனென்றும் மற்றும், அரேபியாவின்கண் விக்கிர வணக்கக்காரர்களாகயிருந்த ஒரு ஜனசமுதாயத்தினால் தூற்றப்பட்டவரான ஓர் உலக பிரசித்திபெற்ற மஹானைக்குறித்துதான் யாம் இன்று பிரஸ்தாபிக்க முன்வந்துளோம். சுமார் ஆயிரத்திமுன்னூறு வருடங்களுக்கு முன் குருட்டு நம்பிக்கையுடையவர்களும் விக்கிரகவணக்கக்காராகளுமாயிருந்த ஒரு ஜன சமுதாயத்தினிடையே கல்விப்பயிற்சி கிஞ்சிற்றேனுமில்லாதவராய் பிறந்து வளர்ந்த ஒவோர் மனிதன், விக்கிரஹவணக்கத்தை விடுத்து ஏகதெய்வத்தை மாத்திரம் வணங்க வேண்டுமென்றும், இறைவன் ஒருவன் மாத்திரமே உளனென்றும், ஜனங்களெல்லோரும் கருணாநிதியும் சகல பரிபாலகனுமான அந்த சிருஷ்டிகர்த்தாவினை மட்டுமே வணங்கவேண்டுமேயன்றி வேறெதையும் வணங்கக் கூடாதென்றும் உபதேசித்தனர். தமது விசுவாசமும் போதனைகளும் தெய்வீகமான உயர்தர போதனையின் பயன்களெனவும் இம்மனிதர் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். முதன்மையாக தமது தூதைப்பற்றி இவர் பிரசங்கித்தது தமது நண்பர்களிடமும் சொந்த தேசத்தினரிடமுமே தான். தமது ஆருயிர்த் துணைவியாகிய அருமை மனைவியும், மற்றும் சில நண்பர்களும் தான் முதன் முதலாக இப்புதுத் தீர்க்க தரிசியினது சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்டனர். ஆனால் பெரும்பான்மை ஜனங்கள் இவரை யோர் பித்தனாகத்தான் கூறினர். நாலு வருடங்களுக்கிடையே மிகத்தீவிரப் பிரசாரம் செய்ததின் பயனாக நாற்பது பெயர்கள்தான் அன்னவரை பின்பற்றினார்கள். எக்காலமும் பரலோக விஷயங்களைக் குறித்தே பேசிக்கொண்டிருந்த இவரை பின்பற்றுவோரைத்தான் கிடைப்பரோ வென்று அக்காலத்திய ஜனங்கள் முதலாவதாக சந்தேகித்தனர். ஆனால் பயனென்ன வாயிற்று? பரம்பரபழக்க மூலம் மேன்மையுற்றதெனக் கொண்ட அன்னவர்களது மதத்தின்கண் சில சீர்த்திருத்தங்களை செய்வதற்கு அத்தேசவாசிகள் தயாராக விருந்தனர்.

ஆனால் இப்புது தீர்க்கதரிசி யுடைய தூதானது திவ்வியத்தன்மை பொருந்தியதா அல்லவா வென்பதை அக்கூட்டத்தினர் எங்ஙனம் அறியக்கூடும்? தங்களுக்கிடையே பிறந்து வளர்ந்து பிற்பாடு இறைவனின் தீர்க்க தரிசிதானென்று வாதாடும் இம்மனிதன் மற்ற வர்களுடைய சகாய சககாணங்கள் அதிகமாக சம்பாதிப்பதற்காக உபயோகித்ததான வோர் சூழ்சியல்லே இது என்று அவர்கள் எங்ங னம் அறிவார்கள்? அவர்கள் வணங்கும் விக்கிரகங்களுக்கு ஒரு எறும்பைகூட சிருஷ்டிப்பதற்கு முடியாதென்றும், ஒரு எறும்பு அவை யில் நின்றும் ஏதேனும் அபகரித்துவிடின் அதனை திரும்பி வாங்கு வதற்கு பிரஸ்தாப விக்கிரகங்களுக்கு முடியாதென்றும், ஒரு எறும் பினது இடையளவேனும் சக்தி இவ்வுலகிலோ அன்றி அவ்வுலகிலோ இல்லை யென்றும் இப்புது தீர்க்கதரிசியாகிய இரு உலகிற்கும் வள்ள லாம் தீர்க்க தரிசிகளுக் கெல்லாம் தலைவரும் கடைசி தீர்க்க தரிசியும் வல்ல இறைவனது சொல்லொணு அன்பருமாகியஎம்பெருமானர் முஹ ம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் (இப்பெரியாரைப்பற்றித்தான் யாம் இங்கு பிரஸ்தாபித்தது) உபதேசித்த காலை விக்கிர ஆராதனைக் காரராக விருந்த புரோஹிதர்களும் அன்னவர்களை பின்பற்றினோர்க ளும் சொல்லொணு சினங்கொள்ளலாயினர். தங்களது தெய்வங்களை—விக்கிரஹங்களை—இங்ஙனமோர் மனிதன் பரிஹசிப்பதைக கேட்டு பொருத்திருப்பதற்கு அவர்களுக்கு கிஞ்சிற்றும் முடியாமலாயிற்று. "நாம் அனைவர்களையும்விட புத்திசாலியென நடிக்கவும, நாம் அனைவர் களும் முழுமூடர்களும் மரத்தைவணங்குவோ ரெனவும் கூறி நம்மை பரிஹசிக்கவும்செய்யுகின்ற இம்மனிதன் யார்" என்று அவர்கள் சினங் கொண்டவர்களாய்க் கேட்கத் துணிந்தனர். அவர்கள் எம்பெருமானர் முஹம்மது முஸ்தபாரசூலேகரீம் (ஸ-ல்) அவர்களை உபத்ரவிப்போ மென்றும் மற்றும் கூறி அதற்கென முயன்றகாலை பெருமானர் அவர் களின் சிறியதந்தயாராகிய அபுதாலீப் எம்பெருமானர் நபிகள் நாயகம் (ஸ-அ) அவர்களை அழைத்து இச்சன்மார்க்க உபதேசம் நிறுத்தி விட்டு மௌன விரதம் அனுஷ்டிக்கும் பொருட்டு வேண் டிக் கொண்டனர். நாட்டின் பிரமுகர்களின் கோபத்திற்காளாகி தங் களுக்கும் தங்களைப்பின்பற்றி யிருக்கின்ற அச்சிறுகூட்டத்தினர்க்கும் ஏன் அபகடத்தை சம்பாதிக்கின்றீர்கள் எனக் கூறினர். ஆனல் பெரு மானர் (ஸ-அ) அவர்கள் இதற்கு அளித்த பதில்யாது? "பனிப்பகை யனை (சூரியனை) எமது வலதுகையிலும், பனிமதியை (சந்திரனை) எமது இடது கையிலும் வைத்து கொடுத்தீர்களாயினும் சரி வல்ல இறைவ னும் அல்லாஜல்ல ஜலாலஹூவினுடைய தூதை உபதேசிக்காமல்

முடியாதென்பதுதான் அவ்வுலகரட்சகன் அஞ்சா நெஞ்சத்துடன் பிரஸ்தாபித்தது. பெருமானார் நபிமுஹம்மது (ஸ-அ) அவர்கள் தமது சன்மார்க்கவுபதேசத்தை சகலஜனங்களுக்கும் அறிவித்து திருமக்காவை தரிசிக்கச் சென்ற அன்னியதேச மக்களேயும் இந்த சன்மார்க்கத்தின்கண் அழைக்கவும், நாளடவில் அன்னவரை பின்பற்றுவோர்களின் எண்ணிக்கை பெருகவும் செய்தது. எதிரிகளின்பகைமையும் விரோதமும் நாளடைவில் பெருகிக் கொண்டேவந்தது. எம்பெருமானார் முஹம்மது நபி (ஸ-அ) அவர்களே திரேக உபத்திரவம் செய்வதற்குகூட ரகஸ்யமாயும் பகிரங்கமாகவும் பகைவர்கள் ஏற்பாடு செய்யலாயிற்று. எனினும் இறைவனது இணையிலாக் கருணை அன்னவரை ஆதரித்து வந்தது. நபி நாயகத்தை (ஸ-அ) பின் பற்றினோர்களுடைய எண்ணிக்கையானது நிமிஷந்தோறும் அதிகரித்து வருவதைக் கண்ணுற்று விக்கிரவணக்கக்காரர்களுக்கு மன ஆறுதலில்லாமலாயிற்று. பகைமையும் அதிகப்பட்டுவிட்டது. எனவே முஸ்லீம்களில் ஏழைகளும் உதவிபற்றோர்களுமான பலரையும் அவர்கள் சமயம் பார்த்து பிடித்து பற்பல இம்சைகள் செய்யலாயிற்று. சிலரைப் பிடித்து கண்களேக் கெடுத்து கபோதிகளாக்கினர். மற்று சிலரை வெய்யிலின் கடுமையால் காய்ந்து பழுத்த மணலின்மீது மலர்த்திக் கிடத்தி அடிக்கவும் வேறுசிலரை கழுத்தில் கயிறுத்திக் கட்டி தெருவில் படுக்கவைத்து கிஞ்சிற்றும் இரக்க மின்றி பலர் சேர்ந்திழுக்கவும் அதன் மூலம் அவர்களின் சரீரத்திலிருந்து ரத்தம் சிதறி வொழுகவும் இன்னும் சிலரை எரியும் நெருப்பின்மீது படுக்கவைக்கவும் மற்றுமித்தகைய அநேக அனியாய அக்ரம அடாச் செயல்களே அணுவளவும் ஈரமில்லா நெஞ்சத்துடன் இரக்கமின்றி செய்யத்தலைப்பட்டனர். ஆ! ஹா! என்ன கொடுமை! என்ன பிடிவாதம்! எம்பெருமானார் முஹம்மது (ஸ-அ.) அவர்களுடைய சன்மார்க்கவுபதேச சமாச்சாரத்தின் உண்மையுற்ற தன்மையையோ அதின் மகிமையையோ அக்கல் நெஞ்சர்கிஞ்சிற்றும் நினைத்தார்களா? சில முஸ்லீம்களே அப் பைசாசக் கொள்கையை புடையவிரோதிகள், அன்னவர்கள் இஸ்லாத்தைவிட்டு விலகுமளவும் ஹிம்சித்தனர். பலஹீனவிசுவாசமுடைய சிலமுஸ்லீம்கள் அக்கல்நெஞ்சர்களின் இரக்கமற்ற ஹிம்சைகளே சகிக்கவொண்ணுமல் தற்காலத்திற்கென்று முஹம்மதின் (ஸல்.) உபதேசத்தை கைவிடலாயிற்று. குப்பார்களுடைய (அவிசுவாசிகள்) இத்தகைய உபத்திரவங்கள் சகிக்கமுடியாமலான பொழுது உண்மைவிசுவாசகளுடையபாதுகாப்பை நினைத்து அபிஸீனியாதேசத்தின்கண் அடைக்கலம் புகுந்துகொள்ளும் பொருட்டு தம்மை பின்பற்

றினவர்களுக்கு பெருமானுர் (ஸ-ல்) கட்டளை பிறப்பித்தனர். நபுவத்தின் (நபித்தன்மையின்:—தீர்க்கதரிசன நிலைமையின்) ஐந்தாம் வருடத்தில்தான் தம்மைபின்பற்றின பதினைந்து பேர்களுடன் எம்பெருமானுர் (ஸ-அ) அவர்கள் அபிஸீனியா தேசத்திற்கு சென்றது. இச்சமயம் முஸ்லீம்களின் எண்ணிக்கை மிகச்சுருக்கமாக இருந்தபோதிலும் அன்னவர்கள் உலக சரித்திர பிரசித்தமான பலே அரிய சம்பவங்களுடையவும் கர்த்தாக்களாகயிருந்தனர். அன்னவர்கள் இவ்வரிய உண்மைக்கென்று—தங்கள் குருவின் சொற்படி சகலத்தையும் தியாகம்செய்ய தயாராகவிருந்தனர் (அங்ஙனம் செய்துமிருக்கின்றனர்) ஆனுல் இஸ்லாத்தை அன்னவர்களது உயிருக்குயிராகவே கருதியிருந்தனர். தெய்வவழியில் உயிர்வாழ்வதற்கும் உயிர் துறக்குவதற்கும் தயாராக இருந்தவோர் சிறுசபையாகவே அன்னவர்கள் இருந்தனர். அவர்கள் சுயநலவெறுப்பின் உயர்தர வழிகாட்டிகளாகவுமிருந்தனர். அபிஸீனியா தேசத்தின்கண்ணும் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸ-அ) அவர்கட்கும் அன்னவர்களை பின்பற்றினோர்களுக்கும் ஆறுதல் கிடைக்கவில்லை. விக்கிரஹ ஆராதனைக்காரர்களான கல்நெஞ்சர்களின் கடுமையான உபத்திரவம் அங்கும் தலை சிறந்தோங்கினமையால் பெருமானுர் (ஸ-அ) அவர்கள் தாயிபுக்குச் செல்ல தீர்மானித்தனர். குன்றுகளும் குழிகளும் கடந்து நாற்பது மைல்தூரம் நம்பிக்கையுடைய சீடருடன் நபிகள் நாயகம் முஹம்மது (ஸ-அ) அவர்கள் பிரயாணமாயினர். தாயிபுசென்று நோக்கும் காலையிலோ அன்னவர்களின் திவ்விய உபதேசங்களை கேழ்ப்பதற்கு ஆரையும் கண்டிலார்; சின அனல் பொரி சிதறும் கண்களால் பெருமானுர் (ஸ-அ) அவர்களை ஜனங்கள் பார்க்கின்றனர். "ஆ! இங்குவந்திருக்கின்ற இவன் பித்தனும் போக்கிரியும் தானென்று அவர்கள் கூறுகின்றனர்; சிலர் பெருமானுர் அவர்களை கூரிய கற்களால் கருணையின்றி அடித்தனர். திருமேனியில் நின்று ரத்தம் தரைநனைய தாரை தாரையாய் ஒழுகிற்று. ஆ! ஹா! விந்தையே! விந்தையே! தாமசகுணம் நிறைந்த இத்தரணிக்கு திவ்விய வொளி அளித்து ஈடேற்றம் செய்யவந்த வள்ளலை இதோ இரக்கமின்றி இடுக்கணுறச் செய்யும் உலகமே உன் அறியாமையின் அளவுதான் என்னே! என்னே! நான் என்னென்று கூறுவேன். இங்ஙனம் கொடிய பாதகர்களான தாயிபுதேசமக்கள் தங்களது அறியாமையின் பெருக்காலும் விக்கிரக வணக்க செருக்காலும் பெருமானுர் (ஸ-அ.) அவர்களை விரட்டிவோட்டிவிட்டனர். கூரியகற்களால் அடிபட்டு மிருதுமேனி காயமுற்று இரத்தம் தாரை தாரையாக ஒழுகும் சரீரத்துடன் அசைந்தலுத்தவ

ராய் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கமாநகருக்கே திரும்பி விட்டனர். தங்களது உயிர் பகைவரை கண்ட காலை மக்கமா நகரவாசிகளின் கோபாக்கினி கொழுந்து விட்டெரிந்ததின் பயனாக பெருமானார் (ஸ-அ) அவர்களை கொலைசெய்து விடுவோ மென்று அன்னவர்கள் ஒருவருக்கொருவர் வாக்குறுதி செய்துக் கொண்டனர். இன்னிலமையில் கோமானார் முஹம்மது (ஸ-அ) அவர்களுடைய நிலமை மிக பரிதாபகரமாக இருந்தது. எனவே அன்னவர்கள் குகைகளில் மறைந்து காலம் தள்ளவும்; மாறு வேடம் பூண்டும் மற்றும் தம்மை காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு தூண்டப்பட்டனர். சிலசந்தற்பங்களில் பரிசுத்த இஸ்லாத்தின் விரோதிகட்கு வெற்றி கிடைக்கக் கூடுமென்ற நிலமையிலும் சென்றதுண்டு. ஆனால் வெற்றிபெற முடியவில்லை. இஸ்லாமின் கடைசித்தருணம் அக்காலமாபிருந்ததா? இல்லை. பதிமூன்றும் வருடத்தில் விரோதிகளால் நாலு புறமும் சூழப்பட்ட முஸ்லீம்கட்கு மக்கமா நகரின்கண் ஆதரவில்லையென கண்ட காலை பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸ-அ) அவர்களும் தம்மை பின்பற்றினோர்களும் வல்ல இறைவனருளால் மதினமா நகரின்கண் அடைக்கலம் புகுந்தனர். ஹிஜ்ரி எட்டாம் வருடத்தில் பெருமானார் முஹம்மது நபி (ஸ-அ) அவர்கள் தம்மைப் பின்பற்றின ஆயிரம் முஸ்லிம்களுடன் தாங்கள் எந்த நகர கோபுர எல்லைகளில் நின்றும் எதிரிகளால் துரத்தப்பட்டனர்களோ அங்கேயே முஸ்லீம்கள் சுத்த சத்திய இஸ்லாத்தின் வெற்றிக்கொடியை வல்ல இறைவனருளால் நாட்டினார்கள். அது மட்டுமா? ஒரு நூற்றாண்டு காலம் நிறைபெறுமுன் இஸ்லாமெனும் சத்திய சூர்யபிரகாசமானது இந்திய தேசத்தின் கண்ணுள்ள டெல்லி முதல் ஸ்பெயின் தேசத்தின் கண்ணுள்ள கிராணடாவரைக்கும் பிரகாசிக்கவும் அதின் பயனாக இஸ்லாமிய அனுஷ்டானங்கள் தலைசிறந்தோங்கவும் செய்யலாயிற்று. கடைசி தீர்க்கதரிசியும் (நபி) தீர்க்கதரிசிகள் அனைவருக்கும் சிரோன்மணியுமாகிய இறைவனின் இத்திருத்தூதரது திருநாமத்தை இன்று சுமார் நாற்பத்து ஐந்து கோடிமக்கள் பயபக்தியுடன் கொண்டாடவும், அன்னவரின் அரிய உபதேச சன்மார்க்க நெறியாம் சுத்த சத்திய இஸ்லாத்தை விசுவாசித்து அனுஷ்டிக்கவும் செய்துவருகின்றனர். ஆ! ஹா! என்ன விந்தை! உலக மக்களே பாருங்கள்! பாருங்கள்! ஒரு காலத்து அறிவிலி, பித்தன், இந்திரஜாலக்காரன் என எள்ளி நகைக்கப்பெற்ற அப்புண்ணிய புமானை, அஞ்ஞான இருள் விலக்க வந்த மெய்ஞ்ஞான ஜோதியை இன்றைக்கு இதோ கோடான கோடி மக்கள் வல்ல இறைவனும் அல்லாஹு சுபுஹானவத ஆலாவின் நபியென (தீர்க்கதரிசி)

கொண்டாடுகின்றனர். உலகம் முழுவதும் நபிகள் பெருமானைப் பாராட்டுகின்றது. அவருடைய போதனைகளைப் போற்றுகின்றது. ஆ! ஹா! இதுதான் பரிபாவனமாகிய சுத்த சத்திய இஸ்லாத்தின் பெரும் வெற்றி. உண்மைதான் வெற்றி பெறும் என்பது உண்மையே. முஸ்லீம் அன்பர்காள்! நீங்கள் அடைந்திருக்கும் இஸ்லாமின் அந்தஸ்தை உணர்வீர்களாக! உணர்ந்ததின்படி ஒழுகுவீர்களாக! சீருடன் ஒழுகி சிறப்புடன் ஜெயம் பெறுவீர்களாக! இஸ்லாத்திற்கே என்நாளும் ஜெயமுண்டாவதாக! ஆமீன்.

முஸ்லீம் அல்லாத இதர மதநண்பர்களே! இவ்வபார அரிய வெற்றியை கண்ணுற்றுவது இஸ்லாத்தின் உண்மையை அறிய முயல்வீர்களாக! உண்மையை விரும்பும் மக்கட்கு இவ்வரிய உண்மையை அளிக்கும் உண்மை பெருவாரிதியாம் இறைவன் உங்களுக்கு இரங்குவானாக. நீங்களும் இவ்வுண்மையை அறிந்து எல்லோரும் சுகமே உய்வீர்களாக!

மார்க்கப் பிரசாரம் முஸ்லிம்களின் கடமையா?

ஜனப், எம். ஏ. அபுல் ஹாஷிதா சாஹிப்.

இப்புவியின் கண் தோன்றியிருக்கின்ற ஒவ்வொரு சமுதாயமும் சமுதாய சம்பந்தமாகிய அவர்களுடைய மேன்மையைக் காப்பாற்றி நிலைநிறுத்துவதிலும், சிருஷ்டிகர்த்தாவிடம் அவர்களுக்குள்ள கடமையை நிறைவேற்றி வைப்பதிலும் அவர்களது வாழ்க்கையின் நோக்கத்தை பயன்பெறச்செய்வதிலும் அவாவின்மையைக் காண்பிக்க ஆரம்பித்தக் காலம் வரை மாத்திரமே அச்சமுதாயமானது உயிருடன் இருந்ததேயன்றி வேறன்று. இதற்கு சரித்திரத்தில் அனேக சான்றுகளுமிருக்கின்றன. இங்ஙனமே முஸ்லீம் சமுதாயமும் பிரத்தியேகமான ஓர் உன்னத நோக்கத்துடன் கூடித்தான் வல்ல இறைவனருளால் அதன் ஸ்தாபகர்மூலம் இப்புவியின்கண் தோன்றியிருக்கின்றது. சரித்திரத்தின்கண் இந்நோக்கமானது எங்ஙனம் ஒப்பற்றதாயிருக்கின்றதோ அங்ஙனமே மிகவும் மகிமையுற்றதாகவும் இருக்கின்றது. சரித்திர ஆசிரியர்களும், புது விஷயங்களைக் கண்டுபிடிக்கும் ஏனைய மேதாவிகளும் இப் புவியின்கண் கொண்டு வந்திருக்கின்ற சகல சரித்திரசாட்சிகளும், ஏனையகலா விஷயங்களும்

மிக ஆச்சர்யங்கள்தானெனக் கூறுவதுமிகையாகா. "இப்புவியானது அதனுடைய சமாசார பொக்கிஷத்தை திறந்து விடுவதற்கு ஆரம்பமாயிற்று! பேசும் தன்மையற்ற கல்நாவுகள் சென்ற காலத்தைப் பற்றி வர்ணனைசெய்யத் துடங்கிற்று!! ஆனல் மானிடவர்க்கத்தினது குணம், நன்மை, சீர்திருத்தம், என்கிற சிரேஷ்டமான நோக்கங்களுடன் இப்புவியின் கண் தோன்றியுள்ளது முஸ்லீம் சமுதாயம் மட்டுந் தானென சரித்திர ஆதாரங்கள் சான்று பகருகின்றன.

இவ்வுயரிய நோக்கத்தைப்பற்றி நாம் எங்கே தேடவேண்டியது? முஸ்லீம் சமுதாயத்திற்கு குறிப்பாகவும், மானிட வர்க்கத்திற்கு பொதுவாகவும் சன்மார்க்க தரிசனம் செய்கின்ற பரிசுத்த குர்ஆன் ஷரீபுதான் இவ்வரிய விஷயத்தைப்பற்றி மிக பிரகாசமளித்திருக்கின்றது. அது (குர்ஆன்) முஸ்லீம்களை அன்னவர்களின் வாழ்க்கையின் நோக்கத்தைப்பற்றி தெரியப்படுத்தவும் அதனை பயனுறச்செய்ய வலியுறுத்தவும் செய்கின்ற சந்தர்ப்பங்களி லெல்லாம் அவர்கள் இயற்கையிலேயே அங்ஙனம்செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் தானென்றும், இல்லையேல் அவர்களுக்கு இப்பிரத்யேக அந்தஸ்தினல் அளிக்கப்பட்டிருக்கின்ற மிகவும் மேன்மையுற்ற அம்மகிமைக்கு அன்னவர்கள் அருகர்களல்லாமல் ஆய்விடுவார்களென்றும் எற்கெனவே அறியவேண்டியதற்கு முதலாவதாக இவ்வொரு பிரத்யேக நிலமையைத் தான் அன்னவர்களது முன்னிலையில் பிரத்தியட்சப்படுகின்றது. ஆனது பற்றித்தான் "மானிடவர்க்கத்தின் நன்மைக்கென உயர்த்தப்பட்டவர்களில் மிகவும் சிரேஷ்ட சமுதாயத்தினர் நீங்களேயாம். நீங்கள் நல்லதை உபதேசிக்கவும் தீயதை விலக்கவும் செய்கின்றீர்கள்" என திருக்குர்ஆன் கூறுகின்றது.

இவ்வாக்கியத்தினது இரண்டாம் பாகம் முதல் பாகத்தினுடைய நோக்கந்தானென்று அறிஞர்கள் யாவர்களும் அபிப்பிராய பேதமின்றி ஒப்புக்கொள்ளுகின்ற ஒன்றேயாம். அதானது நமது வாழ்க்கையின் நோக்கமானது "உலகத்தை சீர்திருத்தம் செய்வது மாத்திரந் தான்". ஆனது பற்றிதான் நாம் ஏனையோர்களைவிட சிரேஷ்டர்களாயி விட்டுள்ளோம். இச் சீர்திருத்தம் உண்டாகின்றது "நல்லதை உபதேசித்தல் தீயதை விலக்குதல்" யெனபிரமாணங்களை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதில் தான் அமைந்திருக்கின்றது. ஆனல் முஸ்லீம் சமுதாயமானது மிகவும் மேலான இந்நோக்கத்தை அசட்டைக் கோடியில் ஒதுக்கி விடுமாயின் நிச்சயமாக சிரேஷ்ட சமுதாயமெனும் மிக கௌரவம் புனைந்த பெயரை அன்னவர்கள் என்றென்றைக்கும் நஷ்டப் படுத்தினவர்களா வார்களென்பது திண்ணம்.

இவ்வரிய விஷயத்தைப்பற்றி திருக்குர் ஆனில் வேறோரிடத்தில் முன் கூறினதை விட விசாலமாகவும் மிகவிளக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றது "இங்ஙனம் நீங்கள் மனிதவர்க்கத்தினுடைய சாட்சிகளும் ரசூல் (ஸ-ல்) உங்களுடைய சாட்சியுமாக இருப்பதற்காக, நாம் உங்களை மிக சிரேஷ்டமான சமுதாயமாக ஆக்கியிருக்கின்றோம்." இவ்விதம் முஸ்லீம்களது வாழ்க்கையின் நோக்கத்தை மிகத் தெளிவாகக் கூறுகின்ற வாக்கியங்கள் திருக்குர்ஆனில் ஏராளமா யிருக்கின்றன. அவைகளில் ஒன்று பின்வருமாறு "அவர்களை நாம் பூமியில் ஸ்திரப் படுத்தினுல் அவர்கள் ஒழுங்காக தொழுகவும் ஜக்காத்து கொடுக்கவும் நல்லதை உபதேசிக்கவும் தீயதை விலக்கவும் செய்வார்கள்." ஆஹா! எவ்வளவு அருமையாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியத்தின் கண் முற்கூறின நோக்கத்தை மட்டுமன்றி, உலக சீர்திருத்தத்திற்கும் அவசியமான சில நற்கருமங்களைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கின்றன!

என்னருமை முஸ்லீம் சகோதர சகோதரிகாள்! உங்களது முக்கியமான கடமை இப்புவியின் கண் உண்மையான ஏக தெய்வ வணக்கத்தை நிலைநாட்டுவது தானென்று உள்ளங்கை நெல்லிக்கனி போன்று நன்று புலனுகவில்லையா? ஈமானுள்ள உங்களது இருதயத்தின்கண் மேற்கூறின பொறுப்பு வாய்ந்த உங்களது கடமை பசுமரத்தாணி போன்று பதியவில்லையா? ஆஹா! என்னன்பர்காள்! முஸ்லீம்களாகிய நாம், வல்ல இறைவனுல் வற்புறுத்தப்பட்ட மேற்கூறின விலக்கமுடியாத கடமையை உணர்ந்த பின் அனுஷ்டான முறையில் காண்பிக்காவிடில் நாளை கியாமத்தில், மஹஷரென்றும்மைதானத்தில், பெற்றோர் மக்களுக்கோ, கணவன் மனைவிக்கோ, மனைவி கணவனுக்கோ, சகோதரன் சகோதரிக்கோ, சகோதரி சகோதரனுக்கோ இங்ஙனம் ஒருவருக்கொருவர் உதவி செய்யவோ, உதவியை எதிர் பார்க்கவோ, முடியாத தருவாயில், மகா நெருக்கடியான வேளையில், மிகபயங்கரமான சந்தர்ப்பத்தில், வல்ல இறைவனுக்கு முன்னில், பயத்தால் மனமொடுங்கி, உடல் நடுங்கி, கிடுகிடுத்து, புத்திமங்கி, கண்மயங்கி, நாவரண்டு, தியங்கி, மயங்கி, நிற்கும் தருவாயில், நாம் எங்ஙனம் கணக்குக்கொடுக்கமுடியும்? அந்தோ! அன்பர்காள்! நமது திறமைகள் ஒன்றும் அங்கு செல்லாது. சாமர்த்தியங்கள் பலியாது. தந்திரங்கள் செல்லாது. பணமோ படிப்போ அங்கு வாலாட்ட முடியாது. சிபாரிசோ, லஞ்சமோ அச்சமயம் நம்மைக் காப்பாற்றுமென்று எண்ணவேண்டாம். அன்பர்காள்! காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளுங்கள்! உயிருள்ள பொழுதே நமது

கடமையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்! இன்றேல் நாளை மீளாத் துயரத்தில் ஆழ்வீர்கள். எனவே, நமது கடமையைச் செய்யும் பொருட்டும், மனிதவர்க்கத்திற்கு பொதுவில் உதவி செய்வதற்கும், சொந்த சமுதாயத்தை அபிவிர்த்தி செய்து இறைவனால் அழைக்கப்பெற்ற சிரேஷ்டசமுதாய மெனும் புனிதப் பெயரை காப்பாற்றும் பொருட்டும், மற்றும், சக்திவாய்ந்தோர் நிதி (பைதுல்மால்) ஏற்படுத்தி சன்மார்க்கவழியின் வாயிலில் நின்று கொண்டு துன்மார்க்கத்தில் சஞ்சரிக்கின்ற சகலருக்கும் ஈடேற்றம் பெறுவதற்குறிய வழிகாண்பித்து கொடுக்கவும், தவறிப் போகின்ற சகலரையும், அழைத்து சன்மார்க்கத்தில் வொழுகச் செய்யவேண்டியதும் ஒவ்வொரு முஸ்லிம்களுடையவும் விலக்கமுடியாத கடமையேயாம். ஆனால் மேற்கூறின காரியங்கள் சகோதரத்வமென விஷயசூசிகையை அலங்கரிப்பதற்கும், காயிதமும் மையும் செலவுசெய்வதற்கும் வேண்டிமாத்திரம் தானா என வினவும், இவ்வினாவிற்கு சமாதானம் முஸ்லீம்களது மகிமைவாய்ந்த நற்கிரியைகளால் பிரகாசமாயிருக்கின்ற அச்சரித்திர சாட்சியங்களில் கண்ணுற்றுக்கொள்வீர்களாக! இன்றேல் முஸ்லீம்களது, ஈயுந் தன்மை, பாரபட்சமற்ற மனோதத்வம், பரந்த நோக்கமுற்ற மனோநிலமை, சமசிருஷ்டிகளாகிய மனிதவர்க்கத்தின் மீதுள்ள களங்கமற்ற அன்பு, சன்மார்க்க ஒழுக்கம் முதலிய அரும்பெரும் குணங்களைப் பற்றி இனிமையான சங்கீதம் செவியுற்று மகிழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களிடம் தேடியறிவீர்களாக!

வல்ல இறைவனும் அல்லாஹு சுபஹானஹுவத் ஆலாவுடைய பூமியின்கண் அதின் உடையோர்களாக அவனால் நியமிக்கப்பட்டிருக்கின்ற முஸ்லீம்கள், ஏனையசமுதாயத்தினரால் செய்யமுடியாத நிலமையிலுள்ள ஆச்சர்யகரங்களான விஷயங்களைத்தான் செய்திட்டுள்ளதென்று உலகசரித்திர ஆராய்ச்சியுடைய பெரியோர்கள் யாவர்களும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளுகின்றவொன்றேயாம்.

உலக சீர்த்திருத்தத்தின் பொருட்டு கருணாநிதியாம் அல்லா ஜல்லஷானஹுவதாலாவால் நியமிக்கப்பட்ட அவ்வுலகஏற்கைச் சன்மார்க்க உபதேசகர்த்தாவாகிய நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபாற சூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள், சர்வவுலகத்திற்கும் ஜோதியை அளிக்கின்ற சன்மார்க்க தீபமும் யேந்திக்கொண்டு உலகக் கண்களில் நின்றும் மறைந்திருந்த அப் பூபாகத்தின் இருளடைந்த ஓர் மூலையில் நின்றும் எழும்பி மிக ஒளிவான பிரகாசத்துடனும், மிக சக்தி வாய்ந்த தேஜசுடனும் கூடி மிகக்குறுகியதோர் காலத்திற்குள் உலகத்தை முழு

வதையும் ஆசிர்வதித்தனர். தரிசித்தவர்களெல்லாம் தரிசித்தனர்; செவியுற்றோர்களெல்லாம் செவியுற்றனர்; அன்னவர்களன்றோ ஜய சீலர்கள்! அல்லாஹுத்தஆலாவில் நின்றுமுள்ள ஹிதாயத் (நேர்வழி) வெளியாயிற்று! அவனது கடைசி விளம்பரம் பிரசித்தமாயிற்று! ஆ! ஹா! அன்பர்காள்! என்ன அற்புதகரமான ஓர் மாற்றம்!! உற்று சிந்தித்து உணருங்கள்! உணருங்கள்!! இதுதான் ஒவ்வொரு முஸ்லீம்களுடையவும் விலக்க முடியாக் கடமையாகும். பாருங்கள், அல்லாஜல்ல ஷானஹு நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ரசூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களிடம் இங்ஙனம் கட்டளை யிடுகின்றான். "ஏ! அல்லாவின்ரசூலே! உங்கள தரப்பில் (இறைவனில்) நின்றும் உங்களுக்கு இறக்கித் தந்திருக்கின்ற யாவும் நீங்கள் எல்லா மனிதர்கட்கும் தெரியப்படுத்துவீர்களாக. அங்ஙனம் செய்ய வில்லையாயின் இலாஹியி (இறைவ)னுடைய கட்டளைகளை ஒன்று கூட தாங்கள் அன்னவர்கட்கு தெரிவித்து கொடுத்ததில்லை." நம்பெருமானார் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபாரசூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து தான் இறைவனது இந்நோக்கத்தை நிறைவேற்றினாரென்பது சரித்திர ஆராய்ச்சியுடைய ஆன்றோர்கட்கு இற்றும் எற்றும் அறிவதற்கு சுலபமான ஒன்றன்றோ? ஆ! முஸ்லிம்களாகிய அன்பர்காள்; நமது நாயகமவர்களைப் பின்பற்றும் உம்மத்துகாள்! மேற்குறித்த இப்புனிதநோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டன்றோ நமது உயிருக்குயிராம் நமது நாயகம் (ஸ-ல்) அவர்கள் தமது இனஜனத்தாரால் வெறுக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும், மாத்திரமல்ல துன்புறுத்தப்பட்டதும்?' ஆ! ஹா! அன்பர்காள்! இருஉலகிற்கும் வள்ளலாகியதான், நபிநாயகம் (ஸ-ல்) பலனாட்கள் தொடர்ச்சியாக பட்டினியாக யிருக்கவும் அதன்மூலம் நிமிர்ந்து நடக்கமுடியாத தருவாயில் தமது புனிதயுதரத்தின்மீது ஓர் கல்லைவைத்து கட்டும்படியான நிலமைக்கு வந்ததும், அன்பியாக்களுக்கெல்லாம் சர்தாராகிய தமது திருக்கன்னத்தின்மீது இப்பாழ்வுலகின் பூழியாம் ஒரு கேவல யெஹூதியால் அறையுண்டதும், புருக்கென்னும் பரலோக வாகனத்தின்மீதேறி, மிஃராஜென்னும் புனிதயாத்திரை செய்த தமது திருமேனி கற்களால் அடிப்பட்டதும், வஹதானியாத்தென்னும் ஏக தெய்வ வணக்கக்கொள்கையாம் வான நறுமணம் கமிழும் வார்த்தைகள் வெளிவந்த புனிதவழியாம் தமது திருத்தொண்டையானது கொடும்காபர்களாகிய குறைஷிகளால் இறுக்கப்பட்டகச்சையின் கச்சிதத்தால் மூச்சுதிணறி தமதுயிராம் இருவுலகவொளியும் மங்கக்

கூடிய தருவாயில், அவ்வளவு அபாயநிலைமையில் யெத்தினதும்—தமது ஆருயிர்தோழரும் அருமை மாமனருமாகிய ஹஜ்ரத் அபூபக்கர் சித்திக் (ரலி) அச்சமயம் வந்து சேராவிடில் ஆ! ஹா! எங்நாயனே! நபிநாயகத்தின் நிலமையென்னவாயிருக்கும்! ஆ! ஹா! சிந்திக்கக் கூட எம்மால் முடியவில்லையே! இன்னிலமையிலெல்லாம் படாதபாடு பட்டதெதற்காகவென அன்பர்காள்! நீங்களறியவில்லையா? மேற்கூறின அல்லாவுடைய உத்தரவாம் சன்மார்க்கநெறியாகிய இஸ்லாத்தை பரவச் செய்யவல்லவோ? அன்புற்ற முஸ்லீம்காள்! நாயகத்தை பின்பற்றும் பெரியோர்காள்! நாம் அல்லாவுடைய உத்திரவின்படி நமது நாயகம் (ஸல்) அவர்கள் செய்ததுபோல் மேற்குறித்த புனிதகைங்கர்யத்தை நாமும் செய்யாவிடில், நாமும் உண்மை முஸ்லீம்களா. நாயகத்தை (ஸல்) பின்பற்றும் உம்மத்துகளென்று நம்மை சொல்வதற்கு இடமளிக்குமாவென்று நீங்களே யோசிப்பீர்களாக! மேற்கூறினவாறு அரும்பாடு பட்டு நமது நாயகம், (ஸல்) அப்புண்ணிய புருடசிகாமணி, ஸ்தாபித்த ஓர் சிறு சபையானது விடியற்கால சூர்யப் பிரகாசம்போன்று அந்தகார அஞ்ஞானத்தை அடியோடொழித்ததுமல்லாமல் அச்சபையினர் சென்றவிடங்களிலெல்லாம் அன்னவர்களது மகிமை இன்றைக்கும் நிலவுகின்றது. அஸ்ஹாபிமார்களும், தாபயீன்களும், தபாதாபயீன்களும் இமாம்களும், முஜ்தஹீன்களும், முஜாகிதீன்களும், முஸ்லிமீன்களும் பலவித சொல்லொணு இடுக்கணுற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் உடல்,பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்வதில் கிஞ்சிற்றும் அஞ்சாமல் எவ்வித வழிகளிளெல்லாம் சன்மார்க்க உபதேசம் செய்தார்களோ, அதெல்லாம் வல்ல இறைவனும்றப்பில் ஆலமீனுடைய மேற்கூறின கட்டளையை சிரமேற்கொண்டதின் பயனேயாம்.

திருக்குர்ஆனில் மனப்பூர்வமுற்று ஆராய்ச்சி செய்துபார்ப்போமாயின் சகல நபிமார்களுடையவும் ஜீவித நோக்கமானது தவ்ஹீதினை (ஏக தெய்வக்கொள்கையை) பிரசாரம் செய்வதும் அதனை ஸ்திரப்படுத்துதலும் அதற்காக ஜனங்களை அழைப்பதும் மாத்திரமாகயிருந்ததென்று கண் கூடாய்க் காணலாம். எல்லா நபிமார்களும் "முபல்லிக்" (மதபோதகர்) எனும் நாமதேயத்தை தான் சொந்தமாக அங்கீகாரம் செய்திருந்தது. அல்லா சுபுஹானஹுதஆலாவுடைய இவ்வனுக்கிரகம்தான் அன்னவர்களது அபிமானமாகயிருந்தது. சகல நபிமார்களும் தவ்ஹீதை மாத்திரந் தான் பரவச் செய்திட்டுள்ளதென்றும், ஷிருக்கை (இறைவனுக்கிணைவைப்பது) சகலதீச்செயல்களுடையவும் அஸ்திபாரமாக இருக்கிறதென்றுந்தான் அன்ன

வர்கள் தீர்மானித்திருந்த தென்றும் "அக்ருப்" வெனும் சூராவில் காண்கின்றோம். அன்னவர்கள் யாவரும் அல்லாவுடைய இக்கட்டளையை ஒரேவாக்கியத்தினால்தான் வலியுறுத்தச் செய்திருக்கின்றது.

ஹஜ்ரத்நூஹு (அ. ஸ) கீழ்கண்டவாறு பிரசங்கம் செய்திருக்கின்றார். "நான் எனதுரப்பினுடைய சமாசாரங்களை உங்களுக்குத் தெரிவிக்கவும் உங்களுக்கு நற்போதனை நல்கவும் செய்கின்றேன். அல்லாவில் நின்றும் நீங்கள் அறியாதவைகளை நான் அறிகின்றேன்."

ஹஜ்ரத் ஹூது(அ. ஸ)உபதேசித்ததும் இங்ஙனமேயாம்:—"யான் எனதுறப்பினுடைய சமாச்சாரங்களை உங்களிடம் தெரிவிக்கிறேன். யான் செய்வது உங்களுக்காகவுள்ள உண்மையான உபதேசமேயாம்."

ஹஜ்ரத் சாலிஹ் (அ-ஸ) இங்ஙனம் தெரிவித்தார் "யான் எனதுரப்பினுடைய சமாச்சாரங்களை உங்களுக்கு தெரிவிக்கவும் உங்களை உபதேசிக்கவும் செய்கிறேன். ஆனால், உபதேசிக்கின்றவர்களை நீங்கள் பிரியப்படுகிறதில்லை" மேற்கூறின இட்சாட்சியங்கள் யாவற்றினாலும் ஒவ்வொரு முஸ்லீமுடையவும் வாழ்க்கையின் நோக்கமானது "தப்லீக்" அல்லது இஸ்லாம் மதபிரசாரந்தானென்று நன்கு புலனாகுகின்றதல்லவோ? இன்னும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய திருவாக்கியங்களைக்குறித்து ஆழ்ந்தாலோசனைசெய்து பார்க்கும்காலையிலும் முஸ்லிம்களது கடமை "இஸ்லாம் மதப்பிரசாரம் அதாவது "தவ்ஹீதை" உபதேசிப்பதும்,பரிசுத்த கலிமாவை விளம்பரம் செய்வதும், அல்லாவுடைய கட்டளைகளை அநுசரித்தொழுகல் முதலியவை தானென்றும் தெளிவாக தெரியப்படுத்துதலுமேயாம். பரிபாலன கர்த்தாவாகிய (றப்பில் ஆலமீனான) அல்லாவில் நின்றும் அவனது தீர்க்கதரிசியாகிய (நபி) முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடமிருந்தும் நமக்கு கிடைத்திருக்கின்ற ஒவ்வொரு கட்டளைகளையும் உபதேசங்களையும் நாடெங்கும் பரவச்செய்யவேண்டியதும் ஜனங்களை சத்திபத்தினிடம் அழைக்கவேண்டியதும் முஸ்லிள்களான சகலருடையவும் கடமைதானென்று மேற்கூறின அத்தாட்சிகளால் நன்கு புலனாகுமென நம்புகின்றேன். "ஒரு வாக்கியமாயினும் கிடைத்தால் அது எனக்கு வேண்டாம். உலகத்தினர்க்கு தெரியப்படுத்துவீர்களாக." "இங்கு விஜயம் செய்திருப்போர்கள் விஜயம் செய்யாதவர்களுக்கு இந்த சமாச்சாரங்களை தெரியப்படுத்த வேண்டிய தவசியம் காரணம், செவியுற்றவர்களைவிட செவியுற்றவர்களில் நின்றும் செவியுற்று நினைவில் வைத்திருப்பவர்கள் ஏராளமுண்டு." விலக்கப்பட்டவொன்றை உங்களில் யாராவதொருவர் (மதப்படி விலக்கப்பட்டதை) கண்டால் உடனே கைகளால்

தடைசெய்து நிறுத்தவேண்டும். அதற்கு சக்தியில்லையேல், நாவு கொண்டு அவைகளை தடை செய்யவேண்டும். அதற்கும் முடியா விடில் மனதைக்கொண்டு விலகவேண்டும்! இக்கடைசி நிலைமை ஈமா னுடைய மிக கேவலமான பலக்குறைவான ஓர் நிலைமைதான்.''

''உங்களில் ஒவ்வொருவரும் ராஜாக்களேயாம், ஒவ்வொருவரிட மும் தங்கள் தங்கள் பிரஜைகளைப்பற்றிக் கேள்வி உண்டாகு மென்பது திண்ணம்.'' உங்களில் மிக உத்தமர் யாரெனில் ''குர்ஆனை காப்பவரும் கற்பிக்கின்றவர்களுமேயாம்.'' மேல் விவரிக்கப் பட்டுள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாக்கியங்கள் யாவும் தப்லீக்கினுடைய கட்டளை சொரூபங்களேயாம். கைபர் யுத்தத்தின் வெற்றித் தினத்தன்று காலையிலே முஸ்லீம் சைனியத்தின் தலைமை ஸ்தானம் றசூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஹஜ்ரத் அலி (ர-லி) அவர்களிடம் ஒப்புவித்த காலை, ''அவர்கள் நம்மைப்போல் ஆகும் வரையில் அவர்களுடன் (சத்துருக்களுடன்) போர் புரியட் டுமா?'' என்று அலி (ர.லி) கேட்டார். பெருமானார் நபி ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பதிலளித்தது இங்ஙனமே யாம்—''நீங்கள் அவர்களுடைய போர்க்களத்தில் பிரவேசித்தால் உடனே அவர்களை இஸ்லாம் மதத்திற்கு அழைக்கவும் அல்லாவிட மிருந்து அவருக்குள்ள உரிமையைபற்றி அவர்களுக்கு தெரிவிக்கவும் செய்வீர்களாக. அல்லாஹ்மீது சாட்சியமாக கூறுகிறேன். உங்க ளுடைய முயற்சியின் பயனாக அல்லாஹுத்த ஆலா ஒருவனையாயி னும் நேர்வழியிலாக்கினால் உங்களுக்கு அது திட்டமாகவே ஒரு சுமையுடன் கூடிய ஒட்டகம் கிடைப்பதிலும் மிக மேலானதாக விருக்கும்.''

அருமை முஸ்லீம் சகோதர சகோதரிகாள்! குர்ஆன் மூலமும் பரிசுத்த நபி. (ஸ-ல்) அவர்களுடைய திருவாக்கியங்களாலும் இவ்வளவு மேன்மை யளிக்கப்பட்டதும், சஹாபாக்களும் தாபஈன்களும், இமாம்களுமெல்லாம், சதாகாலமும் சகலவித தியாகங்களுடன் இரவு பகல் இளைப்பாராமல் செய்துவந்ததுமான, '' தப்லீக் (இஸ்லாம் மதப்பிரசார) வேலையை நாம் எங்ஙனம் அசட்டை செய்யக்கூடும்''?!

இஸ்லாத்தின் ஸ்திரமான ஸ்தாபனம் முதல் (நாயகம் முதல்) ஒரு நூற்றாண்டு வரையுள்ள இஸ்லாமியா சரித்திரம் ஒரு தடவையாவது வாசிப்பீர்களாக! வாசித்திருப்பின் நறுமணம்கமழும் மலர்க ளோடுகூடிய மிகமனோஹரமானவோர் நந்தவனத்தை நீங்கள் அதில் காணக்கூடும். அம்மலர்களில் நின்றும் புறப்பட்டிருந்த நறுமணம் தான் உலகின் நாலுபாகங்களிலும் நிறைந்து கொண்டிருந்தது! சுரும்

கக்கூறுவோமாயின், அக்காலத்திய முஸ்லீம்களது அபிவிர்த்திக்கும் ஐஸ்வர்யத்திற்கும் காரணம், "இஸ்லாம்மத பிரசாரத்தில்" அன்னவர்கள் காண்பித்த அளவற்ற அவாவேயாம். ஆனல் நாம் இன்றைக்கு அதனை கைவிட்டு இருக்கின்றோம்! "தப்லீக்,, என்கின்ற வார்த்தையை கேழ்ப்பதுகூட சிலருக்குமிக வெறுப்பாக இருக்கின்றது. ஆ! உலகத்தின்கண் சமாதானத்தை, சாந்தத்தை, சத்தியத்தை, தெய்வ பக்தியை, சகல சன்மார்க்க நெறிகளையும் நிலவி உலவச்செய்து பரிபாலனம் செய்யவேண்டியவர்களாகிய நாம் இதோ இன்றைக்கு மிக மிக கேவல நிலமையிலிருக்கின்றோம். நாம் நமது நிலைமையை உள்ளதை யுள்ளவாறுணருவோமாயின் உள்ளம் குழம்பி, உடல் நடுங்கி, வியர்வையொழுகி, விருவிருத்து, நாவரண்டு, உண்மைத்துயரம் ஊடுருவி, கண்கள் நீர்த்ததும்பி வழிந்தாராயோடாமலிருக்க முடியுமா? அன்பர்காள்! ஓடுகின்றவர்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றனர். வழிநடுவில் களைத்து நிற்பவர் அங்ஙனமே அசைவற்று நிற்கின்றனர்; அன்னவர்களுடைய முடிவானது அதோ கதிதான்! அன்புமிக்க சகோதர சோதரிகளே! கற்றறிந்த உலமாக்களே! ஏனைய பெரியோர்களே! எழுந்திருந்து கண்திறந்து நாலுபக்கமும் உற்று பார்ப்பீர்களாக! கண்மூடிக்களிப்புடன் நித்திரை செய்தது போதும்! போதும்! எழும்! எழும்! எழுவீர்களாக! இறைவனுக்குமுன் உங்களது கடமையை உணருவீர்களாக! அல்லாரசூல் மீது ஈமானுள்ள மூமீன்களே! முஸ்லீமான சகோதர சகோதரிகளே! அன்பியாக்களின் வாரிசுகளென சொல்லிக்கொள்ளும் உலமாக்களே! முஸ்லீம் தலைவர்களென ஆர்ப்பாட்டம்செய்யும் மேதாவிகளே! நாம் ஏனையோர்கட்கு வழிகாண்பிக்கவேண்டுமென்னும் நமது கடமையை உணர்வீர்களாக! நேர் வழியில் இருக்கும் நமது சகோதரர்களை ஏனையோர்கள் சூரையாட முயலும் இத்தருணம் நீங்கள் வாளாயிருப்பதின் காரணம்யாது தானெனப் புலப்படவில்லையே? சுயராஜ்யம் ஸ்வராஜ்யமென தற்காலம் கருத்தற்ற மந்திரம் ஜெபித்துக் கொண்டிருக்கும் முஸ்லீம்தலைவர்களே! ஸ்வராஜ்யம் வேண்டுமாயின் உங்களது கடமையாகிய இஸ்லாம் மதப்பிரசாரத்தை செய்ய முன்வருவீர்களாக! கண்மூடித்தனமாக இஸ்லாம் மதத்தை குறை கூறுகின்ற ஏனைய மதஸ்தர்களுக்கு தகுந்த பதலளிப்பீர்களாக! அத்துடன் இஸ்லாத்தின் நித்திய உண்மையை வெளிப்படுத்துவீர்களாக! பரிசுத்த குர்ஆனும் ஹதீதும் கையிலேந்தி வெளிக் கிளம்புவீர்களாக! உலகத்திற்கு நேர் வழியை போதிப்பீர்களாக! நாயன் நல்லருள் புரிவானென்பது திண்ணம்! திண்ணம்! "நசருமின்னல்லாஹி வபதஹுன் கரீப்."

அல்லாஹு அக்பர்.

5

கூட்டுறவு

ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்.

கூட்டுறவு, மக்கள் வாழ்விற்கு இன்றியமையாதது. கூட்டுறவின்றி மக்கள் வாழ்வு நடாத்தலும் அரிது. கூட்டுறவு, மக்கள் வாழ்விற்குரியது என்று சொல்ல வேண்டுவதில்லை.

கூட்டுறவு, உலகில் பல வழியில் இயங்கி வருகிறது. வழிகள் பலவாயினும் நோக்கம் ஒன்றே என்பது கருதற்பாலது. மக்கள் வாழ்விற்கு இன்றியமையாததாய் உரியதாயுள்ள கூட்டுறவால் விளையத்தக்க பயன் உலகிடை விளையாமலிருக்கிறது. இதற்குக் காரணம் யாது?

உலக வாழ்விற்குப் பொருள் வேண்டற்பாலது. பொருள் உலகியலுக்கு உயிர் போன்றது. "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்றார் திருவள்ளுவர். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமன்றே" என்றார் மணிவாசகனார். அத்தகைப் பொருள் வருவாய்க்குக் கருவியா யிருப்பது இயற்கை. அவ்வியற்கை எல்லார்க்கும் பொதுவானது. அவ்வியற்கை யளிக்கும் பொருளும் எல்லார்க்கும் பொதுவாகப் பயன்படல் வேண்டும்.

உலகில் அங்ஙனம் அது பயன்படுகிறதா? இல்லை. செல்வம் ஒரு கூட்டத்தார்பால் பெருகியும் மற்றொரு கூட்டத்தார்பால் சுருங்கியும் நிற்றல் கண்கூடு. அதனால் உலகில் போராட்டம் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. உலகப் போராட்டத்துக்கு அடிப்படை பொருளாதார நிலை என்பது பெரிதுங் கவனிக்கற்பாலது. பொருள் நிலை எல்லார்க்கும் பொதுப்பட நிலவி வருமேல் உலகில் போராட்டம் பட்டே போகும். செல்வம் ஒரு கூட்டத்தாரிடைப் பெருகியும் மற்றொரு கூட்டத்தாரிடைச் சுருங்கியும் நிற்றல் இயற்கைக்கு மாறுபாடு என்பது எவரும் அறிந்த தொன்று. இயற்கைக்கு மாறுபாடு நிகழும் இடங்களில் தொல்லை யொழிந்தாலன்றி உலகில் அமைதி நிலவாது. அதற்குரிய வழியாது?

வழிகள் பலபட அறிஞர்களால் குறிக்கப்படுகின்றன. அவைகளுள் ஒன்று கூட்டுறவு. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கஞ் செவ்வனே நிறைவேறின், உலகப் போராட்டம் பெரிதும் நீங்குமென்பது

ஒருதலை. அவ்வியக்கம் நன்கு நடைபெறாத் தடைகளும், அதன் நோக்கம் நிறைவேறா முடைகளும் ஆங்காங்கே கிளத்தப்படுகின்றன. அத்தடைகளும் முடைகளும் கூட்டுறவு இயக்கத்துக்கு இடையூறு செய்கின்றன.

கூட்டுறவு இயக்கம் புகாத இடமில்லை. எந்த மூலை முடுக்குகளி லும் அவ்வியக்கத்தைக் காணலாம்; கூட்டுறவு, மேல் நாட்டில் மிக வீறுக இயங்கி வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆங்குஞ் சில விடங்களிலேயே அவ்வியக்கத்தின் நோக்கம் ஒரு புடை நிறைவேறி வருகிறது. பல விடங்களில் அவ்வியக்கம் பேரளவில் உருக்கொண்டு நிற்கிறது.

நமது நாட்டிலும் அவ்வியக்கந் தொடங்கப்பட்டிருக்கிறது. கூட் டுறவுச் சங்கங்கள் பல காணப்படுகின்றன. அரசாங்கத்தில் அதற் கென ஒரு தனி இலாகாவுமிருக்கிறது. சங்கங்கள் பல காணப்பட்டும், அரசாங்கந் தலைப்பட்டும் கூட்டுறவால் ஏழைமக்களுக்கு நலன் உண்டா எனில் இல்லை என்று தியங்காது கூறலாம். கூட்டுறவின் நுட்பம் ஏழை மக்களிடை நன்கு பரவவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டும்போது கடன் கொடுக்கும் ஒரு சேம நிதி என்று ஏழை மக்களால் கருதப்படுகின்றன. அந்நிதியளிக்க முன்வருவோர் அரு ளாளராகக் கருதப்படுகிறார். அம் முயற்சிக்குத் துணை புரியும் உத்தி யோகஸ்தர்கள் தெய்வங்களாகக் கருதப்படுகிறார்கள். இம்முறையில் கூட்டுறவு இயங்குமட்டும் நலன் விளையாதென்பது திண்ணம்.

இயற்கை யளிக்கும் பொருள் எல்லார்க்கும் பொதுவில் பயன்பட வேண்டுமென்னும் விழுமிய நோக்குடைய கூட்டுறவு ஏழைமக்க ளிடை வளரல் வேண்டும். செல்வர்கள் தலையீடும் அரசாங்கத்தின் தலையீடும் முற்றிலும் அநாவசியம். ஓரிடத்தில் கூட்டுறவுச் சங்கங் காணப்படுகிறது. அச்சங்கத்தில் பலர் அங்கத்தவராகச் சேர்கிறார். பங்குகள் சேர்க்கப்படுகின்றன. செல்வர்களும் அரசாங்கத்தாரும் முதற் பொருளீகின்றனர். கடன் பெறும் ஏழைமக்கள் விதிப்படி கடன் செலுத்தி வருகிறார்கள். கடன் வாங்கிக் கடன் செலுத்தும் ஒரு முறையின்றி வேறென்ன அங்கே இருக்கிறது?

கூட்டுறவுக்கடைகளை எடுத்துக்கொள்வோம். கூட்டுறவு முறை யில் ஏழைமக்கள் வாழ்வுப்பொருள் பெறுகிறார்கள். வேறு கடைக ளில் சென்றாலும் அப்பொருள் பெறக்கூடும். இக்கூட்டுறவுக் கடைக ளும் பெரிதும் வக்கீல்களாலும் செல்வர்களாலும் நடாத்தப்படுகின் றன. ஏழைமக்கட்கும் பொருள் உண்டுபண்ணுவோர்க்கும் இடையில் கூட்டுறவு என்னும் பெயரால் இத்தரகர்கள் ஏன் நிற்றல் வேண்டும்?

கூட்டுறவில் சேர்ந்த ஏழைமக்கள், பொருள் விளைவிப்போரிடத்தில் நேரே சென்று நடைமுறையில் கலந்து வினையாற்றும் வழியில் கூட்டுறவு இயங்கல் வேண்டும். சில வக்கீல்கள், சில கணிதர்கள் முதலியோர் பிழைப்புக்கு இடமாகக் கூட்டுறவுச் சங்கமிருத்தல் கூடாது.

சில விடங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்த அங்கத்தவர்கள் கூட்டுறவு முறையில் நிலங்கள் வாங்குகிறார்கள்; வீடுகள் கட்டுகிறார்கள். மிகச் சில விடங்களிலேயே இவைகளைப் பெறும்பேறு ஏழைமக்கள் அடைகிறார்கள். கூட்டுறவுப் பெயரால் இப்பயனைப் பெரிதும் அடைவோர் உத்தியோகஸ்தர்கள் என்று கூறல் மிகையாகாது. அரசாங்க இலாகாக்களில் உத்தியோகஞ் செய்து நல்லூதியம் பெறுவோர் கூட்டுறவால் நலம் பெறுகிறார். கூட்டுறவு முறையில் கடன் பெற்று இவ்வுத்தியோகஸ்தர்கள் வீடு கட்டிக்கொள்கிறார்கள். இவர்கட்குக் கூட்டுறவு வேண்டுவதில்லையோ வெனில் வேண்டாமென்று சொல்லப்புகவில்லை. இவர்களினும் ஏழைமக்கள் நாட்டில் பலராயிருக்கும்போது இவர்கள் கூட்டுறவு இன்பத்தை நுகர்வது அவ்வியக்கத்தின் நோக்கம் நிறைவேறுவதாகாதென்பது எமது கருத்து.

நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் அதன் நோக்கம் நிறைவேறும் முறையில் நிகழவில்லை என்பது கவனிக்கத் தக்கது. முதலாளிகள் தலையீடும், அரசாங்கத் தலையீடும் தொலைந்து, ஏழைமக்களிடையே கூட்டுறவு இயக்கம் தனித்து நிலவுமேல் அவ்வியக்கத்தால் நற்பயன் விளையும். ஏழைமக்கட்கும் இயற்கைப் பொருளுக்கும் இடையில் வக்கீல்களும் பெருங் கணிதர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் ஏன் நிற்கவேண்டும்?

அரசாங்கத் தலையீடு எற்றுக்கோ தெரியவில்லை. படித்த சிலர் உத்தியோகம் பெறுவதைவிட வேறு என்ன இருக்கிறது? நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் அவ்விலாகாவிற்கு இலட்சக்கணக்கான பொருள் செலவாகிறது. குறைந்தது ஏழுலட்சம் செலவு நேர்கிறது. இப்பணம் யாருடையது? ஏழைமக்கள் வரிப்பணமன்றோ? இப்பெருந் தொகையையுண்டு ஏப்பமிட்டுக் கொண்டிருக்கும் இலாகா எற்றுக்கு? ஏழைக்கும் இயற்கைக்கும் இடையில் இவ்விலாக்கா எற்றுக்கு என்பது பெரிதுங் கவனிக்கப் பெறல்வேண்டும்.

அரசாங்கத் தலையீடு இல்லையேல் களைச் செயல்கள் பல நடைபெறும் என்று சொல்லப்படுகிறது. கூட்டுறவின் நுட்பமுணர்ந்து அவ்வியக்கத்தில் சேர்வோர் ஒருபோதுங் களைவினை நிகழ்த்த ஒருப்படார். தாஞ்சாக எவரும் நஞ்சுண்ணார். கூட்டுற வியக்கத்தில்

ஈடுபட்டு அனுபவம் பெற்றுள்ள அருளாளர்கள் ஏழைமக்கட்குக் கூட்டுறவின் நுட்பத்தை அறிவுறுத்தல் வேண்டும். கூட்டுறவின் நுட்பமுணராது அதில் சேர்வதால் நலன் விளையாது; தீமையே விளையும்.

கூட்டுற வியக்கத்தின் நோக்கம் போற்றற்குரியதே. அதன் நடைமுறையில் பல குறைபாடுகளிருக்கின்றன. அக்குறைபாடுகள் களையப்படல் வேண்டும். அப்பொறுப்பு அவ்வத்தேசத்தாருடையது. விரிவஞ்சி இவ்வளவில் நின்றுவிடுகிறோம்.

"நவசக்தி"

இஸ்லாம் உண்மையான மதம்

ஓர் அமெரிக்க நவ் முஸ்லிம் மாதின் அபிப்பிராயங்கள்.

இஸ்லாம் புனித மதமாகும். சிறப்பு வாய்ந்ததாகும். தயாளம் அன்னியோன்னியம், பட்சம், சங்கை, ரோஷம், மனுஷத்தன்மை முதலிய லக்ஷணங்களையும் போதிக்கக்கூடியதாகும் அந்தோ! என்னுடைய சமூகத்தார் இஸ்லாம்மதத்தின் உண்மைக்கொள்கைக் கோட்பாடுகளை உணர வில்லை. அவர்கள் சற்று நேரத்திற்காகிலும் அம்மதத்தின் அரிய கொள்கைகளை சிந்தித்துப் பார்ப்பாராகில் அவர்கள் கூட்டங் கூட்டமாகக்கூடி இஸ்லாத்தை தழுவமுன்வந்துவிடுவார் என்பதற்கு ஐயமில்லை. உலகத்திலுள்ள எல்லா சமூகத்தார்களுக்கும் பகிரங்கமாய் எடுத்துகூற வேண்டியதாவது :—இறைவனுடைய வாக்குத்தத்தம் உண்மை. அறுவடை காலம் நெருங்கி விட்டது. நாமெல்லோரும் அடைக்கலம் புகுவதற்கும் நம்மைக் காத்துக்கொள்வதற்கும் இஸ்லாம் மார்க்கமே சிறந்த மார்க்கமாகும்.

இஸ்லாம் மார்க்கத்தில் எனக்கு நீண்டகாலமாக அபிமானமிருந்து வந்ததாயினும் அம்மார்க்கத்தின் சட்ட விதிகளில் சில விஷயங்களைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்ற அவசியமும் எனக்கேற்பட்டிருந்தமையால் நான் இஸ்லாம் மதத்தைத் தழுவுவதில் சற்று தயங்கி வந்தேன். கடைசியாக அவ்விஷயங்களைப் பற்றி விவாதிக்க எனக்கு சந்தர்ப்பமேற்படவே நான் வேண்டியமட்டில் என் சந்தேகங்களைப்பற்றி விவாதித்தேன். சந்தேகங்களும் விவாதங்களும் வீணானவை என்பதை யுணர்ந்து கடைசியாக இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டேன்.

இஸ்லாம் மதத்தில் அடியானுக்கும் ஆண்டவனுக்குமிடை சம்பந்தங்களை ஏற்படுத்தி வைப்பதற்காக எவருடைய அனுசரணையும் வேண்டியிருக்கவில்லை. அடியான் தான் செய்துள்ள குற்றங்களுக்காக சிருஷ்டிகர்த்தனாகிய ஆண்டவனிடத்து மன்னிப்புக் கேட்பானாகில் ஆண்டவன் அவன் பாவப்பிழைகளை மன்னித்து விடுகின்றான்.

சுயநலத்தை தவிர்த்து அன்னியோன்னியோன்னியமாக நடந்து கொள்ளும்படி இஸ்லாம் போதனை செய்கின்றது. இஸ்லாம் மார்க்க கிரந்தங்களில் இது சம்பந்தமாய் வந்துள்ள ஒரு கட்டளையாவது :— "ஒரு முஸ்லிம் தனக்குப் பிரீதியானவஸ்துவை, பிறருக்கும் பிரீதியானதென கருதாதவரையில் அவன் உண்மை முஸ்லிமாக மாட்டான்." இஸ்லாம் பிறருக்கு கஷ்டத்தையும் இம்சையும் சேர்ப்பிக்காது தடுப்பதாகும். முஸ்லிமானவர்களுக்கு தன்னுடைய நாவைக்கொண்டோ அல்லது கையைக்கொண்டோ தீங்கு இழைக்காதவனே முஸ்லிம் ஆவான் என்றும் இஸ்லாம் மதம் கற்பிக்கிறது.

இஸ்லாம் தன்னை யேற்றுக்கொண்டவர்களுக்கு கருணை கடாட்சத்தை கடைபிடிக்குமாறு போதிக்கின்றதற் கேற்ப, "நீங்கள் பூலோகவாசிகளின் மீது கருணை கூறுங்கள். ஆண்டவன் உங்கள் மீது கருணை செய்வான்" எனஹதீது வந்திருக்கிறது.

சுருங்கக் கூறுமிடத்து "இஸ்லாம்" மானிட நற்பாக்கியத்திற்கும் அதிர்ஷ்ட வசத்திற்கும் பொறுப்பேற்றி நிற்கும் மதமாகும். எனவே இம்மதத்தைத்தழுவி இதன் கொள்கைக் கோட்பாடுகளை யனுசரித்து நடப்பவர் இதன்பலாபலன்களை கட்டாய மடைவார்கள்.

"கிலாபத்"

கூட்டுத் தொகுதியின் தீமைகள்.

மதுரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தின் நாஜிராகிய மௌலானா மௌல்வி ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப்.

அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியினுடையவும் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியினுடையவும் கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்குமுன் பம்பாயில் நடைபெற்றன. டெல்லியில் சில முஸ்லிம்கள் அங்கீகாரஞ்செய்த கூட்டுத்தொகுதிப் பிரேரணை பம்பாயில் நடந்த கூட்டங்களில் ஆலோசனைச் செய்யப்பட்டது. இவ்விஷயமாக விவாதம் மிகவும் பலமாக இருந்தது. ஹிந்துக்களில்

சிலர் கூட்டுத்தொகுதிப் பிரசினையை மிகவும் பலமாகக் கண்டித்தார்கள். பிற்காலத்திய சம்பவங்களைப்பற்றி முன்னேக்குடைய ஹிந்து தலைவர்கள் சிலர் இந்த கூட்டுத்தொகுதியை அங்கீகாரஞ் செய்து கொள்ளவேண்டிய அத்தியாவசியத்தை வற்புறுத்திக் காட்டியதன் மேல் இக்கூட்டுத்தொகுதி ஒப்புக்கொள்ளப்பட்டது. எல்லா ஹிந்து பத்திரிகைகளும் முஸ்லிம் பத்திரிகைகள்சிலவும் கூட்டுத்தொகுதி அங்கீகாரஞ் செய்யப்பட்டதைக் குறித்து அதிக சந்தோஷ ஆரவாரஞ் செய்கின்றன. ஹிந்துப்பத்திரிகைகளின் ஆரவாரத்தைக் கண்டு நாம் ஆச்சரியப் படவுமில்லை. முஸ்லிம் பத்திரிகைகளின் இம் மனப் பான்மையைக் கண்டு நாம் வருத்தப்படவுமில்லை. ஆனல், முஸ்லிம்கள் சிலரும் முஸ்லிம் பத்திரிகைகள் சிலவும் உண்டாக்கிக் கொண்டிருக்கிற கேவல நிலைமையைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் இருக்க முடியாது. இராஜீப விஷயங்களை விட்டும் முஸ்லிம்கள் தனியே விலகி நிற்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமும், துர் அதிர்ஷ்டமான விஷயமுமாகும்.

முஸ்லிம்களின் நிலைமை.

இந்திய முஸ்லிம்களை இதர சமூகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஜனத்தொகையில் மிகவும் குறைந்தவர்களாகவும், கல்வியில் அதிகம் பின்னடைந்தவர்களாகவும், செல்வத்தில் அதிகம் பிற்போக்குள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நிலைமையில் இந்திய முஸ்லிம்கள் தங்களுடைய நிலைமையைப்பற்றி சிந்தனை செய்து பார்க்க வேண்டியது அத்தியாவசியமாகும். இந்திய முஸ்லிம்களின் நிலைமை இவ்வாறிருக்கையில் கூட்டுத் தொகுதியை அங்கீகாரஞ் செய்வதோமாயின் அதனல் முஸ்லிம்களுக்கு நன்மையா அல்லது தீமையா? கூட்டுத்தொகுதியின் நன்மை தீமை தெரிய வேண்டுமானல் லோகல் போர்டுகள், முனிசிபல் சபைகள் சட்டசபைகள் இந்தியா சட்டசபை முதலிய சபைகளிலுள்ள கூட்டுத்தொகுதி, தனிவாக்காளர் தொகுதி முதலியவைகளின் தாரதம்மியங்களை ஆராய்ச்சிசெய்து பார்க்க வேண்டியது அத்தியாவசியமாகும். தனிவாக்காளார் தொகுதியின் பிரகாரம் எத்தனைபேர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்?

இரு தொகுதிகளின் தாரதன்மியம்.

கூட்டுத்தொகுதியின் பிரகாரம் எத்தனை பேர் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்டறிவது அத்தியாவசியமாகும். தனிவாக்காளர் தொகுதி, கூட்டுத்தொகுதி இரண்டையும் பரிசீலனை செய்து பார்த்தால் தனி வாக்காளர் தொகுதி ஸ்தாபிக்கப்பட்ட

பின்புதான் முஸ்லிம் பிரதிநிதிகள் மேலே கூறப்பட்டுள்ள சபைகளில் காணப்படுகிறார்களென்பதை பாமர ஜனங்களும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடும். இத்தகைய பிரத்தியட்ச அனுபவத்தைப் புறக்கணித்து கூட்டுத்தொகுதி முஸ்லிம்களுக்கு அதிக நன்மையானதென்றுக் கூறுவதற்கு ஹிந்துக்கள் செய்யும் முயற்சியைக்கண்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஆனால், முஸ்லிம்களே சிலர் கூட்டுத் தொகுதியை ஆதரித்து அக்கட்சியை எடுத்துப் பேசுவதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது.

சுயராஜ்யம் பெறுவதில் தடை.

தனிவாக்காளர் தொகுதி சுயராஜ்ப மடைவதற்கு பெருந்தடையாக இருக்கிறதென்று ஹிந்துக்கள் ஓலமிடுகிறார்கள். சுயராஜ்பம் வாராததால் தாங்கள் கோரும் நோக்கத்தை அடைய முடியாமல் அவர்கள் தவிக்கிறார்கள். சுயராஜ்யமென்பதில் ஹிந்து இராஜ்ஜியமென்பது அவர்களுடைய கொள்கையாயின் இந்த தனிவாக்காளர் தொகுதி அவர்கள் கோரும் லட்சியத்தை அடைய ஒரு தடையேயாகும். ஆனால், இந்தியா கோருவது ஹிந்து இராஜ்ஜியமல்ல. இந்தியா கோருவது இந்திய சுயராஜ்யமாகும். இந்திய சுயராஜ்ஜியத்தில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பாரசீகர்கள் எல்லோருக்கும் நாட்டின் ஆட்சியின் உரிமை இருக்கவேண்டும். நாட்டின் நிர்வாகத்தில் எல்லோரும் சம அதிகாரம் வகிக்கவேண்டுமென்பதே பொது ஜனங்களின் கோரிக்கை.

தனிவாக்களார் தோகுதியில் என்ன தீமை?

நிலைமை இவ்வாறிருக்க தனிவாக்காளர் தொகுதியால் உண்மையாகவே தீமைகளிருக்கின்றனவென்று நம்பும்படியான காரணங்களை இதுவரையில் ஹிந்து தலைவராவது முஸ்லிம் தலைவராவது எடுத்துக் கூறவில்லை. வட இந்தியா, பஞ்சாப் முதலிய இடங்களில் தற்சமயம் இருந்துவரும் சமூகச் சச்சரவுகளுக்கும், சமூகக் கலகங்களுக்கும் தனிகாளர் தொகுதிதான் காரணமென்று அவ்விடத்திய ஹிந்துக்கள் கூறுகிறார்கள். தனிவாக்காளர் தொகுதியே இக்கலகங்களுக்கும் கலவரங்களுக்கும் காரணமாயின் தனிவாக்காளர் தொகுதி அமுலிலிருக்கும் சென்னை மாகாணத்திலும் இவ்விதக் கலகமும் சச்சரவும் ஏன் நிகழவில்லையென்று கூறும்படியாக நான் கேட்கிறேன். தனித் தொகுதியே கலகங்களுக்கும் சச்சரவுகளுக்கும் காரணமாயின் தனித்தொகுதி அமுலிலிருக்கும் எல்லா மாகாணங்களிலும் சச்சரவு இருக்கவேண்டாமா? சென்னை மாகாணத்திலும் தனி வாக்காளர்

தொகுதியிருக்க எத்தகைய கலகமும், சச்சரவும் இல்லாததால் வட இந்தியாவில் இருக்கும் கலகங்களுக்கும் சச்சரவுகளுக்கும் தனிவாக்காளர் தொகுதியில்லாத வேறுகாரணம் இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. வட இந்தியாவின் மாகாணங்களில் தோன்றும் கலகங்களுக்கும் சச்சரவுகளுக்கும் அந்தந்த மாகாணங்களின் ஹிந்துக்களே காரணமாவார்கள்.

ஹிந்துக்களின் மனப்பான்மை

வெகு நாளாகவே ஹிந்துக்களுக்கு முஸ்லிம்கள் இந்நாட்டில் இருந்துவருவது அதிக கவலையாக இருந்துவந்தது. ஆனால், ஹிந்துக்கள் இப்பொழுது காட்டிவரும் மனப்பான்மையைக் காணின் இந்தியர் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதென்றும், துர்அதிர்ஷ்ட வசமானதென்றும் கூறவேண்டியிருக்கின்றது. ஹிந்து இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டாலன்றி வேறே ஒருவிதமான ஆட்சியும் இந்தியாவிற்கு ஏற்றதல்லவென்று ஹிந்துக்களுக்கு ஓர்வித எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், முஸ்லிம்களுக்கு இத்தகைய நோக்கமேனும் அபிப்பிராயமேனும் கிடையாது. முஸ்லிம்கள் தங்களுடைய மார்க்கத்தை விட்டுவிட வேண்டுமென்றும், மஸ்ஜித்களை இடித்துவிட்டு ஹிந்து மார்க்கத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்றும் ஹிந்துத் தலைவர்களே தங்களுடைய சபாக்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் கூறியிருக்கிறார்கள். இவ்விஷயங்களை எல்லாம் எடுத்துக் கூறுவதாயின் நமக்கு வெட்கமாக இருக்கின்றது. ஹிந்து தலைவர்கள் தங்களுடைய நோக்கத்தை சித்திபெறச் செய்வதற்காக பிரதிதினமும் அவர்கள் புது புது கிளர்ச்சிகளை உண்டாக்கி வைக்கிறார்கள். முஸ்லிம் தலைவர்கள் சிலரோ தங்களுடைய சுய நலத்தை முன்னிட்டு ஹிந்துக்களுடைய வலையில் விழுந்து விடுகிறார்கள்.

முஸ்லிம்களின் பரிதாபகர நிலைமை.

முஸ்லிம்களின் நிலைமை இவ்வாறு பரிதாபகரமானதாக இருக்கிறது. முஸ்லிம் பாமர ஜனங்கள் உண்மையான நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் அற்பவிஷயங்களைக் கண்டும் அதிக பரபரப்படைந்துவருகிறார்கள். மஸ்ஜித்முன் மேள விஷயமாகவும் பசு குர்பானி விஷயமாகவும் அதிகப் பரபரப்படைந்து விடுகிறார்கள். தலைவர்களெனச் சொல்லிக் கொள்ளுபவர்களும், தாமாகவே தலைவராகிக் கொண்டவர்களும் முஸ்லிம்களை முன்னேற்றுவதாக வெளி வேஷம் செய்து முஸ்லிம் பாமரஜனங்களை தங்களுடைய கை ஆயுதங்களாகஉபயோகிக்கிறார்கள். இத்தகைய தலைவர்கள் தங்களுடைய நோக்கத்தில் வெற்றியடை-

வார்களானல் முஸ்லிம்களுக்கு மஸ்ஜித்களின் அவசியமும் இராது. பசுகுர்பானி செய்யவேண்டிய தேவையும் இராது. ஒரு கடவுளுக்குப் பதிலாக பல கடவுள்களை வழிபட வேண்டியிருக்கும். ஒரு கஅபாவுக்குப் பதிலாக ஆயிரக்கணக்கான கோவில்கள் காணப்படும். ஹிந்துக்களும் முஸ்லிம்களின் தலைவர்களெனச் சொல்லிக்கொள்ளும் பலர்களும் தங்களுடைய நோக்கத்தில் வெற்றி பெறுவார்களானல் முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு அடிமைகளாகிவிட வேண்டியிருக்கும். எஜீதின் காலத்தில் முஸ்லிம்கள் நிலைமை எவ்வாறிருந்ததோ அவ்வாராகி விடக்கூடும். ஆனல் ஆண்டவன் கிருபையால் ஹிந்துக்கள் தங்களுடைய நோக்கத்தில் ஈடேறமுடியாது.

டெல்லி மகாநாடு

டெல்லியில் நடந்த மாகநாட்டின் நடவடிக்கைகளைப்பற்றி சற்று கவனிப்போம். டெல்லியில் கூட்டுத் தொகுதியை அங்கீகாரஞ் செய்த மகா நாட்டிற்குப் போயிருந்த கனவான்கள் யாரென்று விசாரணை செய்யின் விஷயம் விளங்கும். டெல்லியில் கூடிய கூட்டுத் தொகுதி பிரசினையை ஆதரித்து தீர்மானஞ் செய்யும்படி இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? விஷயங்களைச்செவ்வனே ஆராய்ச்சி செய்து பார்ப்போமானல் விஷயம் நன்கு புலப்படும். இக் கனவான்கள் சட்டசபைக்குப் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டபோது இப்பிரசினை வாக்காளர்கள்முன் ஆலோசனைக்கு இருந்தது கிடையாது. பத்து அல்லது பன்னிரண்டு பேர்கள் கூடி ஏழுரை கோடி முஸ்லிம்களுக்கு உயிர் நாடியாகிய இப்பிரசினையை எப்படி தீர்மானஞ் செய்துவிடமுடியும்? அவர்களுடைய செயல் சட்ட முறைப்படிக் கானதா? ஒருகாலும் கிடையாது. டெல்லி மகாநாட்டிற்கு வந்தவர்கள் யாராரென்று கவனிப்போம்.

டெல்லி மகாநாட்டிற்கு வந்த கனவான்கள்

வந்திருந்த கனவான்களில் நபர்வாரியாக அவர்களைப்பற்றி பேசவேண்டியதை விலக்க வேண்டுமென்பதே நம்முடைய நோக்கம். ஆனல், அவசியத்தின் மேலும் நிர்ப்பந்தத்தின் மேலும் அப்படி விலக்க முடியவில்லை. முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைக் காக்க வேண்டியதற்காகவும் முஸ்லிம் சமுகத்தினரின் நன்மையைக் கருதியும் தனி நபர்களைப்பற்றி ஏதேனும் சொல்ல நேர்ந்தால் நம்முடைய நல்லெண்ணத்தைக் கருதும்படியும் நம்மீது பழிசுமத்த வேண்டாமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேம். ஜனப் முஹம்மத் அலிஜின்னவும் அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றியவர்களும் ஆரம்ப

முதற்கொண்டு காங்கிரஸ் வாதிகளாக இருந்துவருகிறவர்கள். முஸ்லிம் லீக் சபையானது பகிரங்கமாகவே காங்கிரஸ் சபையின் துணைக் கருவியாகச் சேர்ந்தவுடன் மேலே கூறப்பட்டுள்ள ஜனுப் ஜின்னுவும் அவரைச் சேர்ந்தவர்களும் லீக் சபையில் சேர்ந்துக்கொண்டார்கள். ஜனுப் ஜின்னு முஸ்லிம்களின் நன்மையைக் கோருகிறவரும் முஸ்லிம் நன்மையை விரும்புகிறவரும் என்பதில் ஆட்சேபனை கிடையாது. ஆனுல், அவர்களுடைய செயல்களெல்லாம் அவர் இப்பொழுது ஹிந்துக்களின் வலைக்குள் அகப்பட்டு நடப்பதாகக் காட்டுகின்றன.

கிலாபத் இயக்க மௌலானுக்களைக் கவனிப்போம். அவர்கள் அடிக்கடி மாற்றும் அபிப்பிராயங்களையும் எப்பக்கம் காற்றடிக்கிறதோ அப்பக்கம் திரும்பும் கொள்கைகளையும் உடையவர்கள். அவர்களுடையவேலை கடைசியில் ஒருவிதமான முடிவையும் கொடுத்தபாடில்லை. முஸ்லிம் சர்வ கலாசாலை ஸ்தாபனத்திற்கு அனுமதிக்கக் கூடாதென்று இவர்கள் ஆரம்பித்த கிளர்ச்சியில் மார்லே பிரபு இவர்களுக்குப் பேட்டி கொடுத்துப் பேசமறுத்து விட்டபின்னர் இவர்கள் முதலில் சுல்தான் இப்னுஸூஊதை ஆதரித்தார்கள். பின்னர் அவரைப் பட்டத்தை விட்டும் விலக்கவேண்டுமென்று பிரசாரம் செய்தார்கள். பின்னர் ஹிஜாஸின் குடியரசு ஆட்சியைப் புகழ்ந்தும் சிலாகித்தும் பேசினுர்கள், ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகவும் ஹிஜரத் காரணமாகவும் கிலாபத் நிதி இயக்கங்கள் காரணமாகவும் முஸ்லிம்கள் பாழாகி விட்டார்கள். ஆனுல், மௌலானுக்கள் ஏழைகளைப்பற்றி கவலை கொள்ளவுமாட்டார்கள். கவனிக்கவு மாட்டார்கள். தங்களுடைய தவறை உணர்ந்தேனும் வருத்தப்படவு மாட்டார்கள். முஸ்லிம்களுடைய கல்வி ஸ்தாபனங்கள், செல்வ நிலைமை, முதலியவைகளெல்லாம் ஹிந்துக்களால் அவர்களுடைய நன்மைக்காகவே நிர்வகிக்கப்பட வேண்டுமென்று மௌலானுக்கள் விரும்புகிறுர்கள். இத்தகைய மனப்பான்மையுள்ளோர் இந்த கூட்டுத் தொகுதிப் பிரச்னையை தீர்த்துவைத்தார்களானுல் இப்பிரசினை சம்பந்தமாக முடிவை ஏற்றுக்கொள்ளுவதில் முஸ்லிம்கள் அதிக ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டியிருக்கின்றது. சுயநலம் இல்லாத ஜனுப் முகம்மத் அலி ஜின்னு போன்ற தலைவர்கள் கூட பெருந் தவறை செய்துவிட்டார்கள்.

தற்கால கலகங்களும் வாக்காளர் தொகுதியும்

தற்கால சச்சரவுகளுக்கும் கலகங்களுக்கும் தனிவாக்காளர் தொகுதி காரணமில்லையென்று அவர்கள் பலமாகக் கூறியிருக்கிறுர்க

ளெனினும் ஹிந்து முஸ்லிம்களுக்குள் எவ்வழியிலேனும் ஒற்றுமை ஸ்தாபித்து வைப்பது சாத்தியமென்று அவர்கள் கருதினார்கள். முஸ்லிம்கள் சீர்கெட்டுப் போவதற்கு தங்களுக்குத் தெரியாமலே அவர்கள் உத்தரவாதியாகிவிட்டார்கள். தனி வாக்காளர் தொகுதியின் தீமைகளை முஸ்லிம்களும் உணர்ந்து கொண்டார்கள் என்றும் தனி வாக்காளர் தொகுதிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் ஹிந்துக்கள் பெருத்த முழக்கம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். தனிவாக்காளர் தொகுதியை கவர்ன்மெண்டார் ஒழித்துவிட வேண்டுமென்றும் அவர்கள் முறையிடுவார்கள். இப்பிரசினை நாட்டின் நிர்வாகத்தைப் பொறுத்த பெரிய பிரசினையாகும். கைவிரல் எண்ணிக்கையுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து இப்பிசினையைத் தீர்த்து வைக்க முடியாது.

முஸ்லிம் போது மக்களின் கடமை

முஸ்லிம் தலைவர்கள் செய்யவேண்டியதைச் செய்து முடித்து விட்டார்கள். ஆனால், முஸ்லிம்கள் இவைகளைக் கைக்கொள்ளுவதில் மிகவும் ஜாக்கிரதையாகவும் எச்சரிக்கையாகவும் நடந்துகொள்ள வேண்டும். டில்லி மகாநாட்டுத் தீர்ப்பு கைவிரல்கள் எண்ணிக்கையுள்ள முஸ்லிம்களின் முடிவு என்றும் முஸ்லிம் சமூகத்தினரின் தீர்ப்பல்லவென்றும் முஸ்லிம்கள் ஆங்காங்கு கூட்டங்கூடி தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்க வேண்டும். முஸ்லிம்கள் மௌனம் சாதித்து ஆட்சேபனை செய்யாமல் இருந்துவிடுவார்களாகில் ஹஜரத் உஸ்மான் ரலிஅல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பின் யார் கலீபாவாவதென்று ஹஜரத் அமீருல் முமினீன் அலிரலி யல்லாஹு அஹஹு அவர்களுக்கும் முஆவியாவுக்கும் சச்சரவு ஏற்பட்டமாதிரியான நிலைமைக்கு இந்திய முஸ்லிம்கள் வந்து விடுவார்கள். அவ்வழக்கை தீர்த்துவைத்த மத்தியஸ்தர்களுக்குச் சிறிதும் கஷ்டமும் ஏற்படவில்லை. ஆனால், அக்காலத்தில் விதைக்கப்பட்ட வேற்றுமையினுடையவும் துவேஷத்தினுடையவும் கனியை நாம் இன்றும் அனுபவித்து வருகிறோம். அதே விதமாக டெல்லி மகாநாட்டு மத்தியஸ்தர்களுக்கு ஒன்றும் சம்பவியாது. இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டியிருக்கும்.

தலைவர்களுக்கு வேண்டுகோள்

கல்வியறிவு இல்லாத பாமர முஸ்லிம்கள்மீது இரக்கங் கொள்ளும் படியாக அல்லாஹ்வின் பெயரால் நான் முஸ்லிம் தலைவர்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன். முஸ்லிம் தலைவர்கள் தங்களுடைய அபிப்பிரா

யத்தை மாற்றிக்கொள்ள முடியாதென்றால் தங்களுடைய தலைவர் பதவிகளையேனும் விட்டுவிட்டு முஸ்லிம் பொது ஜனங்களின் பாராட்டுதலையும் நன்றியையும் சம்பாதித்துக் கொள்ளுவார்களாக.

II

ஜனாப் ஹபீஸுர் ரஹ்மான் சாஹிப், B. A. எழுதியது.
"அலிகர் மெயில்" பத்திரிகையின் ஆசிரியர்.

டெல்லியில் கூடிய ஜின்னா மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களை பம்பாயில் கூடிய அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் இத்தீர்மானம் முஸ்லிம்களுக்கு இருந்துவரும் சமூகவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை ஒழித்து விடுவதற்கு சிபார்சு செய்கின்றது. தற்சமயம் முஸ்லிம்கள் தங்களுடைய இராஜீய உரிமைகளை சமூகவாரிப் பிரதி நிதித்துவத்தின் மூலமாகவே சாதித்துக்கொள்வது சாத்தியமாக இருக்கிறது. காங்கிரஸ் மகா சபையில் பெரும்பான்மையோர் ஹிந்துக்களே யிருக்கின்றனர். இச்சபை ஹிந்துக்கள் ஆதிக்கத்திலேயே இருந்துவருகின்றது. நாம் தக்க ஆதாரமில்லாமல் இவ்வாறு கூறவில்லை. பண்டித மோதிலால் நேஹ்ருவே இவ்வாறு கூறியிருக்கிறார். காங்கிரஸ் மகா சபை யென்பது ஹிந்து மகா சபையின் பிரதியொலியென்றே கூறவேண்டும்.

ஹிந்து மகாசபையின் மனப்பான்மை

டெல்லி தீர்மானத்தை, பம்பாயில் கூட்டம் கூடுவதற்கு முன்னும் கூட்டம் நடந்துகொண்டிருந்த சமயத்தும் சங்கதன் வாதிகளாகிய டாக்டர் மூஞ்சேயும் ஸ்ரீமான் ஜெயகரும் பலமாக எதிர்த்து வந்ததன்றி முஸ்லிம்களுடைய யோசனையை ஆலோசனை செய்வதற்கு இது சமயமல்லவென்றும் கூறிவந்தார்கள். ஆனால், திடீரென்று இவர்கள் காங்கிரஸின் சில தலைவர்களின் வார்த்தைக்குத் தலை சாய்த்ததற்கும் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி டெல்லி யோசனைகளை தட்டுத் தடங்கலின்றியும் ஆட்சேபனை யின்றியும் ஆவலுடன் ஏற்றுக்கொண்டதற்கும் காரண மில்லாமற் போகவில்லை. கூட்டுத் தொகுதியால் ஹிந்துக்களுக்கேற்படும் பலன்களுக்கு ஈடாக முஸ்லிம்களுக்கு பயன் படத்தக்கதாக ஒன்றையும் முஸ்லிம்களுக்கு அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி கொடுத்துவிடவில்லை,

டெல்லி தீர்மானம்

டெல்லி தீர்மானங்களின் முதல் பிரிவினையில் எல்லா மாகாண சட்டசபைகளிலும் இந்தியா சட்டசபையிலும் கூட்டுத்தொகுதி ஏற்படவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. சமூக வாரிப்பிரதிநிதித்துவத்தை ஒழிப்பதென்று முதல் பகுதியில் கூறப்பட்டிருக்கிறதால் டெல்லிப் பிரேரணையில் கூறப்பட்டுள்ள இதர விஷயங்களைப் பற்றி அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி அதிகமாக கவனத்தைச் செலுத்தவில்லை. டெல்லி பிரேரணையில் முதல் பிரிவினையிலும் பின்னுள்ள பிரிவினைகளிலும் உள்ள தாரதம்மியத்தை பரிசீலனை செய்து பார்ப்போமாயின முஸ்லிம்களுக்கு மேல் மட்டையும் ஹிந்துக்களுக்கு உள் தேங்காயும் கிடைப்பதற்கொப்பாகும். முஸ்லிம்களுக்கேற்பட்டுள்ள துர்ப்பாக்கியத்தைக் கூறவேண்டுமெனின் முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்படும் மேல்மட்டை கயிறு திரிப்பதற்கேனும் அல்லது அடுப்பெரிப்பதற்கேனும்கூட பிரயோசனப்படக் கூடியதாக இல்லை.

டெல்லி ஆலோசனையின் இரண்டாவது தீர்மானத்தில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஜனத்தொகைக் கேற்ப மாகாண சட்டசபையிலும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படவேண்டுமென்றும் ஆனால் தேர்தல் கூட்டுத் தொகுதியில் நடைபெற வேண்டுமென்றும் கூறப்படுகின்றது. ஆனால், சில பகுதிகளிற் சிறுபான்மையோருக்கு ஜனத்தொகையின் அளவுக்கு அதிக அளவு பிரதிநிதித்துவம் கொடுக்க ஏற்பாட்டில் இடம் இருக்கின்றது. ஆனால் இவ்வேற்பாடும் இதே விதமான சாதகம் இதரவழியில் காட்டப்பட்டால் அதற்குப் பிரதியாக செய்யப்படுமேயொழிய வேறொன்றுமில்லை. பிரதிநிதித்துவ ஸ்தானங்கள் இவ்வளவென்று ஒதிக்கி வைப்பதால் முஸ்லிம்களுக்கு என்ன சாதகம் ஏற்படக்கூடுமென்பது விளங்கவில்லை. முஸ்லிம்கள் வங்காளத்திலும் பஞ்சாப்பிலும் பெரும் பான்மையினராகயிருந்தும் அப்பெரும்பான்மை அதிகமென்று சொல்லுவதற்கில்லை. இவ்விரு மாகணங்களிலுள்ள முஸ்லிம்கள் முஸ்லிம்களல்லாதாருக்கு சாதகங்களையும் செய்து கொடுத்து தங்களுடைய பெரும்பான்மை நிலையையும் எவ்வாறு சாதித்துக்கொள்ள முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை.

பம்பாயில் கூடிய அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி செய்திருக்கும் மூன்றுவது ஏ. தீர்மானத்தில் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களுக்கும் பலுஜிஸ்தானத்திற்கும் சீர்திருத்தங்கள் வழங்கப்படவேண்டுமென்று, சொல்ல வேண்டியிருக்கிறதேயென்று, பேருக்கு மேலாகக் கூறுறுகின்றது. வடமேற்கு எல்லைப்புற மாகாண வாசி

கள் தாங்களே முன்னேற்ற மடைந்து தங்களுக்கு வேண்டிய சீர் திருத்தங்களை தாங்களாகவே அடையவேண்டுமென்று ஏகாதிபத் தியக் கொள்கையிருந்துவருகையில் இம்மாகாணங்களுக்கு சீர்திருத் தங்கள் இத்தகைய தீர்மானங்களின் மூலமாகவா கிடைக்கப் போகின்றது ?

பம்பாயின் தீர்மானத்தில் மூன்று பி. தீர்மானத்தில் சிந்து மாகாணம் தனியே பிரிக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டிருக் கிறது. ஆனால், பம்பாயைவிட்டு சிந்து மாகாணம் பிரிக்கப்படுவது மட்டுமல்ல, ஆந்திரா, கர்னாடகம் முதலிய மாகாணங்களுடன் சிந் தும் தனியாக பிரிக்கப்பட்டு பாஷை வாரியாக அமைக்கப்படும் ஏற் பாட்டில் சிந்துவும் சேர்ந்திருக்கிறது. ஆந்திரா, கர்னாடக மாகாணங் கள் தனியே பிரிக்கப்படுவதால் முஸ்லிம்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாது. ஆயின், சங்கதன் வாதிகளும் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" போன்ற அவர்களின் பத்திரிகைகளும் பஞ்சாப் மாகாணத் தின் தென் கிழக்குப் பகுதியை ஐக்கிய மாகாணங்களுடன் சேர்க்க முயற்சி செய்கிறார்கள். இப்படிச் செய்து பஞ்சாப் மாகாணத்தின் சுற்றளவை குறைக்கச் செய்து பஞ்சாபில் முஸ்லிம்களின் பெரும் பான்மையை ஒழிக்கச்செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனதுபற்றி மாகாணங்கள் பிரிக்கப்படும் பட்சத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் மாகாணங்களின் அளவு குறைக் கப்படமாட்டாதென்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டாலன்றி பம்பா யிலிருந்து சிந்தை தனியாக பிரிப்பதிலிருந்து முஸ்லிம்களுக்கு எவ் வித நன்மையும் ஏற்படாது.

பம்பாய் தீர்மானத்தின் நான்காவது பிரிவில் முஸ்லிம்களுக்கு எவ்விதமான விசேஷ சாதகங்களும் செய்து கொடுக்கப்பட்டில்லை. ஏனெனில் எல்லா சமூகத்திற்கும் மனச்சாட்சியின் சுதந்தரம் தெய்வ வழி பாட்டில் சுதந்தரம், மார்க்கப்பிரசாரத்தில் சுதந்தரம் முதலியவைகள் இருக்கின்றன. பம்பாய் தீர்மானத்தின் 5-வது பிரிவில், சட்டசபையிலுள்ள எந்த சமூகத்தினருடைய அங்கத்தினர் களில் நான்கில் மூன்று பாகத்தார் ஏதேனும் ஒரு பிரேரணையை வேண்டாமென்று ஆட்சேபித்தால், அது சட்டசபைக்குக் கொண்டு வரக்கூடாதென்று கூறப்பட்டிருக்கிறது. இது முஸ்லிம்களுக்கு புதிதாக செய்து கொடுக்கப்பட்ட சாதகமல்ல. ஏனெனில் இந்நிபந் தனை லக்னோ ஒப்பந்தத்தில் உள்ளதேயொழிய புதிதாக ஒன்றுமல்ல.

அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி செய்துள்ள தீர்மானங்களை மேலே செய்துள்ள பரிசீலனைகளைக் கொண்டு ராஜீய விஷயங்களில்

அனுபவமும் பழக்கமுமுள்ள முஸ்லிம்கள் வெகு எளிதில் ஒரு விஷயத்தை உணர்ந்துகொள்ளக் கூடும். அதாவது என்னவென்றால் ஹிந்துகாங்கிரஸ் வாதிகள் தங்கள் வாலைப்பிடித்துச் செல்லும் சில முஸ்லிம்களின் உதவியைக் கொண்டு நிறைவேற்றியிருக்கும் இத்தீர்மானத்தால் புதிய "இந்து முஸ்லிம்" ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தக் காணோம். இக் கனவு முஸ்லிம்களை ஏமாற்றி மோசஞ்செய்வதே யொழிய வேறல்ல. விஷயம் தெரியாத பாமர முஸ்லிம்கள் ஏதோ பெரும்பான்மை ஜனத் தொகையில் ஒரு மாகாணத்தைத் தனியே ஸ்தாபிக்கப் போவதாக மோகங்கொண்டு தங்களுக்குள்ள சமூகவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை இழக்க இணங்கி யிருக்கிறார்கள். முஸ்லிம்கள் வங்காளத்திலும் பஞ்சாபிலும் பெரும்பான்மையினராக இருப்பதால் ஏற்படும் சாதக உரிமைகளைவிட்டுக் கொடுக்க லக்னோ ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டது, முஸ்லிம்கள் செய்த ஒரு பெருந்தவறாகும். பற்பல சட்டசபைகளில் முஸ்லிம்களுக்கு தற்சமயமிருந்துவரும் சமூகவாரிப் பிரதிநிதித்துவ உரிமைகளை விட்டுக்கொடுக்க இணங்குவார்களாகில் முஸ்லிம்கள் மற்றொரு பெருந்தவறைச் செய்தவர்களாவார்கள். சமூகவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழிக்க வேண்டுமென்று காலையிலும் மாலையிலும் இரவிலும் பகலிலும் ஓயாமல் கூறிவரும் ஹிந்து சமூக வாதிகள், தனிவாக்காளர் தொகுதியின் பிரகாரம் தற்சமயம் முஸ்லிம்கள் அனுப்பும் பிரதிநிதிகள் சட்டசபைகளில் பெரும் கொள்ளிகளா யிருக்கிறார்களென்று கூறுகிறார்கள். ஹிந்து சமூக வாதிகள் கோருவதெல்லாம் சட்டசபைகளுக்கு முஸ்லிம் பிரதிநிதிகளாக வருபவர்கள் ஹிந்து சமூக வாதிகளின் பாடலுக்குத் தாளம் போடக் கூடியவர்களாக இருக்கவேண்டு மென்பதே. கூட்டுத் தொகுதி வைக்கப்பட்டால் முஸ்லிம் பிரதிநிதிகள் ஹிந்துக்கள் கோருவதுபோலவே தெரிந்தெடுக்கப்பட வேண்டியிருக்கும். கூட்டுத்தொகுதி கொண்டுவரப்பட்டால் ஹிந்துக்கள் தங்களுடைய செல்வப்பெருக்கினாலும் தங்களுக்குள்ள இதர செல்வாக்குகளினாலும் தங்களுக்கு வேண்டிய முஸலிம்களையே தெரிந் தெடுக்கும்படி முஸ்லிம் வாக்காளர்களைச் செய்துவிடக் கூடும். தேர்தலில் பழக்கமும் அனுபவமுமுள்ளவர்கள் ஓட்டுகள் எவ்வாறு சேகரிக்கப்படுகின்றனவென்பதையும் கத்தரிக்காயைப்போல் ஓட்டுகள் விலைக்கு வாங்கப்படுகின்றனவென்பதையும் நன்கறிவார்கள். முஸ்லிம் வாக்காளர்களில் பெரும்பான்மையினர் ஏழைகள். இவர்களிடமிருந்து ஓட்டுகளை சேகரிப்பது ஹிந்துக்களுக்குக் கஷ்டமான காரியமாகாது. ஓட்டு வியாபாரம் ஹிந்து சமூகத்தின் ராஜீய பனியாக்களுக்கு

மிகவும் சுலபமான வியாபாரமாகும். அவர்கள் தங்கள் வியாபாரத்தை வெகு சுறுசுறுப்பாக செய்து முடிப்பார்கள்.

"அலிகர் மேயில்"

சுகாதாரப் பகுதி.

உணவின் இரகசியம்

ஆசிரியர் மாட்டிராம் கூறும் விபரம்.

நாம் உண்ணும் ஆகாரத்தில் வெகு சொற்பமான சத்து ஒன்றிருக்கிறது. அச்சத்திற்கு வைடமின் என்று பெயர். ஆகாரத்தில் வைடமின் மிகக் குறைவாகவே இருந்தபோதிலும் அதுவே தேக சுகத்திற்கு அவசியமானது. வைடமினிலுள்ள ஆகாரத்தை நாம் உட்கொள்ளாதிருந்து விடுவோமாயின் அதனால் தீமையே விளையும். அதனால் வயதை அடைந்தவர்களை விட சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்குமே அதிகத் தீங்குண்டாகும். எந்தெந்த ஆகாரத்தில் எவ்வளவு வைடமின் அடங்கி இருக்கிறதென்பதைக் கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டமானது. நாம் அவைகளை சீக்கிரத்தில் பரிசோதித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாது. ஒரு பரீட்சை செய்து பார்க்கக் குறைந்தது மூன்று மாதங்களாவது செல்லும். ஆனால் அதனுடைய முடிவைத் தெரிந்து கொள்ள பல வருஷங்கள் செல்லும்.

வைடமினைப் பார்த்தவர்களாவது தனியாகப் பிரித்தெடுத்தவர்களாவது இதுவரை ஒருவருமில்லை. எனினும் அது இருக்கிறதென்பதையும், மனிதன் உயிர் வாழ்வதற்கு அது அவசியமென்பதையும் நாம் அறிவோம். அதனாலே அதற்குப் பெயர்களும் கொடுத்திருக்கிறோம். பலவகைப்பட்ட மிருகங்களுக்கும் பல ஆகாரத்தைக் கொடுத்துப் பார்த்தே நாம் அவற்றை அறிந்து கொள்ளுகிறோம். மிருகங்களுக்கு அதிகமாக சுத்தஞ் செய்யப்பட்ட ஆகாரங்களைக் கொடுத்தால் அவைகள் பிழைக்கமாட்டா. எவ்வளவுக்கெவ்வளவு வைடமினில்லாத சுத்தமான ஆகாரத்தைக் கொடுக்கிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் மிருகங்கள் வியாதிபடைந்து விடுகின்றன. மிருகங்கள் வியாதியடைந்துவிடில் எந்த ஆகாரத்தில் வைடமின் கலந்திருப்பதாக நாம் சந்தேக

முறுகிறேமோ அந்த ஆகாரத்தை அவைகளுக்குக் கொடுக்கிறேம். அவைகள் நாளடைவில் சௌக்கியமடைந்தால் நாம் கொடுத்த ஆகாரத்தில் அவ்வியாதியைப் போக்கக் கூடிய ஒருவகை வைட்மின் அதில் அடங்கியிருப்பதாக அறிந்து கொள்ளுகிறேம். பிறகு நாம் உட்கொள்ளும் உணவோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிந்து கொள்ளலாம்.

வியாதியும் ஆகாரத்தைப் பொருத்ததே.

நாம் இங்கே ஒரு உதாரணத்தைக் கூறுவோம். வைட்மினில், வைடமின் (அ); வைட்மின் (ஆ), வைடமின் (இ), என்று பலவகையுண்டு. ஒரு எலிக்கோ அல்லது கோழிக்கோ வைடமின் (அ) அல்லாத ஆகாரத்தைக் கொடுப்போமாகில் அது நாளடைவில் கண் வியாதி பெற்று பார்வையை இழந்து விடுகிறது. வார்சேல்ஸ் உடன் படிக்கைக்குப் பிறகு வீயன்னு நகரிலுள்ள குழந்தைகளுக் கெல்லாம் இவ்வியாதியே பற்றிற்று. அச்சமயம் பட்டினி கிடக்க நேர்ந்ததே அதற்குக் காரணம். உள்ளூர் வைத்தியர்கள் எவ்வளவோ சிகிச்சை செய்துப் பார்த்தும் எவ்விதபலனு முண்டாகவில்லை. டாக்டர் ஹாரிட்சிக் இவ் வியாதியின் காரணத்தை உடனே அறிந்து கொண்டார். ஆகாரங்களிலுள்ள வைடமின்களைப் பற்றிய தேர்ச்சி அவருக்கு அதிகமுண்டு. வைடமின் (அ) சேர்ந்திருந்த ஆகாரத்தைக் கொடுத்துவர 10 தினங்களில் கண்ட வியாதி சௌக்கியமடைந்தது. இதைவிட வேறு எம் மருந்தாவது இவ்வளவு சீக்கிரத்தில் குணமடையும்படிச் செய்ய முடியுமா ?

ஒவ்வொரு வகையான ஆகாரத்திலும் ஒரு வைடமினாவது பல வைடமினாவது இருக்குமென்று சொல்ல முடியாது. அவைகளெல்லாம் சேரும்படி நாம் ஆகாரத்தை கலந்து கொள்ளவேண்டும். வைடமினைப்பற்றிய விஷயங்கள் நமக்குத் தெளிவாகத் தெரிகிறவரையில் அவைகளுக்கு வைடமின் அ, ஆ, இ, ஈ, உ. என்று இவ்விதமே பெயரிட்டழைப்போம்.

வைடமின் (அ) மிருகங்களின் கொழுப்பிலும், பச்சை ஆகாரத்திலும் அடங்கியிருக்கிறது. மஞ்சள் நிறமான பல ஆகாரவஸ்துக்களில்கூட அது இருக்கிறது. இவ்விதம் வெண்ணெய், பால், பாலடைக்கட்டி, ஆட்டு மாமிசக் கொழுப்பு, மாட்டிறைச்சிக் கொழுப்பு, கீரை, முட்டை, மஞ்சள், சோளம், கிழங்கு, வாழைப்பழங்கள், தக்காளி முதலியவைகளில் வைடமின் (அ) இருக்கிறது. நாம் உட்கொள்ளும் உணவில் அது குறையுமாகில் தேக வளர்ச்சியும் குறைவதோடு கண் வியாதியு முண்டாகும். ஜலதோஷம், கப ஜுரம்; க்ஷய ரோகம்

முதலியவைகளும் உண்டாகி விடுகின்றன. கொழுப்பைத் தின்பவர்களைவிட தின்னாதவர்களுக்கே க்ஷய ரோகம் சீக்கிரத்தில் பற்றுகிறது.

வைடமின் (ஆ) முட்டைகள், பழங்கள், கோதுமை முதலிய தானியங்களிலு மிருக்கிறது. ஆகையால் ரொட்டி கோதுமைமா முதலியவைகளிலிருந்து அது நம் சரீரத்திற்குக் கிடைக்கிறது. வைடமின் (ஆ) பீரிலாவது அல்லது ஒயினிலாவது கிடையாது. ஆனால் கிழங்குகள், உருளைக்கிழங்கு, வெங்காயம், ஆரேஞ்சு, ஆப்பிள் முதலியவைகளிலுமிருக்கிறது. நாம் உட்கொள்ளும் உணவில் அது அதிகமில்லாவிடில் முடக்குவாதம் முதலிய நரம்பு வியாதிகளுண்டாகி சாக நேரும்.

சத்துள்ள உணவுப் பொருள்.

வைடமின் (இ) ஆரஞ்சு, திராட்சைப் பழம், வெங்காயம், எலுமிச்சம்பழம் முதலியவைகளிலிருக்கிறது. உட்கொள்ளும் ஆகாரத்தில் இது இல்லாவிடில் ஒரு நூதன வியாதியுண்டாகிறது. மூட்டுக்கு மூட்டு வீக்கம் காணும். நரம்புத் தளர்ச்சி, இருதய நோய் முதலியவைகளுண்டாகி முடிவில் கொன்றேவிடும்.

வைடமின் (ஈ) அநேகமாக வைடமின் (அ) வோடேயே சேர்ந்திருக்கிறது. ஆகையால் அது மிருகங்களின் கொழுப்பு, வெண்ணெய், பால், மீன் எண்ணெய் கரிகாய்கள் முதலியவைகளிலிருக்கிறது. ஆகாரத்தில் அது கலவாதிருப்பதால் குழந்தைகளுக்கு எலும்பு வளைவதால் ஏற்படும் ஒருவகை வியாதி ஏற்படுகிறது. இவ்வியாதி இங்கிலாந்தில் தான் அதிகமாயிருக்கிறது. ஏனெனில் வைடமின் (ஈ) அங்கு அதிகமாக உள்ளவஸ்துக்கள் மிகுதியாகக் கிடைப்பதில்லை.

வைடமின் (உ) வைப்பற்றி நாம் இப்பொழுது கவலை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அது கோதுமை எண்ணெய் முதலியவைகளிலிருக்கிறது. சரீர வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது.

வைடமின்களைக் கண்டு பிடித்ததால் பொது சுகாதார அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பல சௌகரியங்களேற்பட்டிருக்கின்றன. ஜனங்கள் உட்கொள்ளும் ஆகாரத்தை எப்படி விருத்திசெய்வது ? என்னைப்போன்ற சிலர் சாப்பிடும் வஸ்துக்களில் அடங்கி யிருக்கும் சத்துக்களை ஜனங்கள் அறிந்துகொள்ளும்படி அவர்களுக்குக் கல்வி கொடுக்கவேண்டு மென்று அபிப்பிராயப்படுவோம். வேறு சிலர், கெடாமலிருக்கும்படி டப்பிகளில் அடைத்திருக்கும் மாமிசம் மீன் போன்றவைகளில் வைடமின் அழிந்துபோகிற படியால் அப்

படிப்பட்ட உணவுகளையே விற்காதபடி செய்துவிடுவோமென்று கூறுகின்றனர்.

அனுசரிக்கும் விதி யாது

டப்பிகளில் அடைத்துக்கெடாமல் வைக்கப்படும் உணவுகளில் வைடமினே கிடையாதென்று பலர் பிடிவாதமாகக் கூறிவருகின்றனர். அதில் எனக்கு வெகுகாலமாக சந்தேகமிருந்தே வருகிறது. ஏனெனில் டப்பிகளில் அடைத்திருக்கும் மாவிலோ அல்லது மாமிசத்திலோ உள்ள வைடமின் (அ) வாவது அல்லது வைடமின் (ஈ) யாவது எவ்விதம் அழிந்து விடுகிறதென்பது எனக்கு விளங்கவில்லை. அவ்வித ஆகாரங்களில் வைடமின் (அ) (ஈ) இரண்டு மிருப்பதாக சமீபத்தில் வெளிவந்த புஸ்தகமொன்று கூறுகிறது. சாதாரண காய்கறிகளில் வைடமின் (அ) வும், (ஈ) யும் இல்லையென்பது உண்மையே.

கடைசியாக வைடமினைப்பற்றி நாம் செய்யவேண்டிய தென்ன? "வைடமின் முதலியவைகளைப் பற்றியோசிப்பானேன்? வியாதியோ அல்லது சௌக்கியமோ அதிருஷ்டப்படிவரும்," என்ற எண்ணத்தின் பேரில் அதை ஆராய்ச்சி செய்யாமல் விட்டுவிடுவதா? அல்லது "வைடமினில்லாத ஆகாரத்தையே சாப்பிடாதிருந்து விடவேண்டு" மென்று ஒரு தேர்ந்தவர் கூறும் யோசனைப்படி நடப்பதா? இவை இரண்டும் எனக்கு பைத்தியக் காரத்தனமாகவே தோன்றுகின்றன இரண்டுக்கும் மத்தியான ஒரு வழியை அனுசரிப்பதே நலம். உண்மையில் பலன் தரத்தக்க வைடமினைப்பற்றி அறிந்து கொள்ள முயலவேண்டும். வைடமின் (இ) அதிலில்லை என்ற காரணத்திற்காக டப்பிகளில் அடைத்துள்ள மாமிசங்களையும் மற்றவைகளையும் புறக்கணித்து விடுவது சரியல்ல. நாம் முக்கியம் கவனிக்கவேண்டியது என்னவெனில் உட்கொள்ளும் பலவகை பதார்த்தங்களிலும் எல்லா வைடமினும் கலந்திருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே நமது பொது அறிவைக் கொண்டு ஆகாரத்தை ஆராய்ந்துணரவேண்டும்.

ஆப்கானிஸ்தானம்.

ஆப்கானிஸ்தானம் சுதந்தரம்பெற்ற வரலாறு.

மிஸ்டர் வாஸித்யூ பி. மேஹ்தர் பாரிஸ்டர் அட்லா.

பல்லாயிரம் வருஷமுதற்கொண்டு ஆப்கானிஸ்தானம் இந்திய வாயற்படிக்கு ஒப்பாகவே இருந்து வருகின்றது. பூர்வீக வெற்றியாளர்களான சிகந்தரே ஆஜம் ஈரானியர், மொகலாயர், தைமூர்லங், நாதிர்ஷா முதலியவர்கள் இதே வாயிலின் வழியாக இந்தியாவின் செழிப்பான பூமிக்கு எட்டியிருந்தனர்.

ஆப்கன் சமூகங்கள்

ஆப்கானி ஸ்தானத்தை பூர்வீக தேசமெனச் சொல்லினும் ஆப்கானிஸ்தான சமூகங்களை பூர்வீக சமூக வம்சத்தாரென சொல்ல முடியாத நிலைமையாயிருந்து வந்தது. அதற்குக் காரணம் யாதெனில் ஆப்கானிஸ்தானத்தில்அடிக்கடி மாறுதலானநிகழ்ச்சிகள் சம்பவித்துக் கொண்டு வந்தன. ஒரு காலத்தில் கந்தஹார் இந்தியாவுடன் சேர்க்கப்பட்ட ஒரு பகுதியாயிருந்துவந்து. ஈரான், ஆப்கானிஸ்தான் பேரில் ஆதிக்கம் செலுத்திவந்தது. சுருங்கக் கூறுமிடத்து ஆப்கன் பூர்வீக சமூகத்தார், அஹ்மத்ஷா அப்தாலியுடைய காலம் வரையில் அற்றுப் போயிருந்தனரென்றே சொல்லலாம். நாதிர்ஷாவுக்கு பின்னர் துர்ரானியர் கோஷ்ட்டியைச்சேர்ந்த நற்பாக்கியம் வாய்ந்த ஒருவரே தற்போதைய ஆப்கானிஸ்தானத்தின் அஸ்திவாரத்தை நிலை நிறுத்தலானார்.

சுயேச்சை நிலைமை

இந்திய ஆங்கில அரசாங்கத்தாருக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கு மிடை மூன்று தடவைகளில் யுத்தம் நேரிட்டுள்ளது. முதல் யுத்தம் 1841-ல், இரண்டாவது 1847-ல், மூன்றாவது 1919-ல். 1921-ல் ஓர்சமாதான உடன்படிக்கை நிறைவேறியது. இந்த உடன் படிக்கையிலிருந்தே ஆப்கனின் சுயேச்சை சுதந்தரங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுகாறும், இந்திய ஆங்கில அரசாங்கத்தாரால் ஆப்கானிஸ்தானத்திற்கு ஓர்வித உபகாரச் சம்பளம் நடந்து வந்தது. அதனால் ஆம்கானி ஸ்தானத்திறகு ஏற்பட்டிருந்த கட்டுப்பாடாவது:— அது தன் இஷ்டப்படி இதர அரசாங்கங்களோடு எத்தகைய உடன்

படிக்கையும்செய்து கொள்ளக்கூடாது. அல்லது அது இதர அரசாங்க சபைகளுக்கு தன்னுடைய பிரதிநிதிகளை யனுப்பவும் முடியாது.

1921 வருஷத்திய உடன் படிக்கைக்கு பிற்பாடு ஆப்கானிஸ்தானம் தன்னுடைய பிரதிநிதிகளை லண்டன், பாரிஸ், பர்லின், ரோம் மாஸ்கோ, அங்கோரா, தெஹ்ரான் முதலிய நாடுகளுக்கு அனுப்பிவிட்டது. வாஷிங்டனுக்கும் ஆப்கன் பிரதிநிதி அனுப்பப்படுவதற்கிருந்த சமயம் சில காரணங்களினால் அனுப்பப்படவில்லை.

சமூகங்கள்

ஆப்கானிஸ்தானத்திலுள்ள சமூகங்களிலெல்லாம் "துர்ரால்" என்ற சமூகமே எல்லாவற்றிலும் மேம்பாடும் அதிகாரமும் வாய்ந்துள்ள சமூகமாகும். துர்ரானி சமூகத்தார் தம்மை இஸ்மாயீல் வம்சத்திலுள்ளவரென பாராட்டிக் கொள்ளுகிறார்கள். துர்ரானியர்களைத்தவிர அங்கு தாஜியக்காஸியி என்ற இதரசமூகத்தார்களுமிருந்து வருகிறார்கள். ஆனால் முஸ்லிம் சமூகத்தார்களே மிகுதியாகயிருந்து வருகிறார்கள். காபிரான சமூகத்தாகள் போஜியத், ஸர்தஷி, பூர்வீக கிரீஸ் என்ற பலவேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். ஆப்கன் ஜனங்கள் மிக்க பராக்கிரமசாலிகள். ஒரு தடவை, நான் ஓர் வெள்ளைக்கார சிப்பா யொருவரை இந்தியாவில் கண்டுபேச சந்தர்ப்பமேற்பட்டது. அந்த வெள்ளையர் ஆப்கானியரோடு சண்டைசெய்திருந்தவர். அவர் என்னோடு பேசுகையில் ஒரு ஆப்கான் போர்வீரர், நான்கு வெள்ளைக்கார சிப்பாய்களுக்கு சமமானவரெனக் கூறினார். இதனின்றும் நேயர்கள், ஆப்கானியர்களுடைய பலத்தை உத்தேசிக்கக் கூடும். பட்டாணியர் என்ற அவர்கள் தங்களுக்கு நிகரில் உலகத்தின்கண், வேறெவரையும் அவ்வளவு பலசாலிகள் என நினைக்கக்கூடாத கர்வம் படைத்தவர்கள்.

ஆப்கானிஸ்தானில் சீர்திருத்தத்தையும் ஒழுங்கு முறைகளையும் அடைந்துள்ளசேனைகள் ஓர் லக்ஷமிருக்கலாம். ஆனால் அவசியம் நேரிடுங்கால் ஆப்கன் அமீரவர்கள் 10-லக்ஷம் வாலிபர்களையும் படைகளில் திரட்டிவிடக்கூடும். இத்தனைக்கும் ஆப்கானிஸ்தானத்தின் ஜனத்தொகையோ 50-லக்ஷந்தான். ஆப்கானியர்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள். அவர்கள் மதப்பற்றில் தேர்ந்தவர்கள்.

கைத்தொழில் வித்தை

ஆப்கன் வாசிகள் விவசாயத்தில் மிக்க சிரத்தையும் ஊக்கமுமுள்ளவர்கள். புஷ்பச்செடிகளையும் கனிவர்க்கங்களையும் வைத்துப் பயிராக்குவதிலும் அவற்றிற்கு நீர்ப்பாய்ச்சுவதிலும் சீனவாசிகளுக்குச் சமானமாவர்.

தோல், உலரவைத்த கனிவர்க்கங்கள், பட்டு, ஆட்டுரோமம், ரத்தினக்கம்பளம் பெருங்காயம் முதலிய சரக்குகள் அங்கு ஏற்றுமதியாகின்றன.

தொழிலும் இயற்கைச் செல்வமும்

ஆப்கானியர் பெரும் சாதுர்யமுடையவர்கள். அவர்கள் தங்கள் நாட்டுச் சரக்குகளை மூட்டைகளில் கட்டிக்கொண்டு இந்தியா, ஈரான், தென்ஆப்ரிக்கா ஆஸ்திரேலியா வரையிலும் போய்ச்சேர்ந்து விடுகிறார்கள். அவர்கள் எங்கே போனாலுங்கூட தம் வியாபாரத்திற்காக அதிக பிரயாசை எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு தற்கால நாகரீகத்தை யனுசரித்து பயிற்சி கொடுக்கப்படுமாகில் அவர்கள் திறமை வாய்ந்த வர்த்தகர்களாய் விடுவர் என்பதற்குச் சந்தேகமில்லை. நிற்க, ஆப்கன் பூமியும் இயற்கைப் பொக்கிஷங்களைக்கொண்டுள்ளதாகும். இராக், ஈரான் இப்பூமிகளில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் ஏராளமாயிருந்து வருவதற்கிணங்கவே பலுஜிஸ்தானத்திலும் மண்ணெண்ணெய் வெளியாகின்றது. ஆப்கானிஸ்தானத்திலும் அவசியம் அக்கிணறுகள் இருக்கலாமென்பதற்கு நம்பிக்கையுண்டு. ஆப்கன் நதிகளிலுள்ள மணலில் தங்கப் பொடியும் கலந்திருக்கின்றது. இவைகள் தவிர இரும்பு, செம்பு, கந்தகம், ஈயம், செம்பு, வெள்ளி, சுர்மா, சீமைச் சுண்ணாம்பு முதலிய உலோகப் பொருள்களும் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன.

அமீர் அமானுல்லாகான்

தற்போதைய ஆப்கன் அரசராகிய அமீர் அமானுல்லாகான் அவர்கள் 1919-ல் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அன்னார் சிம்மாசனமேறுவதற்கு சில நாள் முன்னர் அவருடைய தந்தையாகிய அமீர் ஹபீபுல்லாகான் ஆங்கிலேயர்களோடு அவசியத்திற் கதிகமாய் சிநேகாபிமானத்தை வெளியிட்டாரென்பதை முன்னிட்டுகொல்லப்பட்டுப் போனார். அவருடைய சிறிய இரண்டு குமாரர்கள் தங்கள் சிறியதந்தையாகி நஸ்ருல்லாகானுக்குப் பக்கபலமாகமாக யிருந்து வந்தமையால் நஸ்ருல்லாகான் ராஜதானிப் பட்டணமாகிய காபூலை தமக்குள் வசப்படுத்திக்கொள்ளமுயற்சித்தார். ஆனல் அச்சமயம், அமீர் அமானுல்லாகான் மிக்க வீரதீரத்துடன் பாடுபட்டு வெற்றியடைந்து கொண்டார். இப்போது அவர்களின் சகோதரர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து விட்டனர். ஆனல் அவருடைய சிறிய தகப்பனாகிய நஸ்ருல்லாகானின் கதி என்ன வாயிற்றென்று சொல்லமுடியவில்லை. அவர் இறந்து போனாரென்பதும் அல்லது யாதொரு அன்னிய தேசத்திற்கு ஓடி விட்டாரென்பதும் சந்தேகமே.

அமீரின் சீர்திருத்தங்கள்

அமீர் அவர்களின் பிரதான நோக்கம் ஆப்கானிஸ்தானத்தை புதிய சீர் திருத்த அமைப்புக்கு கொண்டு வரவேண்டுமென்பதே யாகும். இவ் விஷயத்தில் அமீர் அவர்கள், ஜப்பான் அரசாங்கத்தாரின் சீர்திருத்தங்களை நமூனுவாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். மிக்காடோ, தேசிவ்ஹெத்தோ அரசர்கள் தங்கள் தேசத்திற்குள் எத்தகையநவீன சீர்திருத்தங்களை அமைத்துக்கொண்டு போகிறார்களோ அதே பிரகாரம் அமீரும் தம் தேசத்தில் அத்தகைய சீர் திருத்த அமைப்புகளுக்காக சிரத்தை யெடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அமீர் அவர்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தைக்கு நிகரில் ஜப்பான் சக்கவர்த்தியின் வேலைகள் அவ்வளவு கடினமான தல்ல வென்றேகூற வேண்டும். காரணம் யாதெனில், ஆப்கானியர்கள் அளவுக்கு மிஞ்சி ஒவ்வொரு அற்ப காரியங்களிலும் பிடிவாதம் செய்யும் தன்மை வாய்ந்தவர்களானபடியால் அவர்கள் எடுத்ததற்கெல்லாம் ஆக்ஷேபனைகள் செய்து குழப்பத்தை யுண்டாக்கிக்கொள்வர். சென்ற 3 வருஷ காலத்திற்குள்ளாக முக்கியஸ்தர்களுக் கிடையே 2 தடவை கலவர மேற்பட்டு விட்டது. ஆனால் அமீர் அவர்கள் அக்கலவரங்களை மிக்க சாதுர்யமாகவும் சாத்வீகமாகவும் அடக்கி வைத்தார். இவையெல்லா மிக்க இன்னொரு சங்கடமுமுண்டு. அதாவது:— அமீர் தம் தேசத்திற்குள் இருப்புப்பாதைகளை ஏற்படுத்தி சீர்திருத்தப் போக்கு வரத்து சாதனங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியாமலிருக்கிறது. இச்சந்தர்ப்பத்திற் கிடையே அமீர் இவ்வளவு பாடுபட்டு வருகிறார். இருப்புப்பாதை ஏற்படுத்தாதற்குக் காரணம் இருப்புப்பாதை ஏற்படுத்தி விடும்பட்சத்தில் ஆங்கிலேயரும், ருஷ்யரும் ரெயில் மார்க்கமாய் ஆப்கானிஸ்தானத்தில் பிரவேசித்து அதனை வெற்றியடைந்து கொள்வதற்கு பெரும் அனுகூல மேற்பட்டுப்போம் என்பதே. இப்படியிருந்தும் அமீருடைய முயற்சி மேன்மேலும் விருத்தியடைந்து கொண்டே செல்லுகின்றது. துருக்கியிலுள்ள பல விதவித்வான்கள் ஆப்கானிஸ்தானதில் தருவிக்கப்பட்டு அவர்களின் மூலமாய் தேசிய அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. துருக்கி உத்தியோகஸ்தர்கள் ஆப்கன் சிப்பாய்களுக்கு நவீன முறைப்படி பயிற்சி புகட்டிவருகிறார்கள். ஆப்கன் பொருளாதாரம் துருக்கியர்வசமே யிருந்துவருகின்றது. சுயமதஸ்தர் (முஸ்லிம்) என்பதைப் பாராட்டி துருக்கியர்களுக்கு ஆப்கானி ஸ்தானத்தில் மதிப்பேற்பட்டிருப்பினும் அங்கு ஐரோப்பிய வித்வான்களுக்கும் மதிப்பு இல்லாமலில்லை. தேசீயம் வியாபாரம் சம்பந்தமான காரியங்களில் அமெ

ரிக்கன், ஜெர்மன் உத்யோகஸ்தர்களும் வேலை பார்த்து வருகிறார்கள்.

ஒரு ஜெர்மன் கம்பெனியாரே, ஆப்கானிஸ்தானத்திலுள்ள ஏற்றுமதி இறக்குமதி விஷயங்களில் குத்தகை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றொரு ஜெர்மன் கம்பெனி, ஆப்கன் உலோகச் சுரங்கங்களின் குத்தகையெடுப்பதற்காக வேண்டி ஆப்கன் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இவ்விஷயம் அமீர் அவர்களின் ஆலோசனையின் கீழிருந்து வருகிறது.

சுங்கவரி

ஆப்கானிஸ்தானத்தில் இறக்குமதி செய்யப்படும் எல்லா சரக்குகள் மீதும் சுங்கவரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காலர், உருமால், பவுடர் முதலிய சாமான்கள்மீது 100-க்கு 100 வீதம் சுங்கவரி வாங்கப்படுகிறது. பெஷாவர், கூட்டா முதலிய விடங்களில் ஆப்கன் காரியஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆப்கன் ஸ்தானீக காரியாலயங்கள் ஏற்பட்டுள்ள ஐரோப்பா, ஆசியா முதலிய கண்டங்களிலும் வியாபார ஏஜெண்டுகள் இருந்து வருகிறார்கள். அவர்கள் ஆப்கானிஸ்தான வியாபார அபிவிருத்தியை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரக்கூடிய எல்லாத் துறைகளிலும் கவனித்து வருகிறார்கள். துருக்கி அரசாங்கத்திற்கும் ஈரானுக்குமிடையே வியாபார உடன்படிக்கைகளும் நிறைவேறிவிட்டன.

அரசாங்க ஏற்பாடு.

ஆப்கன் அரசாங்க ஏற்பாட்டிலும் பெரும்பாலான சீர்திருத்தம் உண்டாயிருக்கிறது. ஆப்கன் தேசம் மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, காபூல், கந்தஹார், துர்கிஸ்தானம், ஹராத், பதுக்ஷான். அமீர் காஜிஅவர்களுக்கு தங்கள் பிரஜைகள்மீது எத்தகைய நிர்ப்பந்தமும் ஏற்படக் கூடாதென்ற விஷயத்தில் சதா கவலையிருந்து வருகின்றது. ஒவ்வொரு தனி பகுதியும் ஒரு கவர்னர் அல்லது தலைவருக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது. நிற்க, ஆலோசனை சபை யொன்றும் அமீர் அவர்களால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு பெயர் "கில்வத்". சமூகத் தலைவர்கள், பொதுஜனப் பிரதிநிதிகள் என்ற அங்கத்தினர்களைக்கொண்டு இது நடைபெறுகின்றது. இதன்னியில் வேறு இரண்டு சபைகளுமுண்டு. அவற்றுள் ஒன்று பிரமுகர் சபை. மற்றது தேசிய மாதுசபை. உயர்தர நீதி விசாரணை நடத்தும் வேலைக்கு பதவி வகிப்பவர் காஜி (ஜில்லா ஜட்ஜு) என்பவர். காஜிக்கு கீழ்ப்பட்டவர் கொத்தவால் (மாஜிஸ்டிரேட்) என்

பவர். அதைவிட மேற்கொண்ட விசாரணையில் அமீர் அவர்களே நேரில் ஈடுபட்டு விசாரித்து விடுகிறார்கள்.

குடிகளுக்கு பேட்டிகொடுக்கும் முறை

இதெல்லாம் ஒரு புறமிருக்க, பண்டைகால சக்கரவர்த்திகளின் கொள்கை முறைகளை யனுசரித்துள்ள வழியில் வாரத்தில் குறித்த ஒரு நாள், அமீர் தாமே தம்முடைய பிரஜைகளுக்கு நேரில் சமூகங் கொடுத்து பேசுகிறார். அச்சமயம் கேவலத்திலும் கேவலமான தோட்டி முதற்கொண்டு தொண்டமான்வரையிலும் தம் அரசரிடம் தம் முறைபாடுகளை வெளிப்படுத்திக்கொள்ள ஏதுவுண்டாய் விடுகின்றது.

புதிய அபிவிருத்திகள்

ஆப்கானிஸ்தானத்தின் வருஷ வருமானம் 50-லக்ஷம் டாலர்கள் கொண்டதாகும். ஆனால் இந்த வருமானம் அரசாங்க சீர்திருத்தக் காரியங்களுக்கு அத்தியாவசியமான செலவுகளுக்குப் போதாது. அநேக புதிய இலாகாக்களும், ஆண் பெண் பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்படுகின்றன. காபூலில் சர்வகலாசாலைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி, அமீர் அவர்கள் பெருங்கூட்டங் கூட்டமான மாணவர்களை கல்வி பயின்று வரும்படியாக வருஷந்தோறும் ஐரோப்பாவுக்கு அனுப்பி வருகின்றார். பிரான்சு, ஜெர்மனி, இவற்றிற்கே மாணவர்கள் அதிகமாய்ச் செல்லுகிறார்கள். அநேக புதிய ரஸ்தாக்களும் போடப்படுகின்றன. தேசம் முழுவதிலும் யுத்தக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

அமீரின் உருவமும் தன்மையும்

அமீர் அமானுல்லாகான் அதிக உயரமுமில்லை. குட்டையுமில்லை. நடுத்தரமுள்ள உயரம் வாய்ந்தவர். உறுதியான சரீரம் படைத்தவர். யூகமாயும் முகமலர்ச்சியுடனும் பேசுபவர். ஒவ்வொரு விஷயத்திலும் அவருக்குப் பூரண அனுபவமுண்டு. அவருக்கு பஷ்தோ, பாரசீகம், இங்கிலீஷ், பிரான்சு, துருக்கி, உருது முதலிய 7 பாஷைகள் தெரியும். தேசீய உடை ஆங்கில உடை ஆக இருவித உடைகளும் அவரால் கையாளப்படுகின்றன. ஆனால், தம்முடைய உடை தம் தேசத்தில் தயாரான வஸ்திரத்தைக் கொண்டே தயாரிக்கப்பட வேண்டும் என்ற விஷயத்தில்மட்டும் அவருக்கு அதிக கருத்துண்டு. அவரது மாளிகையில் அவரது வாழ்க்கைப்போக்கும் கீழ்நாட்டையும் மேனாட்டையும் பின்பற்றியதாக இருக்கின்றது. தேசத்திற்குப் பிர

யாசவேலைகளைக் கொடுப்பதில் அவர் பின்னடைவதில்லை. தினம் 12-மணி நேரம் வேலை செய்வதினின்றும் அவர் களைத்தும் போவதில்லை. காபூலுக்கு பதிலாக வேறொரு நகரத்தை ராஜதானிப் பட்டணமாக்கிக்கொள்ளவேண்டுமென அமீர் அவர்களுக்கு விருப்ப மேற்பட்டிருப்பதால் அதற்காகுமான திட்டம்போடப்பட்டு வேலைகள் கவனிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

முஸ்லிம்களும் சமூக ஊழியமும்

வரவேற்புப் பிரசங்கம்.

கொச்சி சமஸ்தான முஸ்லிம்களின் மகாநாடொன்று சமீபத்தில நடைபெற்றது. அச்சமயம் ஜனுப் வி. காதிர்குட்டி வரவேற்புப் பிரசங்கத்தை வாசித்தார். அதன் முக்கியபாகம் பின்வருமாறு :—

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை எடுத்துக் கூறி முஸ்லிம்கள் அக்காலத்தில் இருந்த மேன்மையையும் உன்னத ஸ்திதியையும் தற்காலம் அவர்கள்சீர்கெட்டு பரிதாபகரமான நிலையில் இருப்பதையும் ஒப்பிட்டுக் காட்டினார். லௌகிக வைதீக விஷயங்களிலும் செல்வ நிலைமையிலும் ஆத்மார்த்த ஞான விஷயத்திலும் முஸ்லிம்கள் அக்காலத்தில் முன்னேற்ற மடைந்து புகழுடன் விளங்கினார்கள். முஸ்லிம்கள் தங்களுடைய அசட்டையினாலேயே தற்சமயம் சோம்பேறிகளாகவும் ஏழ்மையிலும் தரித்திரத்திலும் மூழ்கியவர்களாகவும் இருக்கிறார்கள். முஸ்லிம்களைவிட தாழ்மையாகவும் கேவலமாகவும் நிலைமையை வகித்து வந்தவர்களெல்லோரும் தற்காலம் முஸ்லிம்களைவிட அதிகமாக முன்னேற்றமடைந்து விட்டார்கள். முஸ்லிம்கள் இதை உணர்ந்தும் தங்களுடைய கேவல நிலைமையைப் போக்கி முன் அடைந்திருந்த நிலைமையையும் புகழையும் அடைவதற்கு சிறிதளவும் முயற்சி செய்யவுமில்லை. அதைப்பற்றி கவனிக்கவுமில்லை. அலட்சியமாக இருக்கிறார்கள்.

முஸ்லிம்களை சரியான வழியில் நடத்திச் செல்ல உண்மையான முஸ்லிம் குருமார்களும் இஸ்லாமிய மார்க்க போதகர்களும் தற்காலம் இல்லாமலிருப்பது மிகவும்வருந்தத்தக்க விஷயமாகும். இதரசமூகத்தினர்களெல்லோரும் தங்களுடைய சமூகத்தை சரிவர அமைப்பதற்கு

முயற்சிகளும் ஏற்பாடுகளும் செய்து வருகையில் நம் சமூக உலமாக்களோ தங்களுக்குள் சொற்ப விஷயங்களைக் குறித்து விவாதங்கள் செய்துகொண்டும் சச்சரவுகள் செய்துகொண்டும் சமூகத்திற்குள் துவேஷத்தினுடையவும், வேற்றுமையினுடையவும், விதைகளை விதைத்துவருகிறார்கள். சமூக முன்னேற்றத்திற்காகவும், சமூக அபிவிர்த்திக்காகவும் வேலைசெய்வதற்கென்று முன்வந்த சமூக ஊழியர்களை நம் சமூக உலமாக்கள் ஆதரிக்காமலும் உதவி செய்யாமலும் சமூக ஊழியர்களை கேலிசெய்து ஏள்னம்செய்தும் வந்தார்கள். சமூகத்திற்காக தங்களுடைய வாழ்நாளையே தியாகஞ்செய்ய சமூக ஊழியர்கள் முன் வந்ததை உலமாக்கள் சற்றும் பொருட்படுத்தவில்லை. புதிய நோக்கங்களையும் கொள்கைகளையும் உலமாக்கள் கேலிசெய்ததல்லாமல் உயர்தரப் படிப்பு படிப்பதையும் வேண்டாமென்று குறை கூறினர்கள். தற்கால நவீன முறைக் கல்விகளைக் கற்பதையும் உலமாக்கள் கண்டனஞ் செய்தார்கள்.

செல்வ நிலைமையிலோ முஸ்லிம்கள் சீர்கேடடைந்து இதர சமூகத்தினர்களைவிட அதிகமாகப் பின்னடைந்து கேவல நிலைமையில் இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்குள் ஏழ்மையும் தரித்திரமும் பிரதி தினமும் அதிகரித்து வருகின்றது. முஸ்லிம்களுக்குள் வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களுடைய தொகையும் குறைவாக இல்லை. முஸ்லிம் பணக்காரர்களோ தர்ம விஷயங்களில் அலட்சியம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஜக்காத்து தொகை இப்பொழுது செலவழிக்கப்படுவதைவிட இன்னும் நல்ல வழியில் செலவழிக்கப்படக் கூடும். சமூக முன்னேற்றத்திற்காகவது, அல்லது சமூகத்தின் கல்வி அபிவிர்த்திக்காகவாவது அல்லது இஸ்லாம் மார்க்கப் பிரசாரத்திற்காகவாவது வேலைசெய்யும் சங்கங்களுக்கு ஜக்காத்துப்பணம் கொடுக்கப்பட்டால் அதனால் அதிக நன்மையும் பிரயோசனமும் கிடைக்கக் கூடும். ரம்லான் மாதத்தில் வீணாக செலவழிக்கப் பட்டுவருகிற ஏராள ஜகாத்துப் பணம் முஸ்லிம் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்கள் கொடுப்பதில் உபயோகிக்கப்பட்டு வந்தால் எவ்வளவு நன்மையாக இருக்கும். அனாதைக் குழந்தைகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றனர். உதவியும் உபகாரமும் தேவையுள்ள முஸ்லிம் பையன்கள் ஆயிரக்கணக்காக இருக்கின்றனர்.

முஸ்லிம் இளைஞர்கள் சமூக ஊழிய வேலையைக் கைகொள்ளல் வேண்டும். இளைஞர்கள் செய்ய வேண்டியிருக்கிற இவ்வேலையில் பெரியோர்களுடையவும் உதவி ஏராளமாகத் தேவையாக இருக்கின்றது. முஸ்லிம்சமூகத்தின் எதிர்காலநிலைமை முஸ்லிம்வாலிபர்கள் கையிலே

தான் இருக்கின்றது. இதை மறக்காமல் சமூக ஊழியத்தில் முஸ்லிம் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்.

அக்கிராசனர் பிரசங்கம்.

அக்கிராசனர் ஜனுப் கே. முஹமத் ஸீதி சாஹிப், பி.ஏ., பி.எல். பின்னர் தம்முடைய அக்கிராசனப் பிரசங்கத்தைச் செய்தார். அவர் செய்த பிரசங்கத்தின் முக்கிய பாகம் பின்வருமாறு :—

இம்மகா நாட்டிற்கு இவ்வளவு ஜனங்கள் வந்திருப்பது எனக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. இம்மகா நாட்டிற்கு இவ்வளவு ஜனங்கள் வந்ததிலிருந்தே முஸ்லிம்கள தங்களுடைய முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கரையும் ஊக்கமும் கொண்டிருக்கிறார்களென்பது நன்கு புலனுகின்றது. முஸ்லிம்களின் தற்கால நிலைமையையும் முஸ்லிம்கள் ஒரு காலத்தில் வகித்திருந்த புராதனநிலைமையையும் எடுத்துக் கூறி முஸ்லிம்கள் முன்னிருந்த பெருமையையும் கீர்த்தியையும் இழந்ததற்குக் காரணங்களையும் சொன்னுர். சமூக ஊழியவேலைகளைச்செய்ய முஸ்லிம்கள் பலர் முன்வருவது கிடையாது. தங்களுடைய வாழ்நாளையும் உலக சுகங்களையும் தியாகஞ்செய்து சமூக ஊழியஞ்செய்ய முன் வருபவர்களுக்கு அவர்களுக்கு தக்க உதவியும், ஆதரவும், ஒத்துழைப்பும் கிடையாது. பெரும் பான்மையோர் சமூக ஊழியர்களுக்கு ஆதரவு கொடுப்பதும் கிடையாது. சமூக முன்னேற்ற விஷயங்களிலும், சமூகத்தின் செல்வ நிலைமையை அபிவிருத்திசெய்யும் விஷயங்களிலும் முஸ்லிம் சமூகத்தைக் காட்டிலும் இதர சமூகத்தினர்கள் அதிக கவனத்தையும் ஊக்கத்தையும் காட்ட ஆரம்பித்திருக்கின்றனர். சமீபகாலம் வரைக்கும் தாழ்ந்த வகுப்பினர்களென்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் களென்றும் பின்னடைந்த சமூகத்தினரென்றும் கருதப்பட்டு வந்தவர்களெல்லாம் இப்பொழுது அதிகமாக முன்னேற்றமடைந்து முஸ்லிம் சமூகத்தை விட பலமடங்கதிகமாக முன்னடைந்து விட்டார்கள்.

1300 வருஷங்களுக்குமுன் முஸ்லிம்களுக்கிருந்த நாகரிகமேன்மையும் புகழையும் அக்கிராசனர் குறிப்பிட்டுக் கூறினுர். புராதன பெருமையையும் கீர்த்தியையும் ஒவ்வொரு சமூகமும் அடைய வேண்டியது அவசியமேயாகும். அரேபியாவின் குடிகள் சண்டையிலும் சச்சரவுகளிலும் முதிர்ந்து கிடந்த காலத்தில் இஸ்லாம் மார்க்கம் தோன்றிற்று. அரேபியாவில் கலங்களும் சமூகச் சண்டைகளில் நாட்டில் இரத்தப் பிரவாகமும் முதிர்ந்திருந்த காலத்தில் அரேபியாவில்

இஸ்லாம் மார்க்கம் உதித்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளால் அரேபியாவில் தோன்றிய மாறுதல் இஸ்லாம் மார்க்கத்தின் பெருமையும் ஒளியையும் உலகெங்கும் பரவச் செய்தது. ரோமாபுரியினர்கள் 800-வருஷங்களில் செய்யமுடியாமற் போன காரியங்களை முஸ்லிம்கள் 80-வருஷங்களில் செய்து முடித்தனர். முஸ்லிம்கள் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் சர்வ கலாசாலைகளையும் ஸ்தாபித்து வைத்தனர். முஸ்லிம்கள் கண்டு பிடிக்காத கலைகளேனும் முஸ்லிம்கள் ஈடுபடாத துறைகளேனும் இருக்கவில்லை.

தற்கால முஸ்லிம்கள் தங்களுடைய முன்னோர்களைப்போல் பெருமைபாராட்டிக்கொள்ளக் கூடியது ஒன்றும் கிடையாதிருக்கிறதென்பதைக்குறிப்பிட்டு அக்கிராசனர் பேசினார். தற்காலம் முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் கல்வியில்லாமல் இருக்கிறார்கள். கல்வி அபிவிருத்தி விஷயங்களிலும் அக்கரையில்லாதவர்களாகவும் கவனம் செலுத்தாதவர்களாகவும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் மொகலாய அரசாட்சி வீழ்ச்சியடைந்ததிலிருந்து இந்திய முஸ்லிம்களினுடையவும் வீழ்ச்சி ஆரம்பித்ததெனக்கூறலாம். ஆத்மார்த்த விஷயங்களில் முஸ்லிம்களைப்போல் முன்னேற்றமடைந்தவர்கள் வேறொருவருங்கிடையாது. ஆத்மார்த்த விஷயங்களில் மட்டும் முன்னேற்ற மிருந்தால் போதுமானதல்ல. லௌகிக விஷயங்களிலும் முன்னேற்ற மடைந்து உலகத்திற்சூரித்தான விஷயங்களிலும் முஸ்லிம்கள் முன்னேற்ற மடைந்திருக்க வேண்டியது அவசியமாகும். முஸ்லிம்களெல்லோரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். ஒரு தகப்பன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும், ஒரு கணவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும், ஒரு சமூகத்தலைவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும், ஒரு யுத்தவீரன் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டுமென்றும் பொதுவாக உலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து காட்டி வழிகாட்டியிருக்கிறார்கள். முஸ்லிம்கள் எல்லோரும் அவ்வழியைப் பின்பற்றிச் செல்லவேண்டும். சமூக ஒற்றுமையின் அவசியத்தையும் தேவையையும் அக்கிராசனர் வற்புறுத்திக்கூறுகையில் முஸ்லிம் சமூகம் பல மடைவதற்கு ஒற்றுமை அத்தியாவசியமென்பதை எடுத்துக்காட்டினார்.

மாணவர் பகுதி.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் கல்வி அபிவிருத்தி.

மாணவர்களின் தொகை.

சென்ற (1925-26) வருஷத்தில் சமஸ்தானத்தின் எல்லா பள்ளிக்கூடங்களிலும் இருந்த மாணவர்களின் தொகை 2,44,234. பிரஸ்தாப வருஷத்திற்கு முந்திய வருஷத்தில் இருந்த மாணவர்களின் தொகை 2,42,398. அதாவது இவ்வருஷத்தில் 1,836 மாணவர்கள் முன் வருஷத்தைவிட அதிகமாகக் கல்வி பயின்று வருகிறார்கள். உயர்தரப் படிப்பு பயிலும் மாணவர்களின் தொகை 515-லிருந்து 560-க்கு உயர்ந்திருக்கின்றது. சர்வ கலாசாலைப் பரீட்சைகளில் மாணவர்கள் தேர்ச்சிபெற்ற அளவும் மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கின்றது. எல். எல். பி. பரீட்சைக்கு இவ்வருஷம் 22 பேர் ஆஜரானார்கள். சென்றவர்களெல்லோரும் பரீட்சையில் தேறிவிட்டார்கள். எம். ஏ. பரீட்சைக்குச் சென்ற 16 மாணவர்களில் 13 பேர் தேறினார்கள். பி. ஏ. பரீட்சைக்கு 145 பேர் சென்றார்கள். 80 பேர் தேறினார்கள். இன்டர்மீடியேட் பரீட்சைக்கு 182 மாணவர்கள் சென்றார்கள். இவர்களில் 82 பேர் தேறினார்கள்.

கல்விக்காகச் செலவு.

சர்வகலாசாலையைச் சேர்ந்த கலாசாலையின் செலவு 3,70,094-லிருந்து ரூ. 3,91,591-க்கு உயர்ந்திருக்கின்றது. மாணவர்களிடமிருந்து வசூலான சம்பளம் 9,698-லிருந்து ரூபாய் 11,598-க்குளத் தொகையும் உயர்ந்திருக்கின்றது.

உஸ்மானிய சர்வகலாசாலையின் மார்க்கப் போதனை கலாசாலையில் பிரஸ்தாப வருஷத்தில் 176 மாணவர்கள் படித்தார்கள். பிரஸ்தாப வருஷத்திற்கு முந்தின வருஷத்தில் 14 பேர் வாசித்தார்கள். பிரஸ்தாப வருஷத்தில் ஷம்ஷுல் உலமா அப்ஜலுல் உலமா முதலிய பட்டப் பரீட்சைக்கு 7 மாணவர்கள் சென்றார்கள். அவர்களில் 6 பேர் தேறினார்கள். நைஜாம் கலாசாலையில் பயிலும் மாணவர்களின் தொகை 261-லிருந்து 270-க்கு உயர்ந்தது. பட்டப் பரீட்சைகளுக்கு சென்னை சர்வகலாசாலையின் பரீட்சைக்கு வந்த மாணவர்களில் 100-க்கு 65 பேர் வீதம் தேறினார்கள்.

சமஸ்தானத்தில் ஆங்கில ஹைஸ்கூல்கள் 14 இருக்கின்றன. அவற்றுள் 6 கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்கள். 7 கவர்ன்மெண்டு உதவிபெற்ற பள்ளிக்கூடங்கள். ஒரு பள்ளிக்கூடம் கவர்ன்மெண்டு உதவிபெருத பள்ளிக்கூடம். அந்த ஹைஸ்கூல் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்ற மாணவர்களின் தொகை 5,686. பிரஸ்தாப வருஷத்தில் ஸ்கூல் லிவிங் சர்டிபிகேட் பரீட்சைக்கு 337 பேர் ஆஜராஞர்கள். இவர்களில் 193 பேர் பரீட்சையில் தேறியதாக சன்னத்துக்கள் கொடுக்கப்பட்டார்கள். பிரஸ்தாப வருஷத்தில் காம்பிரிட்ஜ் லோகல் பரீட்சைக்கு 28 மாணவர்கள் சென்ருர்கள். இவர்களில் 17 பேர் தேறிஞர்கள்.

உஸ்மானிய ஹைஸ்கூல்களின் தொகை பிரஸ்தாப வருஷத்தில் 15-லிருந்து 17-க்கு உயர்ந்தது. இப்பள்ளிக்கூடங்களில் கல்விபயின்ற மாணவர்களின் தொகையும் 8,058-லிருந்து 9,838-க்கு உயர்ந்தது.

மிடில் ஸ்கூலின் தொகை 88-லிருந்து 99-க்கு உயர்ந்தது. இம் மிடில் ஸ்கூல்களில் படிக்கும் மாணவர்களின் தொகை 2,2510-லிருந்து 23,644-க்கு உயர்ந்தது.

தாழ்ந்த வகுப்பினர்களுக்கென்று 52 பள்ளிக்கூடங்கள் இருந்தன. பிரஸ்தாப வருஷத்தில் 1,295-மாணவர்கள் இப்பள்ளிக்கூடங்களில் கல்வி பயின்று வந்தார்கள். முந்தின வருஷத்தைவிட 136 அதிகம்.

பெண்கள் கல்வி.

பெண்கள் கல்விக்காக இவ்வருஷம் 6,39,257ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வருஷத்திற்கு முந்தின வருஷத்தில் பெண்கள் கல்விக்காக ரூபாய் 632,482 செலவழிக்கப்பட்டது.

விசேஷக் கல்விகள் (ஸ்பெஷல் ஸ்கூல்ஸ்) பிரஸ்தாப வருஷத்தில் மூன்றிலிருந்து 5-க்கு உயர்ந்தன. இப்பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களின் தொகையும் 34 35-லிருந்து 3,682-க்கு உயர்ந்தது.

பெண் உபாத்தியாயினிகளின் பயிற்சிக்காக நான்கு பள்ளிக்கூடங்கள் இருந்தன. இப்பள்ளிக்கூடங்களில் உர்து, மராத்தி, கன்னடம், தெலுங்கு முதலிய பாஷைகளில் கல்வி போதிக்கப்படுகின்றது. தொழிற்கல்வி போதனைப் பள்ளிக்கூடங்கள் இரண்டு—ஒன்று ஹைதராபாத்திலும், மற்ருென்று அவுரங்கபாத்திலும்—கவர்ன்மெண்டாரால் பிரஸ்தாப வருஷத்தில் நடத்தப்பட்டு வந்தது.

உஸ்மானிய சென்டிரல் டெகினிகல் இன்ஸ்டியூட்டில் பிரஸ்தாப வருஷத்தில் 321 பேர் கல்வி பயின்று வந்தார்கள். பிரஸ்தாப வரு

ஷத்தில் இப்பள்ளிக்கூடத்தில் செலவு ரூ. 6,7513-லிருந்து 80,592-க்கு உயர்ந்தது. மாணவர்களுக்கு போதனு செலவுமட்டும் 62,279 ரூபாயாகின்றது. இப்பள்ளிக்கூடத்தினுல் ஏற்பட்ட பயனும் மிகவும் திருப்திகரமாக இருந்தது.

ஈரானில் கல்வியபிவிருத்தி

ஆரம்பக் கல்வி

ஈரானில் ஆரம்பக்கல்விப் பள்ளிக்கூடங்கள் 1923-24-ல் பையன்கள் பள்ளிக்கூடங்கள் 468-ம், பெண்கள் பள்ளிக்கூடங்கள் 126-ம் இருந்தன. சமீபத்தில் பிரசுரமாகியிருக்கும், சென்ற வருஷத்திய (1925-26) கவர்ன்மெண்டின் ரிப்போர்ட்டின் பிரகாரம் சென்ற வருஷக் கடைசியில் ஈரானில் ஆரம்பக் கல்வி போதனைக்கு பையன்கள் பள்ளிக்கூடங்கள் 468-ம், பெண்கள் பள்ளிக்கூடங்கள் 135-ம் இருந்தன.

சகேண்டரிக் கல்வி

1923-24-ம் வருஷக் கடைசியில் சகெண்டரி பள்ளிக்கூடங்கள் 52 இருந்தன—13 பெண்கள் பள்ளிக்கூடங்களும், 39 பையன்கள் பள்ளிக்கூடங்களும். சென்ற வருஷக் கடைசியில் ஈரானில் இருந்த சகெண்டரி பள்ளிக்கூடங்களின் தொகை 74. இவற்றுள் பையன்கள் பள்ளிக்கூடம் 57 பெண்கள் பள்ளிக்கூடம் 17.

அன்னிய நாட்டினர் பள்ளிக்கூடங்கள்

ஈரான் கவர்ன்மெண்டார் நடத்திவரும் பள்ளிக்கூடங்கள் தவிர ஈரானில் அன்னிய நாட்டினர்களும் சில பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்திருக்கின்றுர்கள். இவர்கள் அமெரிக்கர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர், ருஷ்யர்கள். ருஷ்யர்கள் பள்ளிக்கூடங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. இப் பள்ளிக் கூடங்களில் சில மிகவும் புராதனமானவை. இவைகளில் சில 1838-ல் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. சில 1874-லும், சில 1879-லும் ஸ்தாபிக்கப்பட்டவைகளாகும். அந்நிய நாட்டினர்களுடைய இப்பள்ளிக்கூடங்கள் பையன்களுக்கும் பெண்களுக்கும் இரு பாலர்களுக்கும் இருக்கின்றன. இப்பள்ளிக்கூடங்களில் சிலவற்றில் பையன்களுக்கும் பெண்களுக்கும் ஒன்றுக கல்வியூட்டக் கூடியதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்நிய நாட்டினர்களின் பள்ளிக்கூடங்களில் கல்விபயிலும் மாணவர்களின் தொகை 9085. இவர்களில் 6,960 பேர்கள் ஆரம்பக்கல்வி பள்ளிக்

கூடங்களிலும் 2,125 பேர்கள் சகெண்டரி பள்ளிக்கூடங்களிலும் படிக்கின்றனர்.

மார்க்கக்கல்வி போதனை

மார்க்கக்கல்வி போதனைக்காக 1924-ல் ஈரானில் 240 பள்ளிக் கூடங்கள் இருந்தன. இப்பள்ளிக்கூடங்களில் 4,979 மாணவர்கள் கல்வி பயின்று வந்தார்கள். சென்ற வருஷக் கடைசியில் மார்க்கக் கல்வி போதனு பள்ளிக்கூடங்களில் 5,984 மாணவர்கள் படித்து வந் தார்கள். மார்க்கக் கல்விபோதனு பள்ளிக்கூடங்களும் 282-ஆக இருந்தன.

ஆரம்பக் கல்விபயிலும் மாணவர்கள்

ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்களின் தொகை 1923-24-ல் 556 97, இவர்களில் பையன்கள் 44489, பெண்கள் 11208. சென்ற வருஷக்கடைசியில் பிரைமெரிக் கல்விபயிலும் மாணவர்களின் தொகை 559 60. இவர்களில் 10972 பெண்கள். பாக்கி யெல்லாம் பையன்கள்.

கல்வி யபிவிருத்திக்குச் செலவு

கல்வியபி விருத்திக்காக ஈரான் கவர்ன்மெண்டு 1923-24-ல் 217472 கினிகளைச் செலவு செய்திருக்கின்றது.

எகிப்து பிரிட்டன் தகாரின் அந்தரங்கம்

மிஸ்டர் ஆர். கார்டன் கானிங்

எகிப்தின் இராணுவ விஷயமாகச் சமீபத்தில் பிரிட்டனுக்கும் எகிப்துக்கும் ஏற்பட்ட தகாறையொட்டி மிஸ்டர் ஆர். கார்டன் கானிங் என்பவர் "மான் செஸ்டர் கார்டியன்" பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் முக்கிய பாகம் பின்வருமாறு :—

சென்ற மாரி காலத்தில் நான் கெய்ரோ நகரில் தங்கியிருந்தேன். எகிப்திய இராஜீய விஷயங்களைப்பற்றியும் ஆங்கிலோ எகிப்திய நிலைமைகளைப் பற்றியும் நான் அங்கிருந்த காலத்தில் ஆராய்ச்சி செய்தேன். இவ்விஷயங்கள் சம்பந்தமாக நான் பற்பல பிரபல

ஸ்தர்களுடன் கண்டு பேசினேன். எகிப்திய இராணுவ விஷயமாக பார்லிமெண்டு சபையின் இராணுவக்கமிஷன் அங்கத்தினர்களுடனும் யுத்த இலாகா மந்திரிகளுடனும் நான் கலந்து பேசினேன். இவ்வருஷம் ஏப்ரல் மாத ஆரம்பம் வரைக்கும் பிரிட்டிஷாருக்கு விரோதமாக எகிப்தில் எவ்வித உணர்ச்சியும் இருந்தது கிடையாது. வப்து கட்சியிலுங்கூட அமிதவாதிகள் என்று சொல்லக்கூடியவர்கள் இரண்டொருவரைத்தவிர வேறொருவருமிருக்கவில்லை.

எகிப்திய இராணுவ சம்பந்தமாக எகிப்தியர்கள் கூறும் கொள்கையின் முக்கிய பாகம் பின்வருமாறு :—

(1) எகிப்திய சேனை ஒன்று ஸ்தாபித்து அதற்கு எகிப்திய இராணுவத்தில் ஒரு எகிப்தியரை சேனாதிபதியாக வைக்கவேண்டுமென்று எகிப்தியர்கள் விரும்புகிறார்கள். இருந்தாலும் ஒரு ஆங்கிலேயரை சேனாதிபதியாக வைத்துக்கொள்வதற்கும் இணங்க எகிப்தியர்கள் தயாராயிருக்கிறார்கள். ஆனால் இப்பதவிக்கு நியமிக்கப்படும் சேனாதிபதி இராணுவ உலகில் தற்காலம் நடைபெற்றுவரும் நவீன யுத்த முறைகளையும் நவீன ஆயுதங்களின் பயிற்சியையும் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

(2) எகிப்திய பணம் சுமார் 12,000,00 பவுன்கள்வரைக்கும் செல வழிப்பதாயின் நவீன முறைப்பிரகாரம் யுத்தம் செய்வதற்கான சகல ஆயுதங்களுடனும் இவ்விராணுவம் இருக்கவேண்டும். பிரயோசனமற்ற பொம்மை விளையாட்டான இராணுவ அமைப்பில் பணத்தைச் செலவழிப்பதற்கு எகிப்து அவ்வளவு செல்வம்வாய்ந்த நாடாக இருக்கவில்லை. சாண்ட்ஹர்ஸ்ட் அல்லது உல்விச்சில் இருக்கும் இராணுவக் கலா சாலைகளைப் போல் எகிப்திலும் இராணுவ கலாசாலை யொன்று ஸ்தாபித்து தற்காலம் இராணுவத்திலிருக்கும் அதிகாரிகளை கலாசாலைக்கனுப்பி நவீன முறைகளில் பயிற்சி செய்விப்பதுடன் இனி இராணுவ அதிகாரிகளாக வரக்கூடியவர்களுக்கும் அக்கலாசாலைகளில் பயிற்சி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று யுத்த இலாக்கா மந்திரி என்னிடம் கூறினார். ஒரு நாட்டின் இராணுவம் தேர்ச்சி யடைந்த இராணுவமாக இருக்கவேண்டுமாயின் அதனுடைய அதிகாரிகள் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்பதை எகிப்து கவர்ன்மெண்டார் இப்பொழுது உணர்ந்திருக்கின்றார்கள். ஆனால் இத்தகைய கலாசாலை ஸ்தாபிக்கப்படுவதை சர்தார் (எகிப்திலிருக்கும் பிரிட்டிஷ் பிரதிநிதி) அங்கீகாரம் செய்யாமல் கலாசாலையை ஸ்தாபிக்க அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்

(3) எகிப்திய இராணுவத்தில் எத்தனை பேர்கள் இருக்க வேண்டுமென்பதை பின்னால் நிர்ணயித்துக்கொள்ளலாமென எகிப்தியர்கள் கூறுகின்றனர்.

(4) நவீனமுறை பீரங்கிகளை சப்ளை செய்யும்படியாக எகிப்திய இராணுவம் இங்கிலாந்தைக் கேட்டிருந்தது. ஆனால், பெரும் தாமதத்திற்குப்பின் இங்கிலாந்து இப்பொழுதுதான் நான்கு பீரங்கிகளை சப்ளை செய்திருக்கின்றது. எகிப்திய இராணுவத்தில் பிரிட்டிஷாரின் கீழ் இருக்கும் இரண்டொரு பீரங்கிகளைத் தவிர வேறு பீரங்கிகளே கிடையாது.

எகிப்தியர்கள் கோருவதெல்லாம் இவைகள் தான். எகிப்தியர்களுடைய கோரிக்கைகள் நியாயமற்றவைகளென்றாவது அல்லது அளவுக்கு மிஞ்சினவையென்றாவது நான் சொல்லமாட்டேன். எகிப்தியர்கள் கோருவது நியாயமானவைகளென்றும் அமிதவாதக் கோரிக்கைகளல்லவென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். இவ் வருஷம் ஏப்ரல் ஆரம்பத்தில் எகிப்துக்கும் பிரிட்டனுக்கும் இருந்துவந்த ஒற்றுமையும் நேசமும் இதற்குமுன் ஒருகாலும் இருந்தது கிடையாது. அச்சமயத்தில் எகிப்து-பிரிட்டன் தகராறுகளை ஆலோசனை செய்து சமரசம் செய்ய பிரிட்டன்முயற்சி புரிந்திருக்கும் பட்சத்தில் எகிப்தியர்கள் பிரிட்டிஷாரின் கோரிக்கைகளை அங்கீகரித்துக் கொண்டிருப்பார்கள்.

விவசாய, வியாபார, கைத்தொழில் பகுதி

முகவுரை.

ஏ. பி. ஸி. எழுதியது.

செல்வத்திலும் செழிப்பிலும் சிறந்து வளர்ந்திருந்த நம்நாடு தற்காலம் வறுமையிலும் தரித்திரத்திலும் மூழ்கியிருக்கின்றது. நாட்டின் நிலைமை இவ்வாறிருக்க நம் முஸ்லிம் சகோதரர்களின் நிலைமையோ மிகவும் பரிதாபகரமாக யிருக்கின்றது. நம் நாட்டின் மக்களில் பாதிபேருக்கதிகமாக ஒரு வேளை சாப்பாடு கூட இல்லாமல் காலம் கழிக்க நேருகிறதென்று இந்தியாவின் செல்வநிலைமையை ஆராய்ச்சி செய்வோர் கூறுகின்றனர். இப்படி ஒரு வேளை சாப்பாட்

டில் காலம் கழிப்பவர்களின் தொகையை சமூகவாரியாகப் பிரித்து பார்ப்போமானால் பெரும்பான்மையோர் முஸ்லிம்களே யாவார்களென்பது நன்கு விளங்கும். தற்சமயம் முஸ்லிம் சமூகத்தில் சமூக புனருத்தாரணவேலை தேவையாக இருப்பதுபோல் வேறெந்த சமூகத்திலும் தேவையில்லை யென்பது, சமூக ஊழியத்தில் ஈடுபட்டவர்களுடைய துணிபான அபிப்பிராயமாகும். முஸ்லிம் சமூக புனருத்தாரண வேலையின் அவசியத்தை அறிந்த பெரியோர்கள் சிலர் இவ்வேலையை வடஇந்தியாவில் ஆரம்பித்தார்களே யாயினும் தென் இந்தியாவை பொருத்தமட்டில் வேலை ஆரம்பிக்க படவேண்டுமென்ற நினைவு கனவில்கூட தோன்றியதாக்க் கூறமுடியாது. மூன்று வருஷங்களுக்கு முன் அகில இந்தியா கிலாபத்கமிட்டியின் பொதுச் சபையார் கூட்டம் கூடி சமூகபுனருத்தாரண வேலைக்கான திட்டங்களை ஏற்பாடு செய்து தீர்மானங்கள் செய்தனர். அத்தீர்மானங்கள் பத்திரிகைகளில் பிரசுரத்திற்கு அனுப்பப்பட்ட அளவுடன் நிற்கின்றனவே யொழிய அதைவிட அதிகமாக ஒன்றும் நடந்ததாகக்காணோம். டாக்டர் ஸைபுத்தீன் கிச்லு அவர்கள் வடஇந்தியாவில், ஆரம்பித் தன்ஸீம் இயக்கம் தென் இந்தியாவில் வேறான்றுமென நம்பியிருந்த எண்ணமும் பகற் கனவாக இருக்கின்றது. மாகாண தன்ஸீம் கான்பரன்ஸ் மாறி ஜில்லா கான்பரன்ஸாகவும், ஜில்லா கான்பரன்ஸ் மாறிமாகாண கான்பரன்ஸாகவும் நடைபெறுவதென்று பத்திரிகைகளில் படித்த அளவில் மாத்திரம் விஷயம் நிற்கின்றது. இவைகளையெல்லாம் கருதுமிடத்து தற்கால நிலைமையில் நம் சமூகத்தினருடைய வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முதலியவைகளின் அபிவிருத்திக்கு என்ன செய்யலா மென்பதைப்பற்றியும் எவ்வழிகளில் சமுகத்தை முன்னேற்ற மடையச் செய்யலாமென்பது பற்றியும் இச்சஞ்சிகையில் பிரதிமாதமும் வியாசங்கள் எழுதிவர எண்ணி யுள்ளேன். இன்ஷாஅல்லாஹ் அடுத்த மாதம் முதற்கொண்டு வியாபாரம், விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தி விஷயங்கள் தனித்தனி பகுதிகளாகப் பிரசுரிக்கப்பட்டுவரும். இப்பொழுது எழுதியுள்ளது மூன்றிற்கும் பொதுவான முகவுரையாக இருத்தலால் மூன்றிற்கும் சேர்த்து ஒன்ருக இம்மாதம் எழுதப்பட்டது.

“சிறந்த நெசவுத்தொழிலும், பலவித வர்ணங்களைக் கலப்பதிலும், உலோகங்களில் வேலை செய்வதிலும், வாசனைத் திரவியங்கள் செய்வதிலும், பலவிதமான சித்திர வேலைகளிலும் இந்தியர்கள் பூர்வகாலம் முதல் பிரசித்தி பெற்றிருந்தார்கள், கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருஷங்களுக்குமுன் பாபிலோன் இந்தியாவோடு வர்த்தகம்

செய்ததற்கு அத்தாக்ஷி இருக்கிறது. கி. பி. 2000 வருஷங்களாக எகிப்து தேசத்தில் இருக்கும் கல்லறைகளில் வைக்கப்பட்டிருக்கும் பிரேதங்களை மிக உயர்ந்த இந்திய ரவை சல்லாத் துணிகளில் சுற்றி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது. மேலும் "ரோமாபுரியில் இந்திய கைத்தொழிலாளிகள் செய்த சாமான்களின் வர்த்தகம் ஏராளமாகப் பரவியிருந்தது. அதனால் ரோமாபுரியின் ஐசுவரியத்தில் பெரிய பாகம் இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்ததாக பிளீனி என்னும் சரித்திரக்காரர் சொல்லுகிறார். வட இந்தியாவி லிருக்கும் டாக்காப் பட்டணத்தில் நெய்யப்பட்ட ரவை சல்லாத் துணிகள் உலகப்பிரசித்தம் பெற்றவை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவைகளைப் பார்க்கும் போது, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே இந்தியா நூல் நூற்பதிலும், நெசவுத் தொழிலிலும் அதிக தேர்ச்சியடைந்திருந்த தென்கிற விஷயம் தெளிவாகிறது. பதினேழாம் நூற்றாண்டில் தான் இங்கிலாந்தில் பருத்தி நெசவுத்தொழில் ஆரம்பிக்கப்பட்டது."

இரும்புக் கைத்தொழில்களின் சம்பந்தமாகப் பண்டித வில்ஸன் சொல்லுகிறதாவது:—'கைத்தொழில் தேசமாகிய இங்கிலாந்தில் சில வருஷங்களுக்கு முன்னே தான் இரும்பு வார்ப்படவேலை துவக்கப்பட்டது. ஆனால், இரும்பு உருக்குதல், பற்றவைத்தல், எஃகு செய்தல், இந்தவிதமான தொழில் முறைகள் அநாதி காலமாக ஹிந்துக்களுக்குத் தெரிந்திருந்தன.'

"இரும்புக் கைத்தொழிலாளிகள் உள் நாட்டுக்கு வேண்டியதைக் கவனித்து வந்தது மாத்திரமல்ல, அன்னிய நாடுகளுக்கு வேண்டிய சாமான்களையும் செய்து ஏற்றுமதி செய்து வந்தார்கள். செய்து அனுப்பப்பட்ட சாமான்களும் உலகப் பிரசித்தி யடைந்திருந்தன. டில்லிக்கு அருகாமையில் இருக்கும் பிரஸித்தி பெற்ற இரும்புத் தூண் சுமார் 1500 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டது. நாளைக்கும் அதைப்பார்ப்பவர்கள் வியப்படைகிறார்கள். அதில் செய்திருக்கும் வார்ப்பட வேலையும், வேலைத் திறமையும் பார்க்கிறவர்கள் கண்களைக் கவர்ந்துவிடும். உலகத்திலிருக்கும் எந்த இரும்புத் தொழிற்சாலையிலும் அப்பேர்ப்பட்ட தூண் வார்ப்படம் செய்வது அசாத்தியமென்று இந்திய ஜியலாஜிகல் ஸர்வேயில் வேலையாயிருந்த மிஸ்டர் பால் (Ball) என்பவர் சொல்லுகிறார். ஆஸாமில் பிரமாண்டமான பீரங்கிகள் செய்யப்பட்டு வந்தன. டமாஸ்கஸ் (திமிஷ்க்) என்னும் பட்டணத்தில் செய்யப்பட்ட பட்டாக் கத்திகள் இந்திய எஃகினால் செய்யப்பட்டவை. அக்கத்திகள் உலகப்பிரசித்தி பெற்றவை. பாரஸீக

வர்த்தகர்கள் பாரஸீகத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து இரும்புச் சரக்குகளை வாங்கி ஆசியாவின் இதரபாகங்களுக்கு ஏற்றுமதி செய்து லாபம் சம்பாதித்து வந்தார்கள். இங்கிலாந்தில் கூட கத்தி முதலிய சாமான்கள் செய்ய இந்திய எஃகு ஏராளமாய் வாங்கப்பட்டுவந்தது. இரும்பு வார்படவேலையும் எஃகும் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே இந்தியாவில் பூரண நிலையை அடைந்திருந்ததாகத் தெரிய வருகிறது.

"அலெக்ஸாந்தருடைய படையெழுச்சி காலத்தில், அதற்கு முன் அநேக நூற்றூண்டுகளாகவும், இந்திய ஜனங்கள் அதிக க்ஷேம மான நிலைமையி லிருந்தார்கள். இந்தச் செழுமை பதினெட்டாம் நூற் றூண்டில் மொகலாய ராஜ்ஜியம் க்ஷீணித்துப் போகும் வரையில் நிலைத் திருந்தது. இதற்கு ஏராளமான ஆதாரம் உண்டு.

கி. பி. முதல் நூற்றூண்டில் மேல்நாடுகளிலும், விசேஷமாய் ரோமா புரியிலும் இந்திய சரக்குகள் ஏராளமாய் விற்கப்பட்டு வந் தன. மேல் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த அநேகபிரயாணி கள் இந்திய வியாபாரத்தைப் பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லியிருக் கிறார்கள். கி.பி. நாலாவது, ஆறுவது நூற்றூண்டுகளில் இரண்டு சீன தேசத்துப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வந்தார்கள். அப்பொழுது இந்தியக் கைத்தொழில்களும் சிற்பவேலைகளும் நல்ல ஸ்திதியில் இருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு பிறகு வெனிஸும், ஜினேவாவும் இந்தியாவோடு ஏராளமாய் வர்த்தகம் செய்து வந்தன.

விவசாயத்தொழில் ஐரோப்பாவில் சாஸ்திர விதிகளின்படி செய்யப்பட்டு வருகிறது. அம் முறைகளில் தேறினவர்களை இந்தி யாவுக்கு வரவழைத்து, இந்தியப் பயிர்த்தொழிலை எப்படி விருத்தி யாக்கலா மென்று அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு, புதிய விவசாய முறைகளைக்கைகொள்ள வேண்டும். விவசாய பொருள்கள் பக்குவப்படுத்தி விற்குமிடங்களுக்குக் கொண்டுபோகும் விஷயத்தி லும் நவீனமுறைகள் கையாளப்படவேண்டும். தற்காலம் கொஞ்ச மாயும் நாசூக்கற்றதாயும் இந்தியாவில் செய்யப்பட்டு வரும் கைத் தொழிற் பொருள்களையும் இம் முறைகளினால் சீர்மைப்படுத்திச் செய்துக்கொள்ளலாம். அங்ஙனம் செய்வதினால் அப்பொருள்கள் அதிகமாய் விற்பனையாகும். அன்னிய நாடுகளிலிருந்து இந்நாட்டிற் குக் கொண்டு வரப்படும் சரக்குகளுக்குப் பதிலாக நாம் நம்நாட்டு சரக்குகளை உபயோகப்படுத்துவது சாத்தியமாக இருக்கும்.

இங்ஙனம் செய்யக்கூடிய பொருள்களில் அடியிற் கண்டவைகள் சில;—சர்க்கரை காய்ச்சுவதிலும், சுத்தி செய்வதிலும்; தோல்பதனி

டுதல்; பருத்தி, கம்பளிமயிர், பட்டு முதலிய நெசவுத்தொழில்; மற்ற விதமான நார்களிலிருந்து நூல் செய்தல்; புகையிலை பதன்படுத்துதல்; காகிதம், மண்பாண்டங்கள், கண்ணாடி, சோப்புகள், எண்ணெய்கள், மெழுகுவர்த்திகள் முதலியவை செய்தல்.''

இப்பொழுது நம் நாட்டின் நிலைமை எவ்வாறிருக்கின்றது? ஒரு வாரம் சிமைக்கப்பல் வரத்தவக்கப்பட்டு விட்டால் நம் குழந்தைகளில் பெரும் பான்மை பட்டினிகிடந்து சாக நேரும். நம் குழந்தைகள் மெலின்ஸ்புட், ஹார்லிக்ஸ், கிளாக்ஸோ முதலியவைகளையே எதிர்பார்த்திருக்கின்றனர். ஒருகாலத்தில் வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளால் சிறந்திருந்த நம்நாடு தற்காலம் நம் குழந்தைகளின் உணவிற்கும் இதர நாட்டுக்கப்பல்களை எதிர்பார்த்து நிற்கவேண்டியிருக்கின்றது. இப்பரிதாப நிலைமையை நீக்கிக் கொள்ள மார்க்கம் உண்டோ? முயற்சி செய்தால் நிச்சயமாகவே வழி பிறக்கும். இந்தியா முன்னிருந்த கீர்த்தியையும் பெருமையையும் அடைய முடியும். இந்தியா முன்னேற்ற மடைந்து வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலியவைகளில் சிறப்படையும் மார்க்கம் பிரதிமாதமும் இப்பகுதிகளில் பிரசுரஞ் செய்யப்பட்டு வரும். அன்பர்கள் படித்துணர்ந்து நன்மை பெறுவார்களென்று நம்புகின்றோம்.

முஸ்லிம்களின் முற்கால சரிதை

ஜனாப் ஏ. ஹுஸைன் சாஹிப் பஹதூர் டாக்கா சர்வ கலசாலை சஞ்சிகையில் முஸ்லிம்களின் தற்கால பரிதாபகரமான நிலைமையைக் குறித்து எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"தற்காலம் முஸ்லிம்களில் ஒருவகுப்பார் அரபி, பார்ஸி முதலிய பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாக விருந்தாலும் தற்காலம் உலகத்தில் என்ன நடக்கின்றது, தற்காலம் உலகில் எத்தகைய மாறுதல் ஏற்பட்டுவருகின்றது, தற்காலம் மானிடவாழ்க்கை யெவ்வாறு முன்னடைந்து வருகின்றது என்ற விஷங்களை அறவே தெரியாதவர்களாகவும் இஸ்லாத்தின் ஆதிகால பெருமைகளையும் புகழையும் பேசிக்கொண்டு காலங்கழித்து வருகிறார்கள். ஆதிமுஸ்லீம்களின் பெருமையையும் கீர்த்தியையும் பற்றிப்பேசிக் கொண்டும்

இஸ்லாத்திற்கு வேண்டிய புகழும் கீர்த்தியும் ஏற்பட்டு விட்டதென்று இனி குறைச்சல் என்ன என்றும் அலட்சியமாகவும் இருந்துவருகிறார்கள். இவ்வாறு பெருமை பாராட்டிக்கொண்டு வீண்காலங் கழித்துவருவதுதான் நம்முடைய தற்கால பரிதாபகரமான நிலைமைக்கும் தற்கால உலகவாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் போராட்டத்தில் நாம் பின்னடைந்து நிற்பதற்கும் முக்கியமான காரணமாகும். ஒரு மனுஷ்யனுக்கு சுயநம்பிக்கை, சிக்கலான பிரசினைகளைத் தீர்த்துவைக்கும் திறமை, முன்னேற்ற மடைய வேண்டுமென்ற எண்ணம், உலகப் போராட்டத்தில் வெற்றியடைவதற்கு சக்தி முதலியவைகளெல்லாம் புராதன சரித்திரங்களை ஊன்றிப் படித்துணர்வதாலே தான் ஏற்படும். நமக்கோ நம்முடைய இஸ்லாமிய சரிதையின் ஞானம் எள்ளளவும் கிடையாது.''

ஜனாப் ஹுசைன் சாஹிபவர்கள் தற்கால இந்திய முஸ்லிம்களின் உண்மை நிலையை மிகைப்படுத்திக் கூறியிருப்பதாக ஒருவரும் சொல்ல முடியாது. முஸ்லிம்கள் தங்களுடைய புராதன சரித்திரத்தை அறிந்து கொள்ளுவது மிகவும் அத்தியா வசியமாக இருக்கின்றது. ஆட்டுக் குட்டிகளுடன் வளர்ந்துவந்த ஓநாய்க் குட்டி தனது புராதன சரித்திரத்தையும் பிறப்பையும் அறிந்தவுடன் தன் குலத்திற்கு இயற்கையான பலத்தையும், திறமையையும் பெற்றதாக ஒரு கதை படித்திருக்கின்றோம். தற்காலம் அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடக்கும் முஸ்லிம்கள் தங்கள் புராதன சரிதையையும், பெருமை, கீர்த்தி, புகழ் முதலியவைகளையும் அறிவார்களாயின் தூக்கத்தினின்றும் எழுந்திருந்து முன்னேற்றமடைய முயற்சி செய்வார்கள். இக்காரணம் பற்றி முஸ்லிம்களின் முற்கால பெருமை, கீர்த்தி முதலியவைகளை விளக்கும் சிற்சில விஷயங்களை சுருக்கமாக இம்மாதம் இங்கு கீழே வரைந்திருக்கின்றோம். முஸ்லிம்களுக்கு இவ்வளவு பெருமை, புகழ் எவ்வாறு கிடைத்ததென்றும், ஆதி முஸ்லிம்கள் எவ்வகையில் முன்னேற்ற மடைந்தார்களென்றும், முஸ்லிம்கள் தற்காலம் பரிதாபகர நிலைமைக்கு வந்ததற்குக் காரணங்கள் எவையென்றும், முஸ்லிம்கள் முன்னேற்ற மடைய விரும்பின் என்ன செய்யவேண்டுமென்றும் மாதந்தோறும் இப் பகுதியில் முஸ்லிம் சரித்திரம் பிரசுரஞ் செய்யப்பட்டுவரும்.

முஸ்லிம்களின் முற்கால பெருமை.

நெடிய கடல் சூழ்ந்த இப்பூவுலகத்தின்கண் தோன்றியுள்ள மானிடர்களுக்குக் கண்ணியத்தையும், புண்ணியத்தையும், உயர்பது

வியையும், சீர்திருத்தம், நாகரிகம், நல்லொழுக்கம் முதலியவைகளை யும் தரக்கூடியதான கல்வி செல்வத்தை இவ்வுலகத்தாருக்கு ஜாதி மதபேதமின்றி போதித்தவர்கள் முஸ்லிம்களே யாவார்கள்.

தற்காலம் கல்வியிலும் செல்வத்திலும் சீர்திருத்த நாகரிகத்தி லும் நூதனக் கருவிகளைக் கண்டு பிடிப்பதிலும் செல்வாக்குப் பெற் றிருப்பதாக எண்ணிக் கொண்டு உலகில் தங்களுக்கு நிகர் எவருமில் லையெனப் பறைசாற்றும் மேநாட்டார்களின் மூதாதைகள் தங்கள் சரித்திரங்களில் முஸ்லிம்களின் கல்வியையும் நாகரிகத்தையும், தாரா ளக் கொள்கையையும், சகிப்புத்தன்மையையும் பற்றிக் கூறியிருப் பதை கவனிப்போமாகில் நம் மூதாதைகளின் உன்னத நிலைமை எங் ஙனமிருந்ததென்பது நன்கு புலனாகும். அவர்கள் கூறியிருப்பது பின் வருமாறு :—இஸ்லாம் இராஜாங்கம் 'அப்பாஸி' ஆசியாவிலும் 'பாத்திமி' ஆப்பிரிக்காவிலும் 'உம்மவி' ஐரோப்பாவிலும் ஏற்பட்டு இம்மூன்றும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு கல்வியை அபிவிருத்தி செய்து மேன்மைக்கு கொண்டு வந் ததுபோல் வேறு எந்த இராஜாங்கமும் செய்யவில்லையென்று உறுதி யாய்க் கூறலாம். சகலவித கல்விகளையும் சீர்திருத்த ஒழுக்கங்களை யும் புருத் என்ற ஆற்றின் அருகிலிருந்து ஸ்பெயினிலுள்ள திவாயெ கபீர் என்ற ஆற்றங்கரை வரையில் பரவிவசிக்கும் பல வகுப்பினர்க ளுக்குப் போதிப்பதற்காகவே முஸ்லிம் அரபிக் கூட்டத்தாரை ஆண்ட வன் இவ்வுகலத்தில் உண்டாக்கினான் என்பதில் சந்தேகமில்லை. அப் பிராந்தியத்திலுள்ள சகல வகுப்பினர்களும் அவர்களிடமே கல்வி கற்று மேலோங்கி இருக்கின்றனர்.

முஸ்லிம்கள் நசித்துப்போன யூனான் பாஷைக் கல்வி சிலதைக் கற்று தங்களின் யூகத்தாலும் பிரயாசையாலும் அனுபோகத்தாலும் அதை பதின் மடங்கு அபிவிருத்தி செய்தார்கள்.

சகல கல்விகளும் முஸ்லிம்களின் கைவசமாகி அவர்களுக்கே அடிமையாகி விட்டன. சிறிது காலத்திற்குள் ஒவ்வோர் வகைக் கல்வியிலும் தேர்ச்சியடைந்த உஸ்தாதுகள் அவர்களேயென்று கீர்த்தி பெற்று விளங்கினர்.

முஸ்லிம்களின் வைதீகக் கல்வியும் வானசாஸ்திரமும், ஹிக்மத் முதலிய கல்விகளும் சிறிது காலம்மட்டும் யூனான் பாஷையிலிருந் ததை ஒரு நூற்றாண்டிற்குள் அதிக அபிவிர்த்தியுடன் சகலத்தையும் அரபி பாஷைக் கல்வியாக ஆக்கிவிட்டனர்.

ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மார்க்கத்தின்பேரில் ஸ்திரமாக இருப்பதுடன் கல்வி கற்கும் விஷயத்தில் ஜாதிமத பேத

மின்றியே ஒன்று சேர்ந்து கற்கும் முறையை உலகத்தாருக்கு வழி காட்டியவர்கள் முஸ்லிம்களே யாவர்.

நாகரிகத்தையும் சகோதர வாஞ்சையையும் சமரஸத்தையும் பரவச் செய்தது இஸ்லாம் மார்க்கமே யாகும்.

முஸ்லிம்கள் இரண்டு நூற்றாண்டில் எவ்வாறு கல்வியில் தேர்ச்சியடைந்தார்களோ அவ்வளவு ஐரோப்பாவிலுள்ள யீசுவி மதஸ்தர்கள் பன்னிரண்டு நூற்றாண்டில் தேர்ச்சியடைய முடியாமலிருப்பது மனதிற்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகின்றது.

யூனன் பாஷை ஸம்மஸ்கிருதப் பாஷை முதலிய இதர பாஷா வகுப்பினர்களிடம் இருந்த கல்விகளானது அவ்வகுப்பினர்களிடம் இருக்கும்வரை பெட்டிக்குள் அகப்பட்ட கிரந்த நூல்களிலும் அதைக் கற்றவர்களின் மூளையிலுமே அடைபட்டிருந்ததே யன்றி மானிட வகுப்பினர்களுக்கு ஒரு பிரயோஜனத்தையும் கொடுக்கவில்லை. அவைகள் முஸ்லிம்களின் கைசவமானவுடன் அக்கல்விகளை மானிடவர்க்கத்தினர்களின் ருசிகரமான உணவாக ஆக்கி சகலரையும் திருப்திகரமாய் புசிக்கும்படி முஸ்லிம்கள் செய்துவிட்டனர். இதனாலேயே மனிதர்கள் முழு மானிட லக்ஷணம் பொருந்தியவர்களாயினர்.

ஐரோப்பாவானது கல்வியின்மை, மடமை முதலிய அநாகரீக அந்தகாரத்தில் மூழ்கியிருந்ததை நீக்கி கல்வியின் பிரகாசத்திலாக்கி வைத்த முஸ்லிம்களின் இந்நன்றியை உலகசரித்திரத்தை நன்குணர்ந்த எவர்களும் எக்காலத்தும் மறக்கமுடியாது. கல்வியைக் கற்கவும் கற்பிக்கவும் இலகுவான வழியை கற்பித்தவர்கள் முஸ்லிம்களே யாவர்.

12-வது நூற்றாண்டு வரையில் பாரிஸில் கற்கள் பரப்பிய ஒழுங்கான ரோடுகள் இருக்கவில்லை. அதற்கு வெகு காலத்திற்கு முன்பே முஸ்லிம்களின் தேசமாகிய உந்துலிஸில் எல்லா ரோடுகளுக்கும் கற்கள் பரப்பப்பட்டிருந்தன. முஸ்லிம்கள் தங்களின் நாகரிகத்தை ஸ்பெயின், இத்தாலியின் தென்பாகத்தின் மூலமாக ஐரோப்பாவில் பரவச்செய்தனர்.

முஸ்லிம்களுடைய இரண்டு கலீபாக்களின் அரசாட்சியிலும் முஸ்லிம்கள், கிறிஸ்து மதப் பாதிரிகள், யூதமத நிபுணர்கள் விஷயத்தில் வெகு மரியாதையாக நடந்துகொண்டதுடன் பெரும் பொறுப்பு வாய்ந்த இராஜாங்க உயர்தர உத்தியோகப் பதவிகளையும் கிறிஸ்தவர்களுக்கும் யூதவர்களுக்கும் கொடுத்து கண்ணியப்படுத்தி வந்தார்கள். கல்விச்சாலைகளின் முழு அதிகாரங்களும் ஜாதி, மதம், தேசம், வருண வித்தியாசமில்லாமல் கலாசாலைகளை நடத்தும் திறமையுள்ளவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. சிலகாலம் கிறிஸ்தவர்களும் சில

காலம் யூதர்களும் சிலகாலம் மற்றவர்களும் அப்பதவிகளை அடைந்து வந்திருக்கின்றனர்.

முஸ்லீம் கலாசாலைகளிலிருந்தே சகல கல்விகளையும் ஐரோப்பியர்கள் கற்று அநாகரிக இருளைவிட்டு நீங்கி நாகரிகமடைந்திருக்கின்றனர். இப்போது மேனாட்டார் அடைந்துள்ள சகலவித பெருமைகளுக்கும் முஸ்லிம்களே காரணமாவார்கள். முஸ்லிம்களில் ஜாதி மதபேதமின்றி கல்வியையப் பரவச்செய்யும் விசால குணமில்லாதிருப்பின் ஐரோப்பாவானது இதுவரையில் அநாகரிக அந்த காரத்தைவிட்டு விழித்திருக்கமாட்டாது.

அக்காலத்தில் முஸ்லிம்களின் பட்டணங்களாகிய பக்தாத், சமர்கந்து, திம்ஷ்க், மிஸ்று, ஈரான் முதலிய தேசங்களே கல்விக் களஞ்சியமாக இருந்தன. அவைகளிலிருந்தே முழு உலகத்திலும் கல்வி பரவினது. அக்காலத்தில் ஐரோப்பாவில் கல்வி இன்னதென்று அடையாளமே இருந்திருக்கவில்லை.

மதாபிமானம் சிறந்து மார்க்கத்தை அபிவிருத்தி செய்ய அளவு கடந்த உதவிபுரிந்ததும் உலகம் பிரமிக்கும்படி ஜெயபேரிகை யடைந்தும் முழு உலகத்திலும் கல்வி செல்வத்தைப் பரவச்செய்ததும் இஸ்லாம் இராஜாங்கமே யாகும். இதற்கு நிகரான இராஜாங்கம் உலக சரித்திரத்தில் காணக்கிடையாதென்பது திண்ணம்.

மேனாட்டு முன்னோர்கள் கூறியுள்ள மேற்கண்ட விஷயங்களை உணர்ந்த மேனாட்டு மேதாவிகள் இப்போதும் இல்லாமற் போகவில்லை. தற்காலம் உலகெங்கும் கியாதிபெற்று விளங்கும் ஆங்கில கனவானாகிய எச். ஜி. வெல்ஸ் என்பவர் தாம் எழுதியுள்ள உலகசரித்திர புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

மேனாட்டினர் முன்னேற்ற மடைவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னமேயே முஸ்லிம் உலகில் பற்பல இடங்களில் சர்வகலாசாலைகள் ஸ்தாபனமாகியிருந்தன. உதாரனமாக பஸ்ரா, கூபா, பாக்தாத், கெய்ரோ, கார்டோவா முதலிய இடங்களில் அரிய சர்வ கலாசாலைகள் ஸ்தாபனமாகி விட்டிருந்தன. இச்சர்வ கலாசாலைகளெல்லாம் ஆரம்பத்தில் மஸ்ஜிதுகளில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களாக இருந்தன. இப்பள்ளிக்கூடங்கள் ஆரம்பத்தில் மஸ்ஜிது சொத்துகளாலேயே நடப்பெற்று வந்தன. ஆனால், நாளடைவில் முஸ்லிம்களின் கல்வி ஊக்கத்தால் பள்ளிவாசல் பள்ளிக்கூடங்களாயிருந்த இவைகள் பெரிய சர்வகலாசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டன. இச்சர்வ கலாசாலைகளின் கியாதி உலகமெங்கும் பரவவே, மேற்கு திசையிலிருந்தும் கீழ்திசையிலிருந்தும் மாணவர்கள் ஏராளமாக கல்விகற்க இச்

சர்வகலாசாலைகளுக்கு வந்துசேர்ந்தனர். முக்கியமாக கார்டோவா சர்வகலாசாலையில் கிறிஸ்தவ மாணவர்கள் ஏராளமாக வந்து சேர்ந்து கல்வி கற்று வந்தார்கள். அரபிய தத்துவ சாஸ்திரம், ஸ்பெயின் மூலமாக பாரிஸ், ஆக்ஸ்பர்டு, வடஇத்தாலி, முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பரவி ஐரோப்பியர்களுக்கு ஒளியையும் ஞானத்தையும் பரப்பி வந்தது.

கணித சாஸ்திரத்திலும் அரபியர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள். முகம்மது இபுனுமூஸா என்னும் பிரபல அரபி கணிதசாஸ்திரிதான் முதல் முதலாக பூஜ்யத்தைக் கண்டுபிடித்தார். டெஸிமல் கணக்குகளையும் கண்டு பிடித்தவர் அவர்தான். அல்ஜீப்ரா என்னும் கணித சாஸ்திரம் முழுவதையும் அரபியர்கள் தான் கண்டு பிடித்தார்கள். வான சாஸ்திரத்திலும் நக்ஷத்திரங்களை ஆராய்ச்சி செய்யும் சாஸ்திரத்திலும் அரபியர்கள் அதிகப் பயிற்சி பெற்று அச்சாஸ்திரங்களை அதிகமாக அபிவிருத்தி செய்தார்கள். நக்ஷத்திரங்களைப் பார்ப்பதற்கு அனேக நக்ஷத்திர சாலைகளைக் கட்டியதுமல்லாமல் நக்ஷத்திரங்களின் ஆராய்ச்சிக்கு அவசியமான பல கருவிகளையும் கண்டுபிடித்தார்கள். அக்கருவிகளில் அனேகம் இன்றைக்கும் உபயோகத்திலிருந்து வருகின்றன.

வைத்திய சாஸ்திரத்தில் கிரேக்கர்கள் கண்டுபிடித்ததை அரபியர்கள் விசாலப்படுத்தி அதிக அபிவிருத்தி செய்தார்கள். அவர்கள் கையாண்டுவந்த முறைகளிற் பல இன்றைக்கும் ஐரோப்பியர்களால் கையாளப்பட்டு வருகின்றன. மந்திரத்தினாலேயே வியாதிகளை நிவாரணம் செய்யவேண்டுமென்றும் வியாதிகளுக்கு வைத்தியம் செய்யக்கூடாதென்றும் ஐரோப்பாவில் மூடபக்தி உன்னதநிலைமையில்இருந்த காலத்தும் அரபியர்கள் வைத்திய சாஸ்திரங்களையும் சிறந்த வைத்திய முறைகளையும் கையாண்டு வந்தார்கள்.

இப்னுரஷீத் என்னும் அராபியப் பெரியார் 1198-ல் ஐரோப்பாவுக்கு அராபியத் தத்துவ ஞானத்தைப் புகட்டியவர். அரிஸ்டாடிலின் போதனைகளை இவர்வெகு நுட்பமாக பரிசீலனை செய்து மார்க்க உண்மைகளுக்கும் ரஸாயனசாஸ்திர சம்பந்தமான உண்மைகளுக்கும் நடுவேயிருக்கும் நுட்பமான வித்தியாசங்களைக் கண்டு பிடித்து இரண்டையும் பிரித்துப் பாகுபடுத்தும் தன்மையை இவர் நிலைநாட்டினார்.

வைத்தியர்களுக்கெல்லாம் அரசர் என்று மதிக்கத்தகும் இபுனுஸினா 1037-ல் புகாராவில் பிறந்து குரேஸான் முதலிய நாடுகளிலெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்தவர். அரபியாவில் தோன்றிய பெரியார்களில் இவர் மற்றொருவராவர்.

புத்தகம் பார்த்தெழுதும் தொழில் அலெக்ஸாண்டிரியா, திமிஷ்க் கெய்ரோ, பக்தாத் முதலிய நாடுகளில் பரவியிருந்தது. 970-ம் வருடத்தில் கார்ட்டோவாவில் மட்டும் ஏழைப்பிள்ளைகளின் போதனைக்காக 27 இலவசபாடசாலைகளுக் கதிகமாயிருந்தன.

ஜெர்மனியில் பிரபலரான இம்மானியுவல் டியுஷ் என்பவர்கூறுவதாவது:—

"இதே ஐரோப்பாவிற்கு பொனேஷியர்கள் வியாபாரிகளாக வந்தார்கள். யூதர்கள் கைதிகளாக வந்தார்கள். அரபியர்களோ மானிட வர்க்கத்திற்கு ஒளியைக் கொண்டுவந்தார்கள். ஐரோப்பாவில் இருள் நிறைந்திருந்த காலத்தில் ஞானத்தையும் அறிவையும் போதிக்க வந்தவர்கள் அரபியர்களே. தத்துவ சாஸ்திரம், வைத்சாஸ்திரம், வானசாஸ்திரம் முதலானவைகளை ஐரோப்பாவுக்கு போதித்தவர்கள் அரபியர்களே. தற்கால நாகரிகத்தை வளர்க்கும் தொட்டிலாக அரபியர்கள் ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்தார்கள்."

ஆங்கில நாட்டில் பிரக்யாதி பெற்ற டாக்டர் சாம்யூல் ஜான்ஸன் என்பவர் கூறுவதாவது:—

"ஐரோப்பாவில் கிறிஸ்தவ மார்க்கம் காரிருளாக இருந்த சமயத்தில் திருக்குர்ஆன் ஐரோப்பாவிற்குள் பிரகாசிக்கத்தக்கதான ஒரு ஒளியை உண்டாக்கிற்று."

கல்வியின் நிலைமை இவ்வாறிருக்க சுகாதாரம், வியாபாரம், கைத்தொழில், சுத்தம் முதலிய விஷயங்களில் முன்னேற்றமடைந்தவர்களெனக் கூறிக்கொள்ளும் மேனாட்டார்களுக்கு அவ்விஷயங்களைப் போதிந்தவர்கள் முஸ்லிம்களே யாவார்களென்பது கீழ் காணும் விஷயங்களால் உணரலாம்.

உடைகளை அடிக்கடி மாற்றவேண்டுமென்றும் உடைகளைச் சுத்தமாகவைக்க வேண்டுமென்றும் முஸ்லிம்கள் தான் ஐரோப்பியர்களுக்குப் போதித்தது. ஐரோப்பாவில் மத்திய காலத்தில் அழுக்காயும் அசுத்தமாயும் இருப்பது தெய்வபத்திக்கு அறிகுறியென்றும், எவ்வளவுக்கெவ்வளவு அழுக்காயும் அசுத்தமாயும் ஒருவன் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு தெய்வபக்தி அதிகமென்றும் கருதப்பட்டுவந்தது. காண்டர்பரியின் பிரதம பிஷப்பு தாமஸ் பெக்கட்டின் உடை அழுக்கடைந்து நாற்றம் பொறுக்கமுடியாததாக இருந்ததென ஒரு ஆங்கிலேய சரித்திரககாரர் தமது சரித்திரத்தில் கண்டிருக்கிறார். மேலும், தாமஸ் பெக்கட்டின் உடம்பில்படிந்திருந்த அழுக்கிலிருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்ததாக மேற்படி சரித்திரக்காரர் கூறுகிறார்.

உடம்பிலும், உடையிலும் அழுக்கும் துர்நாற்றமும் ஏற்பட்டிருப்பதானது மிக்ககௌரவமானதென்றும் அதிக தெய்வபக்திக்கு அடையாளமென்றும் பாதிரிமார்களும் கன்னிகா ஸ்திரீகளும் கருதி வந்தார்கள் என்பதாக மிஸ்டர் லேன் பூல்ஸ் தம்முடைய அரிய புத்தகத்தில் எழுதியிருக்கிறார். தனக்கு வயது 60 ஆகியும் தான் ஒருநாளும் ஸ்நானஞ் செய்தது கிடையாதென்பதாக ஒரு கன்னிகா ஸ்திரீ கௌரமாகவும் பெருமையாகவும் சொல்லிக்கொண்டதாக மிஸ்டர் பூல்ஸ் என்பவர் எழுதிவைத்திருக்கிறார். அக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்த வழக்கம் யாதெனில், ஏதேனும் ஒரு துணியை உடுத்திக்கொண்டால் அது கிழிந்து துண்டு துண்டாகப் போகிறவரையில் அத்துணியை துவைப்பதும் கிடையாது; உடலிலிருந்து கழற்றுவதும் கிடையாது. முஸ்லிம்களோ ஒவ்வொரு இடத்திலும் பொது ஸ்நான கட்டடங்களைக் கட்டி வைப்பதை பிரதம கடமையாகக் கொண்டார்கள். ஒவ்வொரு பட்டணத்திலும் நூற்றுக்கணக்கான ஸ்நான கட்டடங்களை கட்டிவைத்தார்கள். மேரி இராணியாரின் கணவரான பிலிப் என்பவர் அல் ஹாம்ரா என்னும் ஸ்நான கட்டடத்தை இடித்தெறிந்து விட்டார். ஸ்நானக் கட்டடம் இருப்பது தெய்வபக்தியற்ற செயலாகுமென்று அவர் கருதினர். முஸ்லிம்களைஸ்நானம் செய்யவேண்டாமென்பதாக 1526-ம் வருஷத்தில் சார்லஸ் மன்னர் கேட்டுக் கொண்டார். இவ்வாறு அசுத்தத்தை விரும்பி அனுஷ்டித்துவந்த ஐரோப்பியர்கள் நாளுக்கு ஐந்துநேரம் தொழுகைக்காக முஸ்லிம்கள் கை, முகம், கால் சுத்தம் செய்யும்படியும் உடை, இடம் முதலியவை சுத்தமாயிருக்க வேண்டுமென்றும் இஸ்லாம் மார்க்கக்கட்டளை போதிப்பதையும், மிக சுத்தமாயிருப்பவர்களிடம் பிரியம் வைப்பதாக குர்ஆனில் ஆண்டவன் கூறியிருப்பதையும் பின்பற்றி சகல விஷயத்திலும் சுத்தத்தை முக்கியமாகக் கருதி அனுஷ்டித்துவரும் முஸ்லிம்கள் அதனல் அடைந்து வந்த பயன்களை கண்டறிந்த பின்னரே பிற்காலத்தில் ஐரோப்பியர்கள் அவ்விஷயத்தில் முஸ்லிம்களைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தார்கள் என்பது வெளிப்படை.

ஐரோப்பாவிற்கு வியாபாரம் இன்னதென்பதைப் போதித்தது அரபியர்கள்தான். ஹஜ் யாத்திரையும், ஹிஜாஸ், ஷாம், எமன் முதலான நாடுகளின் செழிப்பும், செல்வமும், வியாபாரத்திற்குவேண்டிய ஊக்கத்தையும் உதவியையும் அரபியர்களுக்குக் கொடுத்தது. அரபியர்கள் இதரநாடுகளுக்குச் சென்று அங்கு குடியேறியபோது அவர்கள் வியாபாரத்தை ஸ்தாபித்து, ஏற்றுமதி இறக்குமதி என்பதை அந்நாட்டார்களுக்குக் கற்பித்தார்கள். கார்டோவா, திமிஷ்க் முத

விய நாடுகளில் தயாராகும் பட்டு வஸ்திரங்களும், பருத்தி வஸ்திரங்களும் ஐரோப்பாவிற்குக் கொண்டு வரப்பட்டு வியாபாரம் பரவச் செய்யப்பட்டது, கந்தைத்துணியிலிருந்து காகிதம் தயார் செய்யக் கூடுமென்பதை ஐரோப்பாவிற்கு போதித்தது முஸ்லிம்கள் தான். தோல் சாமான்கள் செய்யும் தொழிலையும் ஐரோப்பாவிற்கு முஸ்லிம்கள்தான் போதித்தார்கள். ஐரோப்பாவில் அரபியர்கள்தான் வியாபாரத்தை ஸ்தாபித்தார்களென்பதற்கு தக்க ஆதாரம் ஒன்று இருக்கின்றது. எடைகளில் சிறிய எடைக்கு இப்பொழுதும் ஐரோப்பாவில் வழங்கப்படும் வார்த்தை "காரெட்டு" என்பதாகும். "காரெட்டு" என்பது அரபி வார்த்தையாகும்.

பொழுது போக்கு.

50,000 பவுன் புன்னகை!

அமெரிக்காவின் பெயர்பெற்ற நாடகப்பெண்ணான மிஸ் மே மார்வே என்பவள் தன்னுடைய புன்னகையை 50,000 பவுனுக்கு இன்ஷியூர் செய்திருக்கிறாள். இதற்கு முன் பல நாடகமாதர் தம் கால்களையும் கண்களையும் இன்ஷியூர் செய்திருக்கிறார்களாயினும், இதுவரை ஒருவரும் புன்னகையை இன்ஷியூர் செய்ததில்லை. அடுத்த பத்து வருஷத்துக்குள் நோய், அபாயம் முதலிய எந்தக் காரணத்தினாலாவது அவளுடைய புன்னகையின் அழகும், இனிமையும் குறைந்தால் இன்ஷியூரன்ஸ் கம்பெனி மேற்படி தொகையைக் கொடுத்துவிடவேண்டுமென்பது நிப்ந்தனை!

* * * *

கம்பி யில்லாத தந்தியில் மின்சார சக்தி ஆகாய மார்க்கத்தில் செல்லுவதுபோல மனிதர் எதைப்பற்றியாவது எண்ணமிடும்பொழுது அந்நினைவுச் சக்தி அலைபோல மூளையிலிருந்து புறப்பட்டு ஆகாயத்தில் பறவுகிறது, அது செல்லுகிற தூரத்தில் அதற்கேற்ற பயிற்சி பெற்ற மூளையுள்ள ஒருவர் இருந்தால் அவர் அந்த நினைவை உணர்ந்து அறியமுடியும் என்று ஆசிரியர் கஸ்ஸாமலி என்ற இத்தாலிய சாஸ்திரி கூறுகிறார்.

"இஸ்லாம்"

வருஷ சந்தா விவரம்

இந்தியா, பர்மா, இலங்கை முதலிய உள்நாடுகளுக்கு

முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் சங்கங்களுக்கும் ரூ. 5—0—0

முஸ்லிம்களல்லாத நண்பர்களுக்கும் முஸ்லிம்களல்லாதார் சங்கங்களுக்கும் .... 4—0—0

மாணவர்களுக்கு (முஸ்லிம்களானுலுஞ் சரி, முஸ்லிம்களல்லாதாரானுலுஞ் சரி) .... 3—8—0

பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு

முஸ்லிம்களுக்கும் முஸ்லிம்கள் சங்கங்களுக்கும் 6—0—0

முஸ்லிம்கள்லாத நண்பர்களுக்கும் ,, 5—0—0

மாணவர்களுக்கு (முஸ்லிம்களானுலுஞ் சரி, முஸ்லிம்களல்லாதா ரானுலுஞ் சரி) ... 4—8—0

குறிப்பு—ஒரு வருடத்திற்குக் குறைந்து சந்தா பதிவுசெய்து கொள்ளப்படமாட்டாது. மாணவர்கள் தங்கள் தங்கள் உபாத்தியாயர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் வாங்கி யனுப்பவேண்டும். தனிப்பிரதி ஒன்றுக்கு தபால் சார்ஜ் உள்பட விலை ரூ. 0—9—0.

நிருப நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்

விஷயதானம் செய்ய விரும்பும் சகோதரர்கள் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மைபால் எழுதிபனுப்பவேண்டும். எந்த மாதத்தில் பிரசுரிக்கப் படவேண்டுமோ அதற்கு முந்தின மாதம் 25-ந் தேதிக்குள் வியாசங்கள் கிடைக்கும்படியாக அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு		ரூ. 12—0—0
அரை பக்கத்திற்கு	,,	,, 7—0—0
கால் பக்கத்திற்கு	,,	,, 4—0—0

நீண்டகாலம் விளம்பரம் செய்ய விரும்புவோர்களுக்கு கட்டணத்தில் சகாயஞ்செய்து கொடுக்கப்படும். அவர்கள் தயவு செய்து மானேஜருக்கு எழுதி விவரங்கள் அறியலாம்.

மானேஜர் "இஸ்லாம்" ஆபீஸ்,
225, அங்கப்ப நாய்க்கன் தெரு,
ஜார்ஜ் டவுன் - சென்னை.

இக்பாலின் இரத்தினங்கள்

ஸர் முஹம்மத் இக்பால் லாஹூர்

1. நீ வாழ்வது மனிதனுக்காக வாழவேண்டும். நீ இறப்பது அல்லாஹ்வுக்காக இறக்க வேண்டும்.

2. மனிதனுக்கு ஏற்படும் ஆவேசம் உலகத்தை ஆளுகிறதே யொழிய மனிதனுக்கு தோற்றும் எண்ணங்களல்ல.

3. சமூகங்கள் கவிஞர்களுடையவும், தீர்க்கதரிசிகளுடையவும் கையில் பிறக்கின்றன. ஆனல் சமூகங்கள் இராஜீய வாதிகளால் வளர்க்கப்பட்டு இராஜீயவாதிகளின் கையில் இறக்கின்றன.

4. அல்லாஹ்வின் சர்வபடைப்பும் மனிதனுக்காகவே யொழிய மனிதன் படைப்புக்காகவல்ல.

5. ஐரோப்பாவை ஆசியா பின்பற்றுமாயின் ஆசியாவின் கதி அதோ கதிதான். ஆசியா தனி உலகை சிருஷ்டித்துக்கொள்ளவேண்டும்.

6. அறிவு ஒரு விஷயத்தின் மேல்வரம்பைப் பற்றுகின்றது. அவ்விஷயத்தின் மீது வைக்கும் அன்பு அவ்விஷயத்திலுள்ள உண்மைகளை கிரகிக்கச் செய்கின்றது.

7. ரசாயன சாஸ்திரம், தத்துவசாஸ்திரம், கலைகள், மார்க்க விசாரணை முதலியவைகளெல்லாம் மனுஷ்யன் தன்னை அறிந்து கொள்ளுவதற்கு துணையாக நிற்கின்றன.

Printed by the Kesari Printing Works, and Published by M. A. Abul Khuda at 225, Angappa Naick Street, Madras.